
விலை ரூபா 20.00





www.onlineuthayan.com

பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27
கதிர் 46

வள்ளுவர் ஆண்டு 2042 | மார்கழி 26 புதன்கிழமை (11/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


# தென்னாபிரிக்காவின் மீது இலங்கை கடும் அதிருப்தி

## உலகத் தமிழர் பேரவையை அழைத்த காரணத்தால் தூதர் தலைமையிலான குழு நேரில் முறையீடு

கொழும்பு, ஜனவரி 11

தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவுக்கு உலகத் தமிழர் பேரவை அழைக்கப்பட்டமை தொடர்பில் தனது கடும் அதிருப்தியை இலங்கை அரசு தென்னாபிரிக்காவிடம் வெளிப்படுத்தியிருக்கிறது.

தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ள அங்கிருக்கும் இலங்கைத் தூதுவர் ஷெஹான் ரத்னவேல் தலைமையிலான குழு, உலகத் தமிழர் பேரவைக்கு தென்னாபிரிக்கா அளித்திருக்கும் முக்கியத்துவத்தைக் கடுமையாகச் சாடியிருக்கிறது.

இது தொடர்பில் நேற்று 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஷெஹான் ரத்னவேல் கூறியவை வருமாறு:-

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அழைப்பை வெறுமனே அந்தக் கட்சியின் அழைப்பாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை இறைமையுள்ள ஒரு நாடு. இதன்படி எங்களையும் அழைத்திருந்தார்கள். மறுபுறம் எமக்கு எதிராகச் செயற்படும் உலகத் தமிழர் பேரவையையும் அழைத்திருக்கிறார்கள்.

27

# விவேகானந்தர் சிலை உடைப்பு

### ஆரையம்பதியில் சம்பவம்; நேற்றுப் பதற்றம்



கொழும்பு, ஜன.11

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதிப் பிரதேச சபைப் பிரிவில் காத்தான்குடி - ஆரையம்பதி எல்லையில் நிறுவப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தரின் சிலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத கும்பலால் உடைக்கப்பட்டது.

சிலையின் தலை மற்றும் கை, கால் பகுதிகள் உடைக்கப்பட்டுள்ளன எனவும் இதனால் காத்தான்குடி - ஆரையம்பதி எல்லையில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மட்டக்களப்பு உதவிப் பொலிஸ்

27

# எங்கள் நிலத்தை நாங்களே ஆளும் காலம் விரைவில் வரும்

### தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு நிகழ்வில் மாவை

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழினம் இந்த மண்ணிலே விடுதலை பெற்று எங்களுடைய நிலத்தை நாங்களே ஆளும் காலம் விரைவில் வரும். அதுவரை இழப்புகளை நாங்கள் மறந்துபோகக் கூடாது. இழப்புகளை அத்திவாரமாகக் கொண்டு தமிழ் இனத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாக நாங்கள் திடசங்கற்பம் பூண வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிரிழந்தவர்களின் 38 ஆவது ஆண்டு நினைவுதினம் அவர்களின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

25

# கனேடிய எம்.பிக்கள் கிளிநொச்சி பயணம்

### அரச அதிபருடன் சந்திப்பு

கிளிநொச்சி, ஜன.11

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டு மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி சென்ற கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

27

# மாவீரர் மயானத்தில் நடப்பது என்ன?

முள்ளியவளை, ஜன.11

முல்லைத்தீவு, முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை இராணுவத்தினர் "பைக்கோ" மற்றும் கனரக வாகனங்களின் உதவியுடன் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

குறித்த பகுதியில் கனரக வாகனங்கள் மற்றும் 'பைக்கோ' வின் உதவியுடன் மண்ணை அகழ்ந்து வேறு பகுதிகளுக்கு ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்தத் துயிலும் இல்லத்தில் கட்டப்பட்டிருந்த கல்லறைகள் ஏற்கனவே அகற்றப்பட்ட நிலையில், இப்போது இராணுவத்தினர் மண்ணை அகழ்ந்து வேறு இடத்

27

# அரச பொங்கல் விழாவை புறக்கணித்தது கூட்டமைப்பு

### தீர்வை முன்வைக்காதமைக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜன.11

தேசிய பொங்கல் விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெறும் என ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் தேசபந்து சிவஸ்ரீ பாலரவிசங்கர குருக்கள் தெரிவித்தார். எனினும் இந்த நிகழ்வைப் புறக்கணிக்கப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்தது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்துமத முக்கியஸ்தர்கள் உட்பட பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம், இந்து கலாசார திணைக்களம் ஆகியன

25

# பண்ணைப் பகுதியையும் விட்டுவைக்காத படையினர்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்.நகரின் பண்ணைப் பகுதியில் சுகாதாரத்திணைக்களத்துக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலப்பரப்பை பாதுகாப்பு அமைச்சுக்குப் பாரப்படுத்துமாறு காணி அமைச்சினால் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்.நகரின் கரையோரப் பிரதேசமான பண்ணையில் சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான 2 ஏக்கர் காணியைப் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குமாறு கோரி யாழ். பிரதேச செயலகத்துக்கு ஏற்கனவே கடிதம்

27

# யார் தேசத் துரோகி? பொன்சோ கேள்வி

கொழும்பு, ஜன.11

யார் தேசத் துரோகி என்பதனை மக்கள் தீர்மானிப்பார்கள் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐந்தாம் வகுப்பு வரை கூட பாடசாலை செல்லாது, தேங்காய் திருடி, சிறுவர்களுக்கு போதைப் பொருள் விற்பனை செய்த தூள் சில்வாவிற்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

துரோகி ஜெனரலா அல்லது தூள் விற்பனை செய்யும் தூள் சில்வாவா என்பதனை மக்கள் தீர்மானிக்கட்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளனர். (ஙு)

# தேவையற்ற இடங்களிலுள்ள இராணுவம் வெளியேற்றமாம்

கொழும்பு, ஜன.11

வடக்கு, கிழக்கில் தேவையற்ற இடங்களில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றியுள்ளோம் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இலங்கையில் இராணுவ அடக்கு முறையின் கீழ் உள்ளதாகச் சர்வதேசம் குற்றஞ்சாட்டுகிறது. அது உண்மையற்றது. நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களது நலனிற்காகவும் இராணுவத்தினரை பயன்படுத்தத் தயாராகவே இருக்கிறோம். இறுதிப் போரில் பொதுமக்களைப் படையினர் கொல்லவே இல்லை என்பதை மீண்டும் நான் உறுதியாகக் கூறுகின்றேன். என்றும் அவர் தெரிவித்தார். (ஙு)

### யாழ்.நகரில் கிணற்றில் சடலம் மீட்பு

யாழ். மானிப்பாய் வைத்தீஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள தனியார் விடுதிக் கிணற்றிலிருந்து மானிப்பாயைச் சேர்ந்த வாகனச் சாரதியான ரவீந்திரன் (வயது - 30) என்பவரின் சடலம் சிதைவடைந்த நிலையில் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப நபர் வலிப்பு நோய்க்காக யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த 4 ஆம் திகதி அனுமதிக்கபட்ட மறுநாள் காணாமற் போயிருந்தார். கொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த சடலம் கிணற்றுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### ஐ.தே.கவின் புதிய இணையத்தளம்

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ செய்திகளை வெளியிடுவதற்கான இணையத்தளம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. www.srilankaxnews.com என்ற முகவரியை உடைய இந்த இணையத்தள அங்குரார்ப்பண வைபவத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

### 'ஹட்ரிக்' திருட்டை காட்டிக் கொடுத்த சைக்கிள்

சிறுப்பிட்டியில் உள்ள ஒரே வீட்டில் மூன்றாவது முறையாகத் திருடி- 'ஹட்ரிக்' சாதனை செய்ய முயன்ற ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் இரவல் வாங்கி வந்த சைக்கிளே இவரை அடையாளம் காண உதவியது. இவர் பல தொடர் திருட்டுக்களுடன் தொடர்புடையவர் என்றும் கூறப்படுகிறது.

### விஜய் ரீவிக்கு தடை?

இந்த வருடத்தோடு ஜனாதிபதி மஹிந்த அரசியலை விட்டு ஓடுவார் என்று ஆருடம் சொன்ன விஜய் ரீவியின் "நீயா நானா" என்ற பகுதி மீள் ஒளிபரப்புச் செய்யப்படும் போது குறித்த அலைவரிசை ஒளிபரப்பாகாமல் தடைவிதிக்குமாறு அரச மேலிடம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (விவரம் உள்ளே)

### தமிழக மீனவர்கள் விடுதலை

தமிழக மீனவர்கள் 4 பேர் நேற்று மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இதே போன்று நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றிலும் நான்கு தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பின்னர் கடற்படையினரால் இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் கையளிக்கப்பட்டனர். (விவரம் உள்ளே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு குறித்து அழுத்தம் தருவதற்கு இந்தியாவுக்கு முக்கிய கடப்பாடு

## பேராசிரியர் சுமனசிறி லியனகே தெரிவிப்பு



**டில்லிக்கு ஜனாதிபதியும் அமைச்சர்களும் வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசை வலியுறுத்தவேண்டிய கடப்பாடு தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவர் என்ற அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ளது. அந்நாடு அவ்வாறு செய்யுமானால், ஆமை வேகத்தில் நகரும் அரசியல் பயணம் சாதகமானதொரு திசையை நோக்கிப் பயணிக்கக்கூடும்.**

கொழும்பு, ஜன.11

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டப் பொதி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் டில்லிக்கு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தவேண்டிய கடப்பாடு தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவன் என்ற அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ளது. இந்தியா அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஆமை வேகத்தில் நகரும் அரசியல் தீர்வுப் பயணம் துரிதமடையக்கூடும்.

- இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பொருளாதார விவகாரங்களைக் கையாளும் சிரேஷ்ட பேராசிரியர்களுள் ஒருவரான சுமனசிறி லியனகே தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்விற்கு அரசுக்குள் இருக்கும் இனவாதிகள் சிலர் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அவர்களின் கருத்துக்கமைய அரசு செயற்படுமானால் தேசிய அரசியல் என்ற கோட்பாட்டை மீறி, அது இனவாத அரசியல் போக்கையே கடைப்பிடிக்கின்றது என்றே அர்த்தம் - என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

தீர்வுத்திட்ட விவகாரம், நாடாளுமன்றத் தெரிவுக் குழு, நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை ஆகியன தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

### தீர்வுத்திட்ட விவகாரம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும்பொருட்டு அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு நடைபெற்று வருகின்றது. இந்தப் பேச்சில் இரு தரப்புக்குமிடையில் ஓர் இணக்கப்பாடு எட்டப்படவேண்டும். அவ்வாறு எட்டப்படும் இணக்கப்பாட்டையே தெரிவுக்குழு பரிசீலிக்கவேண்டும். இதுவே யதார்த்தபூர்வமான அரசியலாகும்.

தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்கிடையில் இரட்டை நிலைப்பாடு இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் தீர்வு என்ற விடயம் சாத்தியப்படாது. புரிந்துணர்வு - இதயசுத்தி ஆகிய விடயங்கள் தீர்வுப்பேச்சில் முதன்மை வகிக்கும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வுப்பொதி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் இந்தியாவிற்கு உறுதிமொழிகளை வழங்கியுள்ளனர். 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவோம் என ஜனாதிபதியே கூறியுள்ளார்.

எனவே, டில்லிக்கு இவர்கள் வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசை வலியுறுத்தவேண்டிய கடப்பாடு தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவர் என்ற அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ளது. அந்நாடு அவ்வாறு செய்யுமானால், ஆமை வேகத்தில் நகரும் அரசியல் பயணம் சாதகமானதொரு திசையை நோக்கிப் பயணிக்கக்கூடும்.

அரசுக்குள் இருக்கும் இனவாதிகள் சிலர் அதிகாரப் பகிர்வை எதிர்க்கின்றனர். இவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரசு செயற்படுமானால் அது தேறிய அரசியல் என்ற கோட்பாட்டை மீறிச் செயற்படுகின்றது என்றே அர்த்தம்.

### நாடாளுமன்றத் தெரிவுக்குழு

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளமை சரியானதொரு முடிவாகும் என்பதையே அரசியல் பாடம் எமக்கு உணர்த்தும் உண்மை. எதிர்க்கட்சிகளின் முடிவை அரசியல் சாணக்கியம் என்றும் கூறலாம்.

அரசு இதுவரை எத்தனைக் குழுக்களை அமைத்து, எத்தனை அறிக்கைகளைப் பெற்றுள்ளது? அவற்றின் மூலம் கண்ட பயன்தான் என்ன? அரசின் கபடத்தனம் காரணமாகத்தான் எதிர்க்கட்சிகள் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளன. ஆய்வு ரீதியாகப் பார்க்கப் போனால் இது சரியானதொரு முடிவாகும்.

### நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை

நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில் அதிகாரப்பகிர்வு என்ற விடயமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே,அதிகாரப்பகிர்வை அரசு எதிர்க்குமானால், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை புறந்தள்ளிவிட்டது என்றே எண்ணத்தோன்றும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்திய பின்னரே அரசு ஏனைய குழுக்களைப் பற்றி சிந்திக்கவேண்டும். அரசு அவ்வாறு செய்யும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் உட்பட மக்களின் மனங்களையும் வென்றெடுக்கலாம் - என்றார் பேராசிரியர் சுமனசிறி லியனகே.

---

## நாடு திரும்பும் அகதிகள் வீழ்ச்சி

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தில் இருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது. ஐ.நாவின் அகதிகள் பேரவை இதனைத் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் ஐ.நா. உதவியுடன், ஆயிரத்து 728 அகதிகளும், 2010 இல் இரண்டாயிரத்து 54 அகதிகளும் நாடு திரும்பியிருந்தனர்.

## இலங்கையர் இந்தியாவில் கைது

இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். சுற்றுலா வீசாவில் பயணமான இவர், வீசா காலாவதியாகியும் 3 வருடங்கள் இந்தியாவில் தங்கியுள்ளார்.

இவரது கடவுச் சீட்டைப் பரிசீலித்த குடியேற்ற அதிகாரிகள் இவரை கைது செய்தனர். கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய எம்.அஹ்சன் மொகமத் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அஹ்சன் மொகமத் மத ஆய்வுகளில் ஈடுபடுவதற்காக உத்தரப் பிரதேசத்துக்கு மூன்று மாத சுற்றுலா வீசாவில் சென்றுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சென்னைக்குச் சென்றுள்ளார். விசா காலாவதியாகிய பின்னர் நீடிப்பு பெறாது இந்தியாவில் தொடர்ந்தும் தங்கியுள்ளார்.

## கிறீஸ் பூத வதந்தி இருவருக்கு அபராதம்

கொழும்பு, ஜன.11

கிறீஸ்பூதம் உலாவுவதாக கடந்த ஒகஸ்ட் மாதத்தில் வதந்தியைப் பரப்பிய இருவருக்கு ஊர்காவற்துறை நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கிறீஸ்பூத பீதியில் குடாநாடு உறைந்திருந்த காலப் பகுதியில் ஊர்காவற்றுறையிலும் கிறீஸ் பூதம் வந்துவிட்டதாக தவறான தகவலை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இருவர் மக்களிடையே பரப்பினர். இவர்களை கடந்த ஒகஸ்ட் மாதமே பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். அதன் போது அவர்களை விசாரணை செய்த பின்னர் பிணையில் விடுவித்த நீதிமன்றம், இது குறித்து மேலதிக விசாரணை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் விசாரணைகளை பூர்த்தி செய்த பின் குறித்த நபர்கள் மீதான குற்றப்பத்திரம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்டது. இதன் போது சந்தேக நபர்கள் ஒப்புக்கொண்டனர். நீதவான் ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜாஅவர்கள் இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

(ந-4)

---

## புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 450 குடும்பங்களுக்கு வீடு

### இந்திய அரசின் உதவியுடன்

புதுக்குடியிருப்பு, ஜன.11

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான பயனாளிகள் ஜனாதிபதியின் செயலணிக் குழுவின் அறிவுறுத்தலுக்கமையத் தெரிவு செய்யப்படவிருப்பதாகப் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

உறுதியளித்த 50,000 வீட்டுத் திட்டச் செயற்றிட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்படும் ஒரு தொகுதியினருக்கு இந்த வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி செயலணிக் குழுவின் அறிவுத்தலுக்கமைய ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 30 பயனாளிகள் வீதம் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த வீட்டுத் திட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட இரு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப் படவுள்ளனன.

தற்காலிக வீடுகளில் வசிப்பவர்களும் சமூக சேவைப் பகுதியினரால் உதவி பெறும் ஊனமுற்றவர்களும் இந்த வீட்டுத் திட்டத்தின் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 3000 வீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (த-10-115)



*அண்மையில் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்ட முதிரை மரக் குற்றிகளைத் தேங்காய்களுக்குள் மறைத்து எடுத்து வந்த வாகனத்தின் அருகில் ஒட்டுசுட்டான் பொறுப்பதிகாரி பண்டாரவும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். (500)*

---

## தெரிவுக்குழுவுக்கு வந்தால்தான் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை

கொழும்பு,ஜன.11

இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட மாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்திவரும் அரச குழுவின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே பலமுறை இவ்வாறான கருத்தை அரச தரப்பினர் வெளியிட்ட போதும் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சில் அரசு தொடர்ந்தது.

எனினும், அரசப் பிரதிநிதிகள் புறக்கணித்த, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒன்று கூடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்றுள்ள நிலையிலும், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா இ[illegible] யி[illegible] அரசின் இந்த அறிவிப்பு முக்கியமானதாக கருதப்படுகிறது. (-ச)

## பெறுபேற்றில் குளறுபடி; திணைக்களமே பொறுப்பு

கொழும்பு,ஜன.11

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு குளறுபடிகளுக்கு பரீட்சை திணைக்களமே பொறுப்புசொல்ல வேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பரீட்சை பெறுபேறு குளறுபடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளது.

பரீட்சைத் திணைக்கள நிர்வாக சிக்கல்களினால் இந்த குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய மற்றும் பழைய பாடத்திட்ட மாவட்ட நிலைகள் ஒரே விதமாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக மாவட்ட நிலைகளில் குழப்ப நிலைமை ஏற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளில் பிரச்சினை இல்லை என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசாரணை தொடர்பான விரிவான இரண்டு அறிக்கைகள் ஜனாதிபதியிடம் இன்று புதன்கிழமை ஒப்படைக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

பரீட்சை திணைக்களத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணைகளை தொழில்நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சின் செயலாளர் தாரா விஜேரத்ன தலைமையிலான ஆணைக்குழு நடத்தியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் அரசின் முயற்சி

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிட்டு, தன் மீதான மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்களைத் தடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணியிருந்த இலங்கை அரசு -

எதிர்வரும் மார்ச் மாதத்தில், ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் தனது விவகாரம் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்கான முயற்சிகளை இப்போதே, நேரகாலத்துடன் ஆரம்பித்து விட்டது.

அதன் ஓர் அங்கமாக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை அவசர அவசரமாகத் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது அரசு.

இத்தனைக்கும் அங்கு நடைபெற்ற ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு விடுவிக்கப்பட்ட அழைப்பைக் கொழும்பு அரசு நிராகரித்திருந்தது. குறிப்பிட்ட நூற்றாண்டு விழாவில் பங்குபற்றுமாறு உலகத் தமிழர் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டமையை ஆட்சேபித்தே அரசு தனது முதல் முடிவை மேற்கொண்டிருந்தது என்று தகவல்கள் வெளிவந்திருந்தன.

ஆனால், தென்னாபிரிக்கத் தலைநகர் டர்பனில் நடைபெற்ற ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் மாநாட்டில், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு இலங்கைத் தமிழர்களின் நிலையை விரிவாக விளக்கி இருந்தனர்.

அதன் விளைவாக இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்க ஆபிரிக்க நாடுகளும் ஆதரவு தரும் போக்கு உதித்துள்ளது. இந்த நிலை அல்லது மாற்றம் ஜெனிவாவில் நடைபெற உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாட்டில், இலங்கை அரசு நினைத்தது போலன்றி அதன் பக்கத்தின் "பலத்தை"க் குறைத்து விடும் என்ற அச்சம் அரசுக்கு உள்ளூரத் தோன்றி உள்ளது எனலாம்.

அதன் விளைவாகவே, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் தென்னாபிரிக்காவுக்கான திடீர் விஜயம். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில், இலங்கைக்கு எதிராக போர்க் குற்றப் பிரேரணை ஒன்று வரும் தறுவாயில், ஆபிரிக்கக் குழும நாடுகள் ஆதரிக்கும் பட்சத்தில் தனது நிலைமை ஆபத்தாகி விடலாம் என்பதால், மத்திய கிழக்கு நாடுகளின் ஆதரவைத் தேடுவதும் அமைச்சர் பீரிஸின் தென்னாபிரிக்க விஜயத்தின் பிரதான நோக்கம் என்று அறியப்படுகிறது.

அது மட்டுமன்றி, மத்திய கிழக்கு நாடுகளில் அண்மைக் காலத்தில் உண்டாகி வரும் ஆட்சி மாற்றங்கள் காரணமாக, உலகளாவிய முஸ்லிம் நாடுகளும் மேற்கு நாடுகளை அனுசரித்துப் போகும், போக வேண்டிய புறச் சூழ்நிலை ஒன்று தோன்றி வருகிறது.

அதன் விளைவாக, இலங்கைக்கான ஆதரவுப் பலம் தேய்ந்து போகலாம் என்று அரசு அனுமானிப்பதாக அரசல் புரசலாகப் பேச்சடிபடுகிறது. அத்தகைய நிலை தோன்றாமல், வருமுன் காக்கும் பணியைச் செய்வதற்காகவே அமைச்சர் பீரிஸ் தென்னாபிரிக்காவுக்கு விரைந்துள்ளார் என்று கொள்வதில் தப்பில்லை.

மேலும், அனைத்துலக மட்டத்தில் அண்மைக் காலமாக இலங்கைக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளில் நெருக்கம் தேய்ந்து கொண்டு போவதை அவதானிக்க முடிகிறது. அதன் காரணமாக, அவற்றைப் புறந்தள்ளி ஏனைய பிராந்தியக் குழுமங்களுடன் அணி சேர்வது என்ற எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தும் போக்கும் இன்னொரு புறத்தே தெரிகிறது.

இத்தகைய பின்னணியில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவுக்குக் கூடியுள்ள ஆபிரிக்க நாடுகளையும் முஸ்லிம் நாடுகளையும் தனது பக்கம் திரும்புவதற்கு அதீத முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது என்பதனையே, அமைச்சர் பீரிஸின் பிந்திய விஜயம் - வெளிவிவகார அமைச்சின் பிந்திய வியூகம் - வெளிப்படுத்துகிறது.

அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் - பிரதிபலன்கள் - எவ்வாறாகும் என்பதனை எவராலும் இப்போது ஆருடம் கூறமுடியாது.

சர்வதேச அரங்குகளில் தனக்குச் சார்பான அல்லது தனக்குரிய நோக்கில் ஏனைய நாடுகள் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்த்துச் செயற்படுவதை அண்மைக்காலமாக இலங்கை தனது வெளிநாட்டு ராஜதந்திரமாகக் கைக்கொண்டு வருகிறது.

கடந்த நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில், இலங்கை விவகாரத்தை விவாதிக்க வேண்டும் என்ற கனடாவின் கோரிக்கையை ஏனைய நாடுகள் நிராகரித்தபோது அது இலங்கைக்குக் கிடைத்த பெரு வெற்றி என்று புள்ளிகள் போட்டுக் காட்டி, புளகாங்கிதம் அடைந்தவர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

தென்னாபிரிக்கத் தலைநகருக்கான அவரின் இறுதி நேர விஜயம் அதே நோக்குடையதாக அமைந்துள்ளது. எனினும், வெளிவிவகார உறவுகளில் அணி சேர்வதில் தோற்றுவிக்கப்படும் அதிரடி மாற்றங்கள், உலக அரசியல் போக்குகளைத் தனக்குச் சாதகமாக மாற்றக் கூடிய செழுமையும், செறிவும், செல்வாக்கும் நிறைந்த உலக ஒழுங்கில் சேரும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா என்ன? வெளிநாட்டு உறவுகளைப் பேணுதல் என்பது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் முயற்சி என்பதை அரச பிரதானிகள் எப்போது உணரப்போகின்றனர்?

## பிளாஸ்ரிக் கூடைச்சட்டம் வந்தால் 15க்குப் பின்னர் மரக்கறிகள் இல்லை

மரக்கறிகள் எடுத்துச் செல்லப்படும் போது பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்துவதால் உருவாகும் பிரச்சினைகள் பற்றி அரசுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை அது தொடர்பில் எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

எனவே, புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் மரக்கறி விநியோகம் 15 ஆம் திகதி முதல் முற்றாக இடைநிறுத்தப்படுமென விவசாயிகள் சங்கங்கள் அரசுக்கு அபாய அறிவிப்பை விடுத்துள்ளன.

மரக்கறி வகைகளை எடுத்துச் செல்லும்போது அவற்றில் 40 வீதமானவை வீணாவதாகப் பெரும் பொய்யை அவிழ்த்துவிட்டுள்ள அரசு பிளாஸ்ரிக் பொருள் உற்பத்தியாளர்கள் சிலரின் மனங்களை மகிழ்விப்பதற்காக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எத்தனிக்கிறது என விவசாயிகள் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

110 ரூபா செலவாகும் 60 கிலோ மரக்கறியை எடுத்துச்செல்ல பிளாஸ்ரிக் கூடை முறையின் கீழ் 480 ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலவாகுமெனவும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் லால் ஹெட்டிகே தெரிவித்துள்ளார். இதற்கமைய, நான்கு தடவைகள் பிற்போடப்பட்ட இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது, விவசாயிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நுவரெலியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு எதிராகவும் புகார்

கொழும்பு, ஜன.11

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரொருவருக்கு எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக இடம்பெற்று வரும் விசாரணையின் அடிப்படை அறிக்கையும் மேற்படி ஆணைக்குழுவினால் பெறப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் வேறு சேவையொன்றில் அவர் கடமையாற்றிய வேளையிலேயே அவருக்கு எதிராக இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பான விசாரணையும் தற்போது லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக அவரிடமிருந்து வாக்குமூலமொன்று பெறப்படவுள்ளதாகவும், லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவானது மூன்று ஆணையாளர்களைக் கொண்டதாகும். இவர்களில் இருவர் உயர்நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகளாவர் ஏனைய ஆணையாளர் குற்ற விசாரணைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவராவார். (த-22)

## 1500 சிறைக் கைதிகளுக்கு அபராதத்தை அரசு செலுத்தும்

கொழும்பு, ஜன.11

சிறு குற்றச்செயல்களுக்காக அபராதங்கள் விதிக்கப்பட்டு அந்த அபராதத் தொகைகளைச் செலுத்த முடியாமல் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் 1500 கைதிகளை அரச செலவில் விடுவிப்பதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பின்னர் இவர்கள் சமூக நலன் சார்ந்த சேவைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும், இவர்களுக்காக 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த 1500 கைதிகளும் ஓராண்டுக்குக் குறைவான தண்டனைக் காலங்களை அனுபவித்து வருபவர்களாவர். சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலுக்கு இந்தச் சிறைக் கைதிகள் பிரதான காரணிகளாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

500 ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ள இந்த சிறைக்கைதியொருவருக்கு பராமரிப்புச் செலவாக அரசு நாளொன்றுக்கு செலவிடும் தொகை 320 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-22)

## இம்முறை ஓய்வூதியத்துடன் அதிகரிக்கப்பட்ட 1000 ரூபா

கொழும்பு, ஜன.11

வரவு-செலவுத் திட்ட யோசனை மூலம் இந்த ஆண்டிலிருந்து ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 1000 ரூபா, 500 ரூபா கொடுப்பனவுகளின் அரைப் பங்கு நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் ஓய்வூதியம் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலக்கரத்ன தெரிவித்தார்.

மேலும், ஓய்வூதியச் சம்பளங்களின் முரண்பாட்டை நீக்குவதற்கு வழங்கப்பட்டுள்ள இக் கொடுப்பனவின் எஞ்சிய தொகை எதிர்வரும் ஜூலை 10 திகதி வழங்கப்படவுள்ள ஓய்வூதியச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகரிக்கப்பட்ட 1000 ரூபா கொடுப்பனவு, 2004 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள 2இலட்சத்து 75 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கும் 500 ரூபா கொடுப்பனவு 2004 ஜனவரி முதலாம் திகதி முதல் 2005 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் ஓய்வுபெற்றுள்ள ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படுகிறது. (த-22)

## கந்தளாய் சீனித் தொழிற்சாலை பிரிட்டன் நிறுவனத்துக்கு குத்தகை

கொழும்பு, ஜன.11

30 ஆண்டு காலக்குத்தகை அடிப்படையில் 62 கோடி 50 லட்சம் ரூபாவைப் பெற்று பிரிட்டன் நிறுவனமொன்றுக்கு கந்தளாய் சீனித் தொழிற்சாலை கையளிக்கப்படவுள்ளது.

பிரிட்டனின் வேர்ஜீனியா தீவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றான 'பென்பீல்ட்' குழுமத்துக்கே கந்தளாய் சீனித்தொழிற்சாலை அபிவிருத்தி கருதி, அதனைக் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதில் பெறப்படும் பணத்தொகை மேற்படித் தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு நட்ட ஈடுகளை வழங்கவும், தொழிற்சாலை தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் தீர்த்து வைப்பதற்கும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

கந்தளாய் சீனித்தொழிற்சாலையின் அபிவிருத்தி தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைய அமைச்சரவையின் தெரிவுக்குழு மூலமாக இந்த பிரிட்டன் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாகக் கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குச் சொந்தமான 4 ஆயிரத்து 47 ஹெக்ரேயர் நிலப்பரப்பும் பிரிட்டன் பென்பீல்ட் குழுமத்துக்கு 30 ஆண்டுகால குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. (த-22)

## 'லங்கா மஹாபொல' கப்பல் விற்பனைக்கு

30 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த 'லங்கா மஹாபொல' கப்பலை விற்பனை செய்வதற்குத் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் கப்பலை விற்பனை செய்வதன்மூலம் 22 கோடி 40 இலட்சம் ரூபாவைப் பெறமுடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கப்பலை விற்பனை செய்ய முடியாது போனால் அதனைப் பழைய இரும்புக்கு விற்பதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மீளப் பயன்படுத்த இயலாத நிலைக்கு இந்தக் கப்பல் தள்ளப்பட்டுள்ளதுடன், அதைத் திருத்தியமைப்பதற்கு 6 கோடி ரூபா வரை தேவைப்படுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து கப்பலை விற்பனைசெய்வது அல்லது பழைய இரும்புக்கு வழங்குவதே பொருத்தமானதென அமைச்சு கருதுகிறது. (த-22)

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் அமரர் பண்டிதர் நா.இராசையாவின் நினைவஞ்சலிக் கூட்டம் மாலை 5 மணிக்கு இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் இணுவில் கிளையின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றுவார். (த-17)

**செயலமர்வு**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2014ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்துக்கு அனுமதிபெறும் மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு காலை 8 மணிக்கு கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

2011 இல் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (த-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒசாமா தங்கியிருந்த வீட்டை தகர்ப்பதற்கு பாக். அரசு முடிவு

இஸ்லாமாபாத், ஜன.11

அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் இறுதியாக ஒளிந்திருந்த பாகிஸ்தானில் உள்ள வீட்டை குண்டு வைத்துத் தகர்த்து தரை மட்டமாக்கப்போவதாக பாகிஸ்தான் அரசு நேற்று அறிவித்தது.



இது குறித்து அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவிக்கையில்-

சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடன் தங்கியிருந்த அபோதாபாத் நகரில் உள்ள வீட்டை தகர்க்கவுள்ளோம். ஏனெனில் அந்த வீடு ஒஸாமா பின்லேடனை பின்பற்றுவோரின் நினைவுச் சின்னமாகவோ, ஆராதனைக்குரிய இடமாகவோ மாறிவிடக் கூடும். அதற்கு பாகிஸ்தான் அரசு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எனவே தான் அந்த வீட்டை குண்டு வைத்து தகர்த்து தரைமட்டமாக்க முடிவு செய்துள்ளோம். மிகப் பிரமாண்டமான முறையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு தொலைக் காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பும் செய்யப்படும். இதன்போது அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்பர். குறித்த வீடு மாத்திரம் அல்லாது ஒஸாமா பின்லேடனை ஞாபகப்படுத்துகின்ற எந்தவொரு ஞாபகச் சின்னமும் பாகிஸ்தானில் இருக்க இடமளியோம். அவ்வாறிருந்தால் அவற்றையும் தேடியழிப்போம்.- என்றார்.

# வியாபாரத்தில் ஈடுபடும் வவுனியா சிறுவர்கள்

வவுனியா, ஜன.11

வவுனியா நகர வீதிகளில் சிறுவர்கள் பலர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

பாடசாலைக்குச் செல்லும் வயதிலுள்ள சிறுவர்களே ஊதுபத்தி, கற்பூரம் மற்றும் வாசனைத் திரவியங்கள் ஆகிய பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

அநேகமாகப் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட வயதினைக் கொண்ட இந்தச் சிறுவர்கள் தமது குடும்ப நிலை காரணமாகவே இத்தகைய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

அநேகமான சிறுவர்கள் இறுதி யுத்தத்தின்போது தமது பெற்றோர்களை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தமது உடன் பிறந்தவர்களின் உணவுத் தேவைக்காகவும், அவர்களின் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். மிகவும் வறிய நிலையிலுள்ள இந்தச் சிறுவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது.

**அநேகமாக 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட வயதினைக் கொண்ட இந்தச் சிறுவர்கள் இறுதிப் போரின்போது தமது பெற்றோர்களை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.**

இவர்களுக்குக் கைகொடுத்துத் தூக்கி விட வேண்டியது இன்றைய சமுதாயத்தின் முக்கிய கடமையெனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.. (க-421)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விநிலை குறித்து மாநாடு

யாழ்ப்பாணம், ஜன.11

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் அந்த மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் தேவைகள், ஆளணிப்பற்றாக்குறை என்பன தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாட்ட அரச அதிபர் என். வேதநாயகன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் என்பவற்றின் முக்கிய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே இந்தக் கலந்துரையாடலுக்கு முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஏனைய முக்கிய அதிகாரிகள் உட்பட சகல பாடசாலைகளினதும் அதிபர்களையும் பாடசாலைகளுக்கான தேவைகள் தொடர்பான அறிக்கையுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (த-4)

## பெருமளவில் சிக்கின பாரை மீன்கள்



மன்னாரில் தற்போது பாரை மீன்கள் அதிகளவில் பிடிக்கப்படுகின்றன.

சமீப நாள்களாக நிலவிய கால நிலை காரணமாக மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. பின்னர் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டனர். தற்போது வழமை போன்று தொழிலுக்குச் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார்க் கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் வலைகளில் பெருமளவு பாரை மீன்கள் சிக்கிக் கொண்டன.

இந்த மீன்கள் ஒவ்வொன்றும் இரண்டு தொடக்கம் ஐந்து கிலோ எடைகொண்டதாக உள்ளன. ஒரு கிலோ பாரை மீன் கிலோ ஒன்று 300 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டது. (க-601)

# பாடசாலையில் பாம்பு

அக்கராயன், ஜன.11

அக்கராயனில் ஆறு அடி நீளமான பாம்பொன்று உயிருடன் பிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அக்கராயன் மகாவித்தியாலயச் சூழலில் துப்புரவுப் பணிகள் நடைபெற்ற போதே வெங்கணாந்தி இனத்தைச் சேர்ந்த இந்தப் பாம்பு பிடிபட்டது.

**துப்புரவுப் பணிகள் நடைபெற்ற போதே வெங்கணாந்திப் பாம்பு பிடிபட்டது.**

பின்னர் பாடசாலையின் அறையொன்றினுள் அன்று இரவு அதனைவிட்டு வைத்தனர். ஆனால் நேற்றுக்காலை பாடசாலையின் பிரதான மண்டபக் கூரையில் இது இருக்கக் காணப்பட்டது. அறையிலிருந்து எவ்வாறோ தப்பிய இந்தப் பாம்பு கூரை மீது ஏறி விட்டது. நேற்றுக் காலை கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் மீண்டும் இந்தப் பாம்பு உயிருடன் பிடிபட்டது. (க-410)

# சர்வதேசக் கடல் எல்லையில் தமிழக மீனவர் ஒப்படைப்பு

ராமேஸ்வரம், ஜன.11

இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்து செல்லப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்களின் படகுகள் திசைமாறி நெடுந்தீவில் கரை ஒதுங்கியன.

இதனால் இலங்கைக் கடற் படையினர், படகையும், மீனவர்களையும் பிடித்துச் சென்று, யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணையின்போது மீனவர் களையும், படகையும் விடுவித்து, இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்க, நீதிபதி உத்தரவிட்டார். இந்திய தூதரகத்தில் தங்கியிருந்த மீனவர்களை, இலங்கை கடற்படையினர், சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோரக் காவல்படையிடம் ஒப்படைத்தனர்.

# வன்னியில் சமுர்த்தி வங்கிகள்

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சமுர்த்தி வங்கிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வங்கிகளை அமைப்பதற்காக சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நடேசராஜா, யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ். சிவஸ்ரீ , மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் ஆ.ரகுநாதன் , பிரதம சமுர்த்திக் காரியாலய உத்தியோகத்தர் எஸ். மாதவன் ஆகியோரை உள்ளடக்கிய ஆரம்பக் குழு செயற்பட்டு வருகின்றது. தற்போது சமுர்த்தி வங்கிகளை அமைப்பது தொடர்பான ஆரம்பக் கட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.வெகுவிரைவில் இந்த வங்கிகளுக்கான உத்தியோகத்தர்கள் நியமன ஒழுங்கு முறைகளுக்கேற்ப தெரிவு செய்யப்படவுள்ளனர். (ங-319)

# 'மஹிந்த பதவி விலகுவார்'– எதிர்வு கூறிய இந்தியத் தொலைக்காட்சிக்குத் தடை?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வருடத்தில் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறும் நிலை ஏற்படும் என்று சோதிடக் கணிப்பை வெளியிட்ட இந்தியாவில் இருந்து ஒளிபரப்பாகும்தமிழ்த் தொலைக் காட்சி ஒன்றின் ஒளிபரப்பை இலங்கை அரசு தடை செய்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி இரவு 2012 ஆம் ஆண்டில் இந்திய அரசியல்வாதிகளின் நிலை தொடர்பாக எதிர்வு கூறும் சோதிடக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை விஜய் தொலைக் காட்சி ஒளிபரப்பியிருந்தது.

தமிழ்நாட்டில் பிரபலமான ஆறு சோதிடர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அவர்கள் இந்தியாவின் அயலில் உள்ள ஆறு நாடுகளின் நிலைமைகள் குறித்தும் தமது எதிர்வு கூறல் களை வெளியிட்டனர்.

குறிப்பாக இலங்கை குறித்து கருத்து வெளியிட்ட ஒரு சோதிடர், மஹிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது பதவியை விட்டு - அரசி யலை விட்டு வெளியேறும்நிலைஏற்படும் என்று குறிப்பிட் டார்.

அவரது இந்தக் கருத்தை நிகழ்வில் பங்கேற்ற ஆறு சோதிடர்களும் ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி இலங்கையிலும் டயலொக் இணைப்பு மூலம் ஒளிபரப்பாகியிருந்தது.

இதுகுறித்துக் கேள்வியுற்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் அனுச பல்பிட்டவை அழைத்து, கண்டித்துள்ளார். மீண்டும் இந்த நிகழ்ச்சி மறு ஒளிபரப்பாவதைத் தடுக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து குறிபிட்ட நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரத்தில் இலங்கையில் அந்த தொலைக்காட்சி அலை வரிசையின் இணைப்பைத் தடைசெய்ய நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக ஆங் கில ஊடகம் தகவல் வெளி யிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழு யாழ்ப்பாணத்தில் செய்மதித்தொலைக்காட்சி இணைப்புகளை வீடுகளுக்கு வழங்கி வந்த 40 பேர் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

அனுமதி பெறாமல் வீடுகளுக்கு செய்மதித் தொலைக் காட்சி இணைப்புகளை வழங்கி வந்ததாக இவர்கள் மீது குற்றத்தடுப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த இணைப்புகள் மூலம் தென்னிந்தியாவில் இருந்து விடுதலைப் புலிகள் சார்பு கருத்துகள், நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதாக இலங்கை ராணுவப் புலனாய்வுத்துறை கொடுத்த தகவலை அடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பிரபாகரனின் தகவல் அடங்கிய புத்தகங்கள் அமோக விற்பனை

சென்னை புத்தகக் கண்காட்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தகவல் அடங்கிய புத்தகங்கள் அதிகமாக விற்பனையாவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




சென்னை புத்தகக் கண்காட்சியில் முன் எப்போதும் இல்லாதவகையில் இப்போது விறுவிறு என்று விற்பனையாகும் பிரபாகரன் குறித்த புத்தகங்கள், படங்கள் மற்றும் நாள் காட்டிகள் என்பன வாசகர்களால் அதிகமாக வாங்கப்படுகின்றன.

இது குறித்து கடை உரிமையாளரிடம் கூறியதாவது:

'மாவீரர்' என்னும் புத்தகம் இந்த முறை வெளியிடப்பட்டது.

இதில் இருப்பது தேசிய தலைவர் பிரபாகரன் இதுவரை ஆற்றிய உரைகள், மற்றும் நேர்காணல்களின் ஒரு முழுமையான தொகுப்பு. இதுவரை இப்படி ஒரு முழு தொகுப்பு வந்ததில்லை. அதுமட்டுமில்லாமல் , இந்த வருடம் அதிகமானோர் குறிப்பாக இளைஞர்கள் பிரபாகரன் , ஈழம் தொடர்புடைய புத்தகங்கள் வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள் - என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 11

1974ஆம் ஆண்டு இடம் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து, யாழ். வீரசிங்கம் மண்டபம் முன்பாகவுள்ள நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ஏற்பாட்டில்இந்தஅஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.



உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்த உறவுகளை நினைந்து மக்கள் நிகழ்வில் உணர்வுடன் கலந்துகொண்டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவுத் தூபிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.சிறீதரன் மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள், மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அஞ்சலி செலுத்தும் நிகழ்வைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (த-15-17)

# பாடசாலைகளுக்கான உதவி முறையான பதிவுகளுடன்

யாழ்ப்பாணம், ஜன. 11

கல்வி அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை நலன் விரும்பிகள், மற்றும் பொது அமைப்புகள் என்பன பாடசாலைகளுக்கு வழங்கும் பொருளுதவிகள், நிதியுதவிகள் யாவும் முறையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டே வழங்கப்படுகின்றன என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியதாவது:-

இந்த உதவிகள் யாவும் பொருள் கணக்கெடுப்பிற்கு உள்ளடக்கப்படவேண்டி இருப்பதுடன், பாடசாலை நிர்வாக மாற்றம் நிகழும் போது புதிய நிர்வாகத்திடம் முறையாகக் கையளிக்கும் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் மூலமாக கூடுதலான நிதியுதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. வேறுசில பாடசாலைகள் குறிப்பாகக் கஸ்டப்பிரதேசப் பாடசாலைகள் பெரும்வளப்பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. மத்திய, மாகாண கல்வி அமைச்சுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பொருளுதவிகள் நிதியுதவிகள் தேவைகேற்றவாறு பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கவேண்டிய கடப்பாடு மாகாணக் கல்வி அமைச்சுக்கு உள்ளது.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே பாடசாலைகளுக்கான இவ்வாறான உதவிகள் யாவற்றையும் உரிய முறையில் பதிவு செய்ய வேண்டியுள்ளது - என்றார் அவர். (த-4)

## யாழ்ப்பாணத்துக்கு புதிய கீதம்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். மாவட்டத்துக்கான கீதம் இயற்றப்படவுள்ளதால், அதற்கான ஆக்கங்கள் உள்ளூர் கலைஞர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கான கவிதைகள் எழுதுவோர், 'நல்லாட்சியே நமது நோக்கு' என்னும் கருத்தினை உள்ளடக்கியதாகவும் யாழ். மாவட்டத்தின் கடல் வளம், விவசாயம் மற்றும் கல்வி, சமயம், கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை உள்ளடக்கியதாகவும் 15 முதல் 20 வரிகளுக்கு உட்பட்டதாக யாப்பிலக்கண விதிக்கு அமைவாக அதனை எழுத வேண்டும்.

கவிதைகளினை, அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இந்த மாதம் 30 ஆம்திகதிக்குமுன்னர்அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (த-15)

# ஆளும் கட்சியின் தலையீடுகளால் மீனவர் சங்கங்களுக்கு நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜன. 11

ஆளும் கட்சியின் முறையற்ற தலையீடுகள் காரணமாக யாழ். மாவட்டத்திலுள்ள கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் அனுபவமுள்ள மூத்த உறுப்பினர்கள் பலர் பொறுப்புகளிலிருந்து விலகவேண்டியேற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த வட பகுதியிலுள்ள அமைச்சர் மூலமே இவர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகள் கொடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

சங்கங்கள், சமாசங்களின் மூத்த உறுப்பினர்களை அவர்கள் வகிக்கும் பொறுப்புகளிலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தவர்கள் எனக்கூறி மூத்த உறுப்பினர்களை அவர்களின் பொறுப்புகளிலிருந்து விலகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வலிகாமம் வடக்கு ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களைச் சேர்ந்தவர்கள் பலர் தற்போது பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்ட நிலையில் மனமுடைந்து பொறுப்புகளிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளனர்.

சங்கம் மற்றும் சமாச நிர்வாகத் தெரிவை உரிய முறையில் மேற்கொள்ள விடாது தடுப்பதன்மூலம்

**ஆளும் கட்சியைச் சேர்ந்த வட பகுதியிலுள்ள அமைச்சர் மூலமே இவர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகள்**

அவற்றை வலுவிழக்க செய்யும் முயற்சிகள் ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைச்சினால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு சங்கங்களைச் செயலிழக்கச் செய்வதன் மூலம் தென்னிந்திய, தென்னிலங்கை மீனவர்கள் வட பகுதிக்கு வந்து தொழில் செய்யக் கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது. (த-14)

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியா நுளம்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 11

மூன்று வருடங்களின் பின்னர் மீண்டும் யாழ். மாவட்டத்தில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் பல பாகங்களிலும் இனங்காணப்பட்டுள்ளன.

இங்கு மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளிலிருந்தே இது கண்டறியப்பட்டதோடு மலேரியா நோய் மீண்டும் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எச்சரித்துள்ளது.

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோர், இந்தியாவுக்குச் சென்று வருபவர்கள், ஆபிரிக்க நாடுகளில் வேலை செய்து விடுமுறையில் வருபவர்கள் ஆகியோரில் தற்போது மலேரியா, மூளை மலேரியா போன்ற நோய்த் தாக்கங்கள் இனங்காணப்பட்டுவருகின்றன. விடுதல், விழிப்புணர்வூட்டல்செயற்பாடுகளைச் சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

எனவே இந்தியா, ஆபிரிக்க நாடுகள் என்பவற்றுக்கு சென்று திரும்பியோர், மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்யுமாறு சுகாதாரத் திணைக்களம் கோரியுள்ளது.

மலேரியா நோயுள்ள நாடுகளுக்குச் சென்றுவர உள்ளவர்கள் மலேரியா நோய் ஏற்படாமல் பாதுகாப்பதற்கான முற்காப்பு சிகிச்சையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் அல்லது சுகாதாரத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு சிகிச்சை பெறாது சென்றுவந்தவர்கள் நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்டால் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## தார்க் கலவை முடிவடைந்தது

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். குடாநாட்டில் வீதிகளில் ஏற்பட்டிருக்கும் சேதங்களை சீர் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட தார்க் கலவை முடிவடைந்துவிட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தார்க்கலவை கொழும்பில் இருந்து எடுத்துவரப்படாமையால் வீதிகளில் ஏற்பட்டிருக்கும் சேதங்களைப் புனரமைக்கும் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழையினால் பெரும்பாலான வீதிகளில் சேதங்கள் ஏற்பட்டுள்ளமையால் போக்குவரத்தில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிகளைப் புனரமைப்பதற்குத் தார்க்கலவை இல்லாமையால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிலாளர்கள் தற்போது வீதிகளின் இருமருங்களிலும் காணப்படும் புற்கள் மற்றும் செடிகளை வெட்டி அழிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த-17)

# தொலைக்கல்வி ஆசிரியருக்கு அடுத்த வாரத்தில் பதிவு

அச்சுவேலி, ஜன.11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைப்புச் செய்யப்படவுள்ள தொலைக் கல்வி பயிற்சி ஆசிரியர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை தமது பதிவுகளை கலாசாலையில் மேற்கொள்ளலாம் என ஆசிரியகலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தொலைக் கல்விப் பயிற்சி ஆசிரியர்களின் பதிவு தொடர்பாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கா.கணபதிப்பிள்ளை மேலும் தகவல் தெரிவிக்கையில்,

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் பயில்பவர்களுக்கான மூன்றுமாத கால பயிற்சியின் போது தொலைக்கல்வி மூலம் நிறைவு செய்யப்படாத பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படவுள்ளன. உடற்கல்வி, அழகியல், சிங்களம், இரண்டாம் மொழி, சமயம் ஆகிய பாடங்களே நிறைவு செய்யப் படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் பதிவு செய்வதற்கு வரும் போது

தொலைக்கல்வி பயிற்சியில் இணைந்துகொள்ளும் போது கற்பித்த பாடசாலை அமைந்துள்ள கல்வி வலய, கல்விப் பணிப்பாளரினால் ''பயிற்சி நெறிக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்'' என்பதை உறுதிப்படுத்தும் கடிதம்,

தொலைக்கல்வி பயிற்சிக்காலத்தில் 80 வீதம் வரவு மற்றும் நன்நடத்தையை உறுதிப்படுத்தும் தொலைக் கல்வி நிலையத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட போதனாசிரியரின் கடிதம்.

உடற்கல்விப் பாடத்துறை செயல்முறை பயிற்சியின் போது அணிவதற்கான உடைகள் என்பனவற்றுடன் சமூகம் தர வேண்டும்.

மேற்படி ஆவணங்களை உரிய முறையில் பெற்றுக் கொண்டு வருவது சிரமம் இன்றி பதிவுகளை மேற்கொண்டு பயிற்சி நெறியை பயில்வதற்கு இலகுவாக இருக்கும் பதிவுகளை ஜனவரி 16ஆம், 17 ஆம், 18 ஆம், 19ஆம், 20 ஆம் திகதிகளில் கலாசாலை அலுவலக நேரத்தில் மேற்கொள்ளலாம் என்று கூறினார். (த-11)

# தாதியர் பகிஷ்கரிப்பு நேற்று முடிவு

யாழ். போதனா வைத்திய சாலை புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்கு இரண்டு தாதியர்கள் நியமிக்கப்பட்டதனையடுத்து தாதியர்கள் தமது பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு மருந்துக் கலவையாளர் பணியினையும் நேற்று முதல் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஒருவார காலத்தினுள் மேலும் இரண்டு தாதியர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரிவுக்குரிய தாதியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவை நேற்றுச் சந்தித்தனர். தமது பிரச்சினைகளையும் எடுத்துக் கூறினர்.

பின்னர் உடனடியாக இரண்டு தாதியர்களை நியமிக்கும்படி தாதிய மேற்பார்வையாளருக்கு உத்தரவிட்டதோடு ஒரு வார காலத்தில் மிகுதி இருவரையும் நியமிப்பதாகவும் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்ததையடுத்து தாதியர் நேற்று மேற்கொண்ட பகிஷ்கரிப்பை கைவிட்டு தமது பணியுடன் மருந்துக் கலவையாளரது பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

மருந்துக் கலவையாளர்களை விரைவில் நியமிப்பதாகவும் தாதியர்களிடம் பிரதிப் பணிப்பளார் தெரிவித்துள்ளார். (த-4)

# யாழ். கூட்டுறவுச் சங்கங்களில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் சங்கங்களின் அத்தியாவசிய செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான சங்கங்கள் ஆளணியைக் குறைப்பதன் மூலம் சங்கங்களை இலாபகரமாக இயங்கச் செய்யலாம் என்ற நோக்கத்துடன் செயல் படுகின்றன.

இந்த ஆளணிக் குறைப்பால் சங்கங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் வியாபார நடவடிக்கையும் பின்தள்ளப்படுகின்றது.

ஆளணிக்குறைப்பினால் சங்கங்களின் வளர்ச்சி கேள்விக் குறியாகியுள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் மேலும் கூறின.

அநேகமான சங்கங்களில் கூலித் தொழிலாளர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்தத் தொழிலாளர்கள் இன்மையால் சங்கங்களின் அத்தியாவசியப் பணிகள் பாதிப்படைந்துள்ளன.

சில சங்கங்களில் முழுமையான விற்பனையாளர்கள் இல்லாமையால் சங்கக் கிளைகளில் விற்பனை நடவடிக்கையும் மந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவற்றால் சங்கங்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் தடங்கல்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுச் சந்தைகளில் இப்போது 'வசூல் ராஜாக்கள்'

## வியாபாரிகள், விவசாயிகள் திண்டாட்டம்

அச்சுவேலி, ஜன. 11

யாழ். மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளைக் குத்தகைக்கு எடுத்த தனிப்பட்ட நபர்கள் தாம் நினைத்தபடி விவசாயிகள் மற்றும் பொது மக்களிடம் இருந்து வரிகளை வசூல் செய்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனை உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகமும் கண்டும் காணாமல் இருப்பதாகப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளினால் பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத் தரிப்பு இடங்கள் என்பன வருடாந்தம் குத்தகைக்கு விடப்படுகின்றன. இந்த குத்தகைக்கு விடும் நடவடிக்கை கேள்விப் பத்திரம் கோரல் மூலமும் ஏலம் விடல் மூலமும் நடைபெறுவது உண்டு.

பொதுச் சந்தைகளின் குத்தகை ஆண்டு தோறும் அதிகரித்துச் செல்வதும் உண்டு. இந்த வகையில் அச்சுவேலி பொதுச்சந்தை 2011ஆம் ஆண்டு குத்தகையாக 37 லட்சம் வரை சென்றது. 2012 ஆம் ஆண்டில் அது 52 லட்சம் ரூபா வரை சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் உள்ளூராட்சி சபைகள் வருமானம் ஈட்டும் அதேநேரம் வரி அறவிடுவோர் ஏக போகமாக அறவீடுகளை மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொதுச்சந்தை 2011ஆம் ஆண்டு குத்தகையாக 37 லட்சம் வரை சென்றது. 2012 ஆம் ஆண்டில் அது 52 லட்சம் ரூபா வரை உயர்ந்துள்ளது.


அச்சுவேலிச் சந்தையில் மோட்டார் சைக்கிள் கட்டணம் கடந்த வருடம் 5 ரூபா வீதம் அறவிடப்பட்டது. இந்த வருடம் அது 10 ரூபா வீதம் அறவிடப்படுகின்றது. சைக்கிள்களுக்குக் கடந்த வருடம் 3 ரூபா அறவிடப்பட்டது. இந்த வருடம் அது 5 ரூபா வாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தங்கியிருந்து வியாபாரம் செய்வோரின் நாளாந்த இட வாடகை, மீன் உட்பட சந்தையில் விற்பனை செய்யும் பொருள்களுக்கான வரி அறவீடு என்பனவும் மடங்கு கணக்கில் அதிகரிக்கப்பட்டிருப்பதாக வியாபாரம் செய்பவர்களும் பொருள்களை நுகர்ச்சிக்காகக் கொள்வனவு செய்யும் பொது மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

குத்தகை எடுத்தவர் கட்டுப்பாடில்லாத விதத்தில் வரி அறவீடுகளை மேற்கொள்வதை உள்ளூராட்சித் திணைக்களமும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் எனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பொதுச் சந்தைகளில் கட்டண அறவீடுகள் தொடர்பான விவரங்கள் எவையும் காட்சிப்படுத்தப்படுவதும் இல்லை. இதனால் இடத்துக்கு இடம் மாறுபட்ட விதத்திலும் தனிப்பட்டவர்களின் வசதிகள் விருப்பங்களுக்கு எற்பவும் கட்டணங்கள் அறவிடுவதைக் கட்டுப்படுத்த உரிய தரப்புகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள அநேகமான சந்தைகளில் இவ்வாறு கட்டுப்பாடற்ற வகையில் வரி அளவீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனால் வியாபாரிகள், விவசாயிகள், நுகர்வோர் ஆகியோர் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (த-11)



யாழ். போதனா வைத்தியசாலைக்குப் புதிதாக எடுத்து வரப்பட்ட 'எக்ஸ்ரே' இயந்திரம் பொருத்தப்பட்டுப் படப்பிடிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் நோயாளர்கள் சிரமமின்றி 'எக்ஸ்ரே' படப்பிடிப்பை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## இதுவரை தீராத தாகம்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். கரையோரப் பகுதிகளில் குடிதண்ணீருக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கொர்ணலியுஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

குறிப்பாகக் கொழும்புத்துறை, பாஷையூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களுக்கான குடிதண்ணீர் சேவைகள் தொடர்ந்தும் சீராக்கப்படாத நிலையிலேயே உள்ளன.

இது தொடர்பாகப் பல தடவைகள் யாழ். மாநகர முதல்வருக்குச் சுட்டிக்காட்டியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்று நன்னீர் கிணறுகளிலேயே தண்ணீரைப் பெற்று வருகின்றனர் - என்றார். (த-17)

## வடக்கில் தொழிற்சாலைகள் நிறுவி இளைஞருக்கு வேலை வழங்குங்கள்

### கனேடிய எம்.பிக்களிடம் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம், ஜன. 11

வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவி இளம் தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க கனேடிய அரசு முன்வர வேண்டும் எனக் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

வேலையின்றி ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் தவித்து வருகின்றனர். அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டியது அவசிய தேவையாகவுள்ளது. கனேடிய அரசு வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவி அதன்மூலம் வேலை வாய்ப்புகளை வழங்க முடியும்.

அவ்வாறு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தாது விடின் மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்கக் கூடிய நிலை ஏற்படும் - என்றார் ஆயர். (த-14)

## இரும்புக்கு இப்படி மவுசு



யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் முற்ற வெளிப்பகுதியில், நடைபாதைக் கடைகளுக்கென மாநகரசபையினால் அமைக்கப்பட்ட தகரக் கொட்டில்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அகற்றப்பட்டுவருகின்றன.

குறித்த இடத்தில் தனியார் பேருந்து நிலையம் அமைப்பதற்காகவே இது அகற்றப்பட்டு வருகின்றது.

இங்கு கட்டடங்கள் இடிக்கப்படும்போது வெளிவரும் இரும்புத்துண்டுகளை எடுத்து விற்பதற்காக இரும்பு வியாபாரிகள் முண்டியடிக்கின்றனர்.

'பைக்கோ' இயந்திரத்தின் மூலம் இடித்து தள்ளும் பணிகள் இடம்பெறும்போது உயிரைத் துச்சமென மதித்து அதனிடையே புகுந்து இரும்பை எடுக்கிறார் ஒருவர். (த-15)

## நெடுந்தீவு வரவு செலவு பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜன.11

நெடுந்தீவு பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான சபையின் வருமானம் 655 லட்சத்து 65 ஆயிரத்து 450 ரூபா 66 சதம் எனவும் மொத்தச் செலவினம் 655 லட்சத்து 40 ஆயிரத்து 889 ரூபா எனவும் பிரதேச சபைத் தலைவர் றெக்ஷியன் தெரிவித்தார். (ம-7)

## கூட்டுறவுப் பணியாளருக்கு புதிய சம்பளத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு புத்தாண்டுப் பரிசாக புதிய சம்பளத்திட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை சம்பள அதிகரிப்பு இன்றிக் குறைந்த வேதனத்துடன் சேவையாற்றும் இந்தக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விரைவில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கான புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்புத் தொடர்பாகக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஆராய்ந்து அதற்கான சுற்றறிக்கையை விரைவில் வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் நிலுவைகள் போன்றவற்றைச் சீர்செய்து வழங்குவதற்குக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் புதிய திட்டங்களை மேற்கொண்டு வருவதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

## சுயதொழில் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜன.11

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குச் சுயதொழில் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்தவர்களில் 10 பேருக்கு இரண்டாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பின்வருவோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கா.இமானுவேல் சங்கீதன்- தாவளை இயற்றாலை, அ.மகேந்திரராசா- கற்குளி வடக்கு, ச.கலைமகள்- கெருடாவில் சாவகச்சேரி, ந.லலிதாம்பிகை- மீசாலை வடக்கு, சோ.கயிலேஸ்வரி- சங்கம் வீதி, சாவகச்சேரி, க.கனகலட்சுமி- நாவற்குழி தெற்கு, கா.கதிரேசன்- கெற்பேலி, சி.சுமித்திரி- மீசாலை வடக்கு, கி.யமுனா- இராமாவில், பா.பவளம்- அல்லாரை தெற்கு. (ம-207)

## 'கூலர்' வாகனங்களில் கடலுணவு தெற்குக்கு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்குக் கடலுணவுகளை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளது. தற்போது 'கூலர்' வாகனங்கள் மூலம் பெருந்தொகையான கடலுணவு வகைகள் தென்பகுதிக்குச் செல்கின்றன.

கடந்த வாரத்தில் கடல் உணவுகள் பெருந் தொகையில் சந்தைக்கு வந்ததை அடுத்தே தெற்குக்கான சந்தைப்படுத்தல் அதிகரித்துள்ளது அத்துடன் கடலுணவுகளின் விலைகளிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த விலைச் சரிவைப் பயன்படுத்தி அதிகமான 'கூலர்' வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து கடலுணவுகளை ஏற்றிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

தீவுப்பகுதி மற்றும் வடமராட்சிப் பகுதி ஆகிய இடங்களில் இருந்தே அதிகமான கடலுணவுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

தீவுப்பகுதி மற்றும் வடமராட்சிப் பகுதி ஆகிய இடங்களில் இருந்தே பெரும் தொகையில் கடலுணவுகள் இவ்வாறு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## பிரதேச அபிவிருத்திக்கு உறுப்பினரின் சம்பளம்

சண்டிலிப்பாய், ஜன.11

பிரதேசசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த வேதனத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பாத வலி.தென் மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர், தனது வேதனத்தைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துமாறு செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

பிரதேச சபைகளின் மாதாந்தக் கூட்டங்களில் சமூகமளிக்கும் உறுப்பினர்களுக்குப் பிரதேச சபையினால் மாதா மாதம் வேதனம் வழங்கப்பட்டு வருகிறது. தவிசாளருக்கு ரூபா 10 ஆயிரம் உதவித் தவிசாளருக்கு ரூபா 7 ஆயிரத்து 500 ஏனைய உறுப்பினர்களுக்கு ரூபா 5 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவருமான கே.கௌரிகாந்தன் தனது மாதாந்த வேதனத்தைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துமாறு செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர், தனக்குரிய மாதாந்த வேதனத்தைப் பெற்று வறுமைப்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-115)

## இன்று முதல் விசேட போக்குவரத்துச் சேவை

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். மாநகரசபையின் கலாசாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்படவுள்ள தமிழர் திருநாள் பொங்கல் 2012 நிகழ்வுகளை முன்னிட்டு விசேட போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளதாக மாநகர சபை அறிவித்துள்ளது.

இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் விசேட போக்குவரத்துச் சேவைகள் காலை தொடக்கம் இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளதாக மாநகர சபை அறிவித்துள்ளது. பஸ் சேவைகள் முற்றவெளியில் இருந்து இடம்பெறும். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.-அம்பாறை எல்லையில் சூட்டுக்கு இலக்காகும் கால்நடைகள்

## செல்வராசா எம்.பியிடம் முறைப்பாடு

வெல்லாவெளி, ஜன.11

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எல்லையிலுள்ள கால்நடை மேய்ச்சல் தரைகளில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் மீது சட்டவிரோத பயிர்ச்செய்கையாளர்களினால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படுகின்றது. கால்நடைகளும் பிடித்துச் செல்லப்பட்டு சட்டவிரோதமாக நஷ்டஈடு கோரப்படுகின்றது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவிடம் வெல்லாவெளி பிரதேச கால்நடைப் பண்ணையாளர்கள் முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

வெல்லாவெளிப் பிரதேசத்திலுள்ள 35ஆம் குடியேற்ற கிராமத்துக்கு அவர் சென்றபோதே இந்தப் பிரச்சினைகள் கால்நடைப் பண்ணையாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் அவர்களால் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

வெல்லாவெளிப் பிரதேசத்திற்குரிய கால்நடைகள் பெரும்போக வேளாண்மைச் செய்கைக் காலத்தில் திபுலாணை, கெவிளியா, பண்டாரத்தீவு ஆகிய இடங்களிலுள்ள மேய்ச்சல் தரைகளில் மேய்ச்சலுக்கு விடப்படுவது வழமையாகும்.

இந்த மேய்ச்சல் தரைகளில் குறிப்பிட்ட சில இடங்களில் எல்லைப்புறவாசிகள் தற்போது சட்டவிரோதமாக சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் செய்கை பண்ணப்பட்ட சேனைப் பயிர்ச்செய்கைக் காணியில் தமது கால்நடைகள் நுழையும்போது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படுகின்றது. கால்நடைகளும் பிடித்துக் கட்டப்படுகின்றன.

இதுவரையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்தும் காயமடைந்துமுள்ளன. உயிரிழந்த கால்நடைகளை இந்தச் சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்கள் இறைச்சி வியாபாரிகளுக்கு விற்கின்றனர்

இந்தநிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த கால்நடைகளை குறைந்த விலையில் கால்நடை வியாபாரிகளுக்கு விற்க வேண்டியுள்ளது.

ஊர்காவல் படைக்கென வழங்கப்பட்ட துப்பாக்கிகளே இத்துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இது தொடர்பில் பொலிஸ் மற்றும் அதிகாரிகளின் கவனத்துக்குகொண்டுவரப்பட்டபோதிலும், இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலை நீடிக்குமானால், கால்நடைகளை விற்பதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை- என்றனர்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள் உட்பட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்.

சட்டவிரோத பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்றல், மேய்ச்சல் தரைகளை அடையாளங்காணல் போன்றவை குறித்தும் கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளார். (ச)

# 'பன்றிச் சம்பா'வினால் நெற் பயிர்ச்செய்கை பாதிப்பு

நெற்பயிர்களிடையே வளரும் களைகளை இல்லாதொழிப்பதற்காக அவற்றுக்கான களை நாசினிகளை தாம் பயன்படுத்தி வருகின்றபோதும், அதற்குரிய பயன்கள் கிடைக்க வில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



அம்பாறை,ஜன.11

அம்பாறை மாவட்டத்தில் நெற்பயிர்களிடையே 'பன்றிச் சம்பா' எனும் கலப்பின நெற்பயிரின் பெருக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

'பன்றிச் சம்பா' எனும் இந்த நெல்லினம் நெற்பயிர்களிடையே அதிகமாகப் பெருகி வருவதோடு, இவற்றின் வளர்ச்சியும் அதீதமாக உள்ளமையினால் நெற்பயிர்களின் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, நெல் வயல்களிலுள்ள 'பன்றிச் சம்பா'வின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் வகையில் - மனித வளங்களைப் பயன்படுத்தி அவற்றினை அறுத்து அகற்றும் நடவடிக்கையில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இவற்றின் வளர்ச்சீயினைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நெற்பயிர்களிடையே வளரும் களைகளை இல்லாதொழிப்பதற்காக அவற்றுக்கான களை நாசினிகளை தாம் பயன்படுத்தி வருகின்றபோதும், அதற்குரிய பயன்கள் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தவிடயம் தொடர்பாக களைநாசினி உற்பத்தி நிறுவனங்களின் முகவர்களிடம் தாம் முறையிட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ச)

# காட்டு யானைகள் அட்டகாசம் அதிகரிப்பு

நெல் வயல்களைக் காட்டு யானைகள் சேதப்படுத்தி வருவதுடன், இந்தப் பிரதேச குடியிருப்பாளர்களின் வீட்டுத் தோட்டப் பயிர்களையும் அழித்து வருகின்றன.

இறக்காமம், ஜன.11

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் மற்றும் தொடரிப் பள்ளி நெல்வயல்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால் விவசாயிகளும் அப்பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இரவு வேளைகளில் நெல் வயல்களைக் காட்டு யானைகள் சேதப்படுத்தி வருவதுடன், இந்தப் பிரதேச குடியிருப்பாளர்களின் வீட்டுத்தோட்டப் பயிர்கள், வாழை மரங்கள், தென்னங்கன்றுகள் போன்றவற்றையும் அழித்து நாசப்படுத்தி வருகின்றன. இதனால் அதிக நஷ்டத்தை தாம் எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீத்தைக் கிராமம் தொடக்கம் மலையடிக் கிராமம் வரையும் மின்சார வேலியை அமைப்பதன் மூலம் யானைகளின் தொல்லையிலிருந்து நெல்வயல்களையும், வீட்டுப்பயிர்களையும் ஓரளவு பாதுகாக்கமுடியும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)



காத்தான்குடி, ஆற்றங்கரையோர 'லகூன் ட்றைவ்' வீதி கொங்கிறீட் இட்டு புனரமைக்கப்படுகின்றது. இந்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தியத்தலாவை, ஜன. 11

மொனராகலை மாவட்டத்தில் பின்தங்கிய மடுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 5 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியின் மூலம் இந்தப் பிரதேசத்தில் மக்களினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளைச் சேகரித்து இயற்கை பசளை தயாரிப்பதற்கான மத்திய நிலையம் அமைத்தல், மலசலகூடங்கள் அமைத்தல், சுகாதார மத்திய நிலையம் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

மடுல்ல பிரதேச செயலாளர் அலுவலக நேரடிக் கண்காணிப்பில் அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறும் என்று பிரதேசசபை தவிசாளர் டீ.எம்.சமிந்த புஸ்பகுமார தெரிவித்தார். (ச)

# கண்ணுக்குத் தெரியாத தமிழ்ப் பாடசாலைகள்

## மக்கள் அதிருப்தி

மஸ்கெலியா, ஜன.11

நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் உள்ள எந்த ஒரு தமிழ் பாடசாலையும் 2012 ஆம் ஆண்டில் 1000 பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்று மஸ்கெலியா மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேசத்திலுள்ள கல்விமான்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மக்கள் செறிந்து வாழும் மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் ஏழு சிங்களப் பாடசாலைகளும், ஆறு தமிழ்ப் பாடசாலைகளும் உள்ளன.

மஸ்கெலியா, சாமிமலை, நோட்டன், நோர்வூட், ஹற்றன், தலவாக்கலை போன்ற பகுதிகளில் அமைந்துள்ள தமிழ்ப் பாடசாலைகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இங்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளே அதிகம் கல்வி பயில்கின்றனர்.

அரசின் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் இந்தப் பாடசாலைகளில் ஒன்றேனும் உள்வாங்கப்படாமையானது பெற்றோர்களிடையே பெரும் விசனத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் சுமார் 10 தமிழ்ப் பாடசாலைகள் உள்வாங்கப்பட வேண்டும். அதில் மஸ்கெலியா தேர்தல் தொகுதியிலுள்ள பாடசாலைகளும் [illegible] வேண்டும் - என்றனர். (ச)

# வரலாற்றில் ஏற்பட்ட துயரங்களை நூல்களாக வெளியிட வேண்டும்

இன்றைய தமிழனின் அவலத்தையும், நாளைய தமிழன் எடுக்கின்ற முடிவுகளையும் வரலாறாக ஆவணப்படுத்த ஒவ்வொரு எழுத்தாளர்களும் முன்வரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

மூதூர், ஜன.11

தமிழ் மக்கள் அனுபவித்த பேரவலங்களை எழுதி நூல்களாக வெளியிட வடக்கு, கிழக்கு இணைந்த எமது தாயகத்தின் எழுத்தாளர்கள், கவிஞர்கள் முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜா தெரிவித்தார்.

நீங்களும் எழுதலாம் அமைப்பின் அனுசரணையோடு மூத்த எழுத்தாளரும், தேனையூர் நாகம்மாள் ஆலய பிரதம குருவுமான [illegible] அ.அரசரெத்தினம் எழுதிய 'எதிர்நீச்சலடிப்போம் ஏமாறாமலிருப்போம்' கவிதைநூல் வெளியீட்டுவிழா கடந்த சனிக்கிழமை திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

'எதிர்நீச்சலடிப்போம் ஏமாறாமலிருப்போம்' என்ற இந்த நூல் எமது தேசத்தின் கடந்த கால நிகழ்வுகளை எமது கண்முன் கொண்டு வருகின்றது. அகதிமுகாம் வாழ்வு இன்றும் எம்மக்களுக்கு நீங்கவில்லை என்பதனை கவிஞர் மிகவும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். முட்கம்பி வேலிக்குள் எமது இனம் அனுபவித்த விடயங்களை இந்தக் கவிஞன் நூல் வடிவில் தந்திருக்கின்றார். கவிதை என்பது எமது இனத்தின் அடையாளமாக மாறவேண்டும்.

இன்றைய தமிழனின் அவலத்தையும், நாளைய தமிழன் எடுக்கின்ற முடிவுகளையும் வரலாறாக ஆவணப்படுத்த ஒவ்வொரு எழுத்தாளர்களும் முன்வரவேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மத்திய கிழக்கு நாடுகள்

### டுபாய்-சுத்திகரிப்பாளர் பெண்கள்

1. மாத சம்பளம் 600 DHS.
2. வேலை செய்யும் காலத்தில் வைத்திய செலவுகள், தங்குமிட வசதி, போக்கு வரத்து வசதி இலவசம்.
3. நாளாந்தம் வேலை நேரம் எட்டு மணித்தியாலம்.
4. ஒப்பந்த காலம் 2 வருடம்.
5. தேவைப்படும் ஆள்கள் 40 பேர்.
6. 2 வருட ஒப்பந்தம் முடிந்த பின்பு திரும்புவதற்கான விமான பயணச் சீட்டு இலவசமாக வழங்கப்படும்.

### டோகா, கட்டார் உதவியாளர்கள்-ஆண்கள்

1. மாத சம்பளம் கட்டார் ரியால் 620.
2. மாத சாப்பாட்டுக்கான கொடுப்பனவு 180 வழங்கப்படும்.
3. வைத்திய செலவு, தங்குமிட வசதி, போக்கு வரத்து வசதி இலவசம்.
4. மேலதிக வேதனம் உண்டு (Over time).
5. தேவைப்படும் ஆள்கள் 17 பேர்.
6. ஒப்பந்த காலம் 2 வருடம்.
7. 2 வருட ஒப்பந்தம் முடிந்த பின்பு திரும்புவதற்கான விமான பயணச் சீட்டு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
போமோசா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
பதிவு செய்யப்பட்ட இல-522,
இல. 67/3B, பிரதீபா மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு-10.
(மாளிகாவத்தை பொலிஸ் நிலையம் அருகில்)
தொ.பே. இல.:
**0776314865,0112542134,0777279813**
(விசா கைவசம் உண்டு.)
(C/7544)(5,6,7)



## நீங்காத நினைவில் ஓராண்டு

தோற்றம் : 18-03-1922
மறைவு : 23-12-2010
அமரர்

திதி: துதியை (11.01.2012)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
எமக்கு நல்வழி காட்டிய
அன்பு ஐயாவே
உங்கள் ஆத்மா சாந்தியடைய

குடும்பத்தினர்,
சண்முகநாதன் (மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
(12862) (6,7,10)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் தங்கரத்தினம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் தங்கரத்தினம் 09.01.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பிப்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னப்பு இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் ஜெகதீசன், நித்தியவாணி, ஜெயக்குமார் (கனடா), ஜெகநாதன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், சந்திரிகா தேவி, காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, இராஜேஸ்வரி, (கனடா), ஸ்ரீகலா (யாழ். பல்கலைக்கழகம்), சுசீலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சேந்தன், ஆதித்தன், அம்பிகா, மாய்யவன், ஆதவன், சஞ்சயன், ஜனார்த்தனன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியும் அபிநேகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(11.01.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.ஜெகதீசன் (இளைப்பாறிய உள்ளகக் கணக்காய்வாளர், யாழ். பல்கலைக்கழகம்),
இ.ஜெகநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்).

உடுவில்மேற்கு,
சுன்னாகம்.
(45-7-6)

## விபத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம்பெற்ற சைக்கிள், பஸ் விபத்தில் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று மாலை 3 மணியளவில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த மலேரியாத் தடுப்புப் பிரிவு ஊழியரான மு.பூபாலன் (வயது -50) என்பவர் சிறுகாயங்களுக்கு உள்ளானார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்ற தனியார் பஸ் வேறு வாகனம் ஒன்றுக்கு வழிவிடும் போது சைக்கிளில் முட்டிக் கொண்டதாகவும் இதனால் கீழே விழுந்து அவர் காயமடைந்ததாகவும், சைக்கிள் சேதத்துக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**For Computer Personal Classes**
(Including Hardware & Troubleshooting)
Please Contact after 6.00 Pm
T.P. 0779117191
(12981) (7-6-45)

## அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்


### சின்னத்துரை அருமைநாயகம்

09.01.2012 பக்கம் 18 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஏ.துரைராஜா என்பதை ஏ.ஏ.ஆனந்தராஜா என வாசிக்கவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலராகக் கடமை புரிந்து
தெல்லிப்பழை பிரதேச செயலராக மாற்றலாகிச் செல்லும்
**திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்**
அவர்கள் எமது மக்களுக்கும் எமது சங்கங்களுக்கும் ஆற்றிய
உன்னத சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு
தெல்லிப்பழைப் பிரதேச செயலராகக் கடமையாற்றி எமது
பிரிவிற்கு மாற்றலாகிவந்திருக்கும்
**சுப்பிரமணியம் முரளிதரன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்.
கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்
சண்டிலிப்பாய் பிரதேசம்.
(12961)(2-6-7)

## நன்றி தெரிவிக்கின்றோம்





கௌரவ அமைச்சர் **K.N. டக்ளஸ் தேவானந்தா** ஐயா பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சு அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ரூபா 100,000 மும் இந்து கலாசாரத் திணைக்களத்தினூடாக 100,000 மும் எமது பிட்டியெல்லை ஞானவைரவர் ஆலயம் புரைமைப்புச் செய்வதற்கு உதவியமைக்குக் கௌரவ அமைச்சர் அவர்கட்கும் அதனைப் பெற்றுத்தந்த காரை நகர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும், பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் **V. கண்ணன்** அவர்கட்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிட்டியெல்லை ஞானவைரவர் நிர்வாகமும்,
பிட்டியெல்லை வாழ் மக்களும் (129579)(2-6-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெல்லியோடை அம்மன்வீதி, அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த
### கேதாரணி இராசரத்தினம்

கேதாரணி எனும் நாமம் சூட்டினோம்
தரணியில் கூறி அழைக்க
தலைப்பிள்ளையாம் பெற்றோர்க்கு
பெருமையடைகிறோம் நாம்
தம்பி-தங்கையர்களுக்கு வழிகாட்டிய
எம் அன்பு அக்காவே நீர் பெற்ற
பட்டத்தையிட்டு நாமும் உம்மை
வாழ்த்துவதில் பெருமை அடைவதுடன்
பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று
சிறப்புடன் வாழ வேண்டும் என்று
வாழ்த்துகின்றோம்.

கடந்த 08.01.2012 அன்று கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 15 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டம் (B.A.) பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் ஏனைய பட்டம் பெற்ற மாணவர்களையும் பாராட்டுவதோடு, அவர்கள் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு அப்பா, அம்மா,
மற்றும் சகோதரர்கள்.
0214913328
(12955)(5,6,7)

## O/Level இன் பின்னர்

**பெறுபேறுகள் வரும் வரை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கற்க இதுவே சிறந்த தருணம்**

O/L மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகை

- Diploma in Information Technology
- Diploma in IT & Web Programming
- Advanced Diploma in Hardware & Networking

**Multimedia Courses**
- Video Production
- Digital Pre-Press
- Web Animation
- Web Development
- Professional Graphic Design
- Cartoon Animation

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

Registered with Tertiary & Vocational Education Commission of Sri lanka

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399 | 230, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் நாட்டுடன் உறவை புதுப்பிக்க அமெரிக்கா முனைப்பு

யாங்கூன், ஜன.11

மியன்மார் உடனான உறவுகளைப் புதுப்பிக்கும் விதமாக அமெரிக்கப் பிரதிநிதிகள் இருவர் நேற்றுமுன்தினம் தலைநகர் நேபையிடாவுக்கு வந்துள்ளனர். இதற்கிடையில் மியன்மார் மீதான பொருளாதாரத் தடைகள் சிலவற்றை நீக்குவதற்கு ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவடைந்து கடந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனநாயக ரீதியிலான நாடாளுமன்ற ஆட்சி தொடங்கியது. எனினும், தற்போது நாடாளுமன்றில் இராணுவத்தின் பிரதிநிதிகள் கணிசமான எண்ணிக்கையில் உறுப்பினராக உள்ளனர். இந்நிலையில் மியன்மார் தனது ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்துக்கு புலப்படும்படி அதிகரித்து வருகிறது. குறிப்பாக ஜனநாயக போராளி ஆங் சான் சூகியின் கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய அனுமதித்து இடைத் தேர்தலில் அவர் போட்டியிடுவதற்கான சூழலை உருவாக்கி உள்ளது.

**இருநாட்டு அரச பிரதிநிதிகளும் பல்வேறு சீர்திருத்தங்கள் குறித்து பேச்சு நடத்துவர்**

இதையடுத்து மியன்மார் உடனான தனது உறவுகளை புதுப்பிப்பதில் அமெரிக்கா முனைந்துள்ளது. இதன் ஒரு கட்டமாக மியன்மார் பற்றிய கொள்கைப் பிரிவுக்கான அமெரிக்க ஒருங்கிணைப்பாளர் டெரிக் மிச்சேல், ஆள்கடத்தல் தடுப்புப்பிரிவின் அமெரிக்க பிரதிநிதி லூயிஸ் டிபாக்கா இருவரும் நேற்றுமுன்தினம் நேபையிடா வந்தனர்.

கடந்த ஆண்டின் இறுதியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மியன்மாருக்கு வந்ததன் தொடர்ச்சியாக இவர்கள் வந்துள்ளனர். இவர்கள், அரச பிரதிநிதிகளுடன் பல்வேறு சீர்திருத்தங்கள் குறித்துப் பேச்சு நடத்துவர். இதற்கிடையில் மியன்மாரின் முக்கிய பிரமுகர்கள் மீது ஆஸ்திரேலியா விதித்துள்ள நிதி மற்றும் பயணம் குறித்த தடைகள் நீக்கப்படும். (ந)

# 'மெமோகேட்' அறிக்கைகள் சட்டவிரோதமானவை

**பிரதமர் கிலானி குற்றச்சாட்டு**



இஸ்லாமாபாத், ஜன.11

'மெமோகேட்' விவகாரத்தில், இராணுவத் தளபதி கயானி மற்றும் ஐ.எஸ்.ஐ. தலைவர் பாஷா ஆகியோர், மேன் நீதிமன்றில் தாக்கல் செய்த விளக்க அறிக்கைகள் சட்டவிரோதமானவை என பிரதமர் யூசுப் ரசா கிலானி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வழக்கில் இராணுவத் தளபதி கயானியும், ஐ.எஸ்.ஐ தலைவர் பாஷாவும் தங்கள் விளக்க அறிக்கைகளைத் தாக்கல் செய்யவேண்டும் என மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி இருவரும் தங்கள் அறிக்கைகளை சமீபத்தில் தாக்கல் செய்தனர். இது குறித்து, பீப்பிள்ஸ் டெய்லி இணையப் பத்திரிகைக்குப் பிரதமர் கிலானி அளித்த பேட்டியில் இருவரின் அறிக்கைகளும் அரசின் ஒப்புதலின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சரிடமும் அனுமதி கோரப்படவில்லை. இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது எனத் தெரிவித்துள்ளார். (ந)

# புத்த மடாலயங்கள் மீது புதிய கட்டுப்பாடுகள்

பீஜிங், ஜன.11

திபெத் மீதான சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து, இதுவரை 13 புத்தமதத் துறவிகள் தீக்குளித்துள்ளனர். இந்தப் போராட்டம் தொடர்ந்து பரவாமல் தடுக்கும் வகையில் திபெத்தில் உள்ள புத்த மடாலயங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க சீனா தீர்மானித்துள்ளது.

கடந்த 2008, மார்ச் புத்த மடாலயங்களுக்குள் சீன இராணுவம் நுழைந்ததையடுத்து உள்ளூர் மக்கள் தங்கள் குழந்தைகளை மடாலயங்களுக்கு அனுப்பி அவற்றை மேலும் வலிமைப்படுத்த ஒத்துழைத்து வருகின்றனர். புதி



தாகச் சேர்க்கப்படும் குழந்தைகள் புத்தமத துறவிகளாகின்றனர். இந்தத் துறவிகள் மக்களிடையே திபெத் பிரச்சினை குறித்து விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்கின்றனர்.

சீனா மீதான எதிர்ப்பு தற்போது திபெத்துக்கு வெளியேயும் பல இடங்களில் பரவி வருகிறது. குறிப்பாக திபெத்துக்கு அருகில் உள்ள சிச்சுவான் மாகாணம் தான், தற்போது எதிர்ப்பின் தளமாக இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு மார்ச் முதல் நேற்றுமுன்தினம் வரை, அந்த மாகாணத்தில் உள்ள புகழ் பெற்ற கீர்த்தி மடாலயத்தைச் சேர்ந்த துறவிகள் மற்றும் முன்னாள் துறவிகள் என மொத்தம் 13 பேர் தீக்குளித்துள்ளனர். இவர்களில் ஒரு பெண் துறவியும் அடக்கம்.

இந்நிலையில், புத்த மடாலயங்கள் மீதான அரசின் கட்டுப்பாடுகளை அதிகரிக்கும் விதத்தில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள சீன அரசு தீர்மானித்துள்ளது. (ந)

## சர்கோஸி மனைவி மீது புகார்

லண்டன், ஜன.11

எயிட்ஸ் பாதித்தவர்களுக்கு உதவ வழங்கப்பட்ட அறக்கட்டளை நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக பிரான்ஸ் அதிபர் சர்கோஸியின் மனைவி மீது புகார் எழுந்துள்ளது.

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரைச் சேர்ந்த ஓர் அறக்கட்டளை நிறுவனம், பிரான்ஸ் நாட்டில் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கும், எயிட்ஸ் பாதித்துள்ள பிறந்த குழந்தைகள் நலனுக்கும் விழிப்புணர்வுப் பணிகளுக்கும் செலவிட 2.70 மில்லியன் யூரோ நிதியை அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் சர்கோஸியின் மனைவி கார்லா புருனியிடம் வழங்கியிருந்தது.

அவர் அந்த நிதியை எயிட்ஸ் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு செலவிடாமல், தனது நெருங்கிய தோழியின் அறக்கட்டளைக்கு தோழி ஜூலியன் ஸிவாஞ்சே மூலமாகக் கொடுத்துள்ளார். இவ்வாறு அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

இதனைப் பிரான்ஸ் அதிபர் மாளிகை மறுத்துள்ளது. கார்லாபுரூனி கூறுகையில், தனது தோழியும், எயிட்ஸ் விழிப்புணர்வு குறித்த பிரசாரத்துக்காக அறக்கட்டளை நடத்துவதாகவும் அதன் பேரிலே வழங்கியதாகவும், முறைகேடு செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ந)

# கப்பலில் மீண்டும் எண்ணெய்க் கசிவு

வெலிங்டன், ஜன.10

நியூஸிலாந்து துறைமுகத்தில் 3 மாதங்களுக்கு முன்பு தரைதட்டி விபத்துக்குள்ளான எண்ணெய்க் கப்பல் புயலால் ஏற்பட்ட இராட்சத அலைகளால் இரண்டாக உடைந்துள்ளது. இதையடுத்து அந்தக் கப்பலிலிருந்து மீண்டும் எண்ணெய் கசிய ஆரம்பித்துள்ளது.





இந்த எண்ணெய்க் கசிவால் கடற் பறவைகள் உட்பட ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது நியூஸிலாந்து அரசுக்கும், அங்கு உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ரேனா என்ற கிரீஸ் நாட்டுக்குச் சொந்தமான அந்தக் கப்பல், எண்ணெய் ஏற்றிக் கொண்டு கடந்த ஒக்ரோபர் மாதம் நியூஸிலாந்துக்கு வந்தது. தௌரங்கா பகுதியில் உள்ள துறைமுகத்தில் ஆழம் குறைந்த பகுதிக்கு கப்பலை மாலுமி செலுத்தியதால் கப்பல் தரை தட்டி விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்து நடந்த உடனேயே கப்பலில் இருந்து 300 தொன் எண்ணெய் கசிந்தது. இதில் 1300 கடல் பறவைகள் செத்து மடிந்தன.

இந்நிலையில் நியூஸிலாந்தில் கடந்த சனிக்கிழமை கடும் புயல் வீசியது. இதில் கடலில் 20 அடி உயர இராட்சத அலைகள் உருவாகின. இது ரேனா கப்பலில் வேகமாக மோதியதில் இரண்டு துண்டாக உடைந்தது. இதைத் தொடர்ந்து அதில் இருந்து மீண்டும் எண்ணெய் கசிய ஆரம்பித்துள்ளது.

இந்த எண்ணெய்க் கசிவால் கடும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும், கடல்வாழ் உயிரினங்கள் அழியக்கூடும் என்று தாங்கள் அஞ்சுவதாக அந்நாட்டு சுற்றுச்சூழல் அமைச்சர் நிக்ஸ் மித் தெரிவித்துள்ளார். (ந)


# 5 ஆண்டு இடைவெளியில் பிறந்த இரட்டைக் குழந்தைகள்

பிரிட்டனில் 5 ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் இரட்டைக் குழந்தையில் ஒன்று பிறந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த தம்பதி செயற்கை முறையில் இரு குழந்தைகளை பெற்றெடுக்கத் தீர்மானித்தனர். இதற்காக ஒரே நேரத்தில் 5 கருமுட்டைகளை மருத்துவர்கள் உருவாக்கினார்கள்.

இதில் 2 கருவைத் தாய்க்குச் செலுத்தினர். அதன்படி கடந்த 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி ஒரு பெண் குழந்தை பிறந்தது. மீதியிருந்த கருவையும் தேவைப்படும் போது பயன்படுத்தலாம் என மருத்துவர்கள் ஆலோசனை கூறி குளிர்சாதனப் பெட்டியில் பாதுகாத்து வைத்தனர். தற்போது முதல் பிறந்த அந்தப் பெண் குழந்தைக்கு 5 வயது.

இந்நிலையில் மீண்டும் குழந்தையைப் பெற்றெடுக்க தம்பதி விரும்பியதால் ஏற்கனவே பாதுகாத்து வைத்த கருவை தாய்க்கு



பயன்படுத்தினர். அதில் கடந்த நவம்பரில் அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது எனத் தம்பதியினர் கூறினர். (ந)

# புலம் பெயர்ந்தவர்களால் பிரிட்டனில் வேலையில்லாத் திண்டாட்டம்

பிரிட்டனில் அதிகரித்து வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து இடம் பெயர்ந்து வரும் இளைஞர் கூட்டத்துக்கும் தொடர்பு உண்டா என்பது குறித்துப் பிரிட்டனில் உள்ள மைக்ரேஷன் வாட்ச் யு.கே என்ற அமைப்பு ஒரு புள்ளிவிவரத்தை அளித்தது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த 2004 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்த போலந்து, செக் குடியரசு, ஷங்கேரி, சுலோவேகியா, சுலோவேனியா, எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா நாடுகளின் இளைஞர்கள் சமீபகாலமாகப் பிரிட்டனுக்குள் வந்து பிரிட்டிஷ் இளைஞர்கள் கடினம் எனக் கருதும் பணிகளை சிறப்பாகச் செய்து முடிக்கின்றனர்.

இவ்வாறு 300,000 பேர் ஐரோப்பாவின் பொருளாதார நெருக்கடி காரணமாக பிரிட்டனுக்கு இடம்பெயர்ந்தனர். இவர்கள் பிரிட்டன் இளைஞர்கள் செய்ய மறுக்கின்ற அழுக்கான, கடினமான, ஆபத்தான வேலைகளைக் கூட விரைவாகவும், நிறைவாகவும் செய்கின்றனர் என தேசிய புள்ளியியலின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது. (ந)

# குண்டு வெடிப்பால் மலேசியாவில் பதற்றம்

கோலாலம்பூர், ஜன.11

மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராகிம், ஓரினச் சேர்க்கை பாலியல் வழக்கில் இருந்து நேற்றுமுன்தினம் விடுதலையான அடுத்த ஒரு மணி நேரத்தில் 3 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதனால், மலேசியாவில் பதற்றம் நிலவுகிறது. மலேசியப் பிரதமராக 1981 முதல் 2003 வரை இருந்தவர் மகாதிர் முகமது. அரசியலில் 40 ஆண்டுஅனுபவம் வாய்ந்தவர்.

அவரது ஆட்சியில் 1993 முதல் 1998 வரை துணைப் பிரதமராக இருந்தவர் அன்வர் இப்ராகிம் (64). மகாதிரிடம் மிக நெருக்கமாக, நம்பிக்கை பெற்றவராக இருந்தார். மக்கள் கூட்டணிக் கட்சியில் தொடர்ந்து நற்பெயர் பெற்றுவந்த நிலையில், மகாதிருக்கு மாற்றாக அன்வர் இப்ராகிம் மாபெரும் தலைவராக உருவெடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திடீர் திருப்புமுனையாக 1998 இல் அவர் மீது ஊழல் மற்றும் ஓரினச்சேர்க்கை குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. துணை பிரதமர் பதவியில் இருந்து அன்வரை மகாதிர் நீக்கினார். பின்னர் அவருக்கு ஊழல் வழக்கில் 6 ஆண்டு மற்றும் ஓரினச் சேர்க்கை குற்ற வழக்கில் 9 ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் மீதான ஓரினச் சேர்க்கை வழக்கு 2004 இல் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பு சாட்சியங்கள், ஆதாரங்களில் குறைபாடு இருப்பதால் அன்வர் மீதான குற்றச்சாட்டை முழுவதுமாக நம்ப முடியவில்லை என்று நீதிபதிகள் கூறினர்.

இதையடுத்து அன்வர் நேற்று விடுதலை ஆனார். ஆனாலும் அவர் அரசியலில் ஈடுபடத் தடை தொடர்வதாக நீதிபதிகள் கூறினர். (ந)

## குண்டுதுளைக்காத வாகனம்

இஸ்லாமாபாத், ஜன.11


தற்போது பாகிஸ்தான் தெக்ரிக்-இ -இன்சாப் என்ற அரசியல் கட்சியை தொடக்கி உள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் முன்னாள் கப்டன் இம்ரான்கான் இந்திய ரூபா 3 கோடியே 60 இலட்சம் செலவில் குண்டு துளைக்காத கறுப்பு நிற ஜீப் வாங்கியுள்ளார்.

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, தீவிரமாக அரசியலில் ஈடுபட்டுள்ள அவர் இஸ்லாமாபாத்தில் பல நகரங்களில் பேரணிகள் மற்றும் பொதுக் கூட்டங்களும் நடத்த உள்ளார். அதில் பங்கேற்று பேச உள்ள அவருக்கு பாதுகாப்பு அவசியமாகிறது.

எனவே, அவருக்கு ரூபா 3 கோடியே 60 இலட்சம் செலவில் குண்டு துளைக்காத கறுப்பு நிற ஜீப் வாங்கப்பட்டுள்ளது. அதை அவர் சொந்தப் பணத்தில் இருந்து வாங்கியுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த சீனா ஆர்வம்



பீஜிங்,ஜன.11

இந்தாண்டில் அரசியல் மற்றும் கூட்டுறவு விவகாரங்களில் இந்தியாவுடனான உறவை விரைவாக வும் சீராகவும் வளர்ப்பதற் காக அந்நாட்டுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நடவடிக்கைகளை சீனா எடுக்கும் என சீன வெளியுறவு உதவி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர், அருணாச்சலப் பிரதேச குடிமக்களுக்குத் தாளில் விசா அளித்தது, இந்திய ராணுவத் தளபதிக்கு விசா வழங்க மறுத்தது, தலாய்லாமாவைக் காரணம் காட்டி எல்லைப் பிரச்சினை குறித்து பேச்சு தள்ளிப் போட்டது என இந்திய - சீன உறவில் சில பிரச்சினைகள் கடந்தாண்டில் எழுந்தன. இதன் விளைவாக, ராணுவ மட்டத்திலான அதிகாரிகள் பேச்சில் இடம்பெறவேண்டிய தனது ராணுவப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இந்தியா, 30இல் இருந்து 15 ஆகக் குறைத்தது. இந்த மாத இறுதியில், எல்லைப் பிரச்சினை குறித்த பேச்சு நடக்க உள்ளது.

இந்நிலையில், சீனாவின் 'ஷின்ஹூவா' நாளிதழுக்கு அந்தநாட்டின் வெளியுறவு உதவி அமைச்சர் லியு ஜென்மின் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது;

இரு நாட்டுத் தலைவர்கள் மத்தியில் முக்கிய பிரச்சினைகளில் கருத்தொற்றுமையை ஏற்படுத்தவும், உயர் மட்ட அளவிலான பேச்சைத் தொடரவும், அரசியல் தரப்பிலான நம்பிக்கையை அதிகரிக்கவும், இருதரப்பு உறவில் கவலையை ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினைகளை முறையாகக் கையாளவும் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில் சீனா ஆர்வமாக உள்ளது. இவ்வாறு லியு ஜென்மின் தெரிவித்துள்ளார். (ந)

# அமெரிக்கா கண்டனம்

வாஷிங்டன்,ஜன.11

சி.ஐ.ஏ., உளவாளிக்கு ஈரானில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரானில் அமெரிக்காவின் உளவுத்துறையான சி.ஐ.ஏ.க்கு உளவு பார்த்ததற்காக ஹெக்மாட்டி என்பவருக்கு ஈரான் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. ஹெக்மாட்டியும் சி.ஐ.ஏ.வுக்கு உளவுபார்த்ததை நீதிமன்றில் ஒத்துக்கொண்டார். இந்நிலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் டோமி வீடர் கூறுகையில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது உண்மையானால் அது கண்டனத்துக் குரியது - என்றார். (ந)

# ஏமன் அதிபருக்கு பொது மன்னிப்பு



சானா,ஜன.11

ஏமன் அதிபருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு அந்நாட்டு அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஏமனின் அதிபராக கடந்த 33 ஆண்டுகளாக உள்ள அலி அப் துல்லா சலே அரசுக்கெதிராக கடந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மக்கள் கிளர்ச்சி செய்துவருகின்றனர். அமெரிக்கா உள்ளிட்ட அரபு நாடுகள் அதிபர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை அமைப்பு இவரது ஆட்சி குறித்தும் அங்கு நடந்த கலவரத்தினால் அப்பாவிகள் கொல்லப்படுவதற்கும் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில், அலி அப்துல்லா சலே மீது போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் உள்ளிட்ட புகார்கள் எழுந்துள்ளது. இதையடுத்து அவர் பதவி விலக முடிவு செய்துள்ளதாகவும் நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த சம்மதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்நாட்டு அமைச்சரவையில் இதற்கென வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக பி.பி.சி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (ந)

# ஈரானின் யுரேனிய செறிவூட்டல் உண்மையே

வியன்னா,ஜன.11

ஈரான் தனது போர்டோ என்ற இடத்தில் பூமிக்கடியில் யுரேனிய செறிவூட்டல் பணியைத் தொடங்கி விட்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகின.

இந்தத் தகவல்கள் உண்மைதான் எனத் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஈரானின் ஹோம் நகருக்கு வடக்கில் சிறிது தொலைவில் உள்ள போர்டோ நகரில், ராணுவத் தளத்துக்கு அருகில் பூமிக்கடியில், யுரேனிய செறிவூட்டல் தொடக்கப்பட்டதாக, அந்தநாட்டின் முக்கிய பத்திரிகை ஒன்று நேற்று முன்தினம் தெரிவித்தது. எனினும் இது குறித்த அதிகாரபூர்வத் தகவல் வெளியாகவில்லை.

இந்நிலையில், ஈரானின் யுரேனியச் செறிவூட்டல் பணி தொடக்கப்பட்டது உண்மைதான் என, சர்வதேச அணுசக்தி தொடர்பகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். போர்டோவில் உள்ள யுரேனியம் செறிவூட்டல் நிலையத்தில் யுரேனியம் 20 சதவீதம் வரை செறிவூட்டப்படும் எனவும் இது வரை ஈரான் 3.5 சதவீதம் வரைதான் யுரேனியத்தை செறிவூட்டியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யுரேனியம் 20 சதவீதம் வரை செறிவூட்டப்படும் போது அதில் இருந்து அணு ஆயுதங்கள் தயாரிப்பது வெகு எளிது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந)

# சாலமன்தீவில் நிலநடுக்கம்

சாலமன்தீவில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 6.6 அலகுகளாகப் பதிவானது. இருப்பினும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை என்று புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான தீவுகளின் கூட்டமைப்பாக விளங்கும் சாலமன் தீவின் 28,400 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள தலைநகர் ஹொனியாராவின் கிராகிரா நகருக்கு கிழக்கே 350 கி.மீ. தொலைவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஹவாயைச் சேர்ந்த பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தகவல் தெரிவித்துள்ளது. (ந)


இன்று ஆரம்பம்
தைப் பொங்கலை முன்னிட்டு
ஆண்டுதோறும்
சரவணா ரெக்ஸ்
இன் மாபெரும்
பிரமாண்டமான மலிவு விற்பனை
இடம்:
கே.கே.எஸ். வீதி தட்டாதெருச் சந்தியில்
இருந்து இடது பக்கமாக 300m தூரத்தில்
உள்ள கெங்காதரன் மருத்துவமனை முன்பாகவுள்ள
சிவப்பிரகாசம் வீதி (ஆடித் தள்ளுபடி நடைபெற்ற இடம்)
காலம் : 11.01.2012 முதல் 16.01.2012 வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல்
இரவு 7.30 மணிவரை
△ இந்தியன் திருமணப் பட்டு சாறிகள்
△ இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
△ இந்தியன் சில்க்ஸ் சாறிகள்
(Office ware Sarees)
△ இந்தியன் கொட்டன் சாறிகள்
(Office ware Sarees)
△ இந்தியன் பஞ்சாபிகள் பஞ்சாபித் துணிகள் மற்றும்
அனைத்து ஆடைத் தெரிவுகளும்
இவ் வருடம் முழுவதற்குமான விசேட தள்ளுபடி இந்த
ஆடித் தள்ளுபடி நடைபெற்ற விஸ்தீரணமான இடத்தில்
6 நாள்கள் மட்டுமே
தைப் பொங்கலை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து விசேடமாக
இறக்குமதி செய்யப்பட்டது.
Office ware Sarees Special Selection






அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
கோட்டைக்காடு, மல்லாகத்தை சேர்ந்த உதவி மின்சார
பொறியியலாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்,
வலி. தெற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்,
சண்முகநாதன் இரத்தினவடிவேல் J.P
அவர்களை இன்றைய 62 ஆவது பிறந்ததின நாளில்
மேன்மேலும் சேவைகள் பல புரிந்து பல்லாண்டு காலம்
வாழ்கவென சாளம்பை முருகன் துணைகொண்டு
வாழ்த்துகின்றோம்.
அருணாசலம் குடும்பம்
மல்லாகம்
(12869) (6-7-15)





நாங்கள் தேடும்
Team Player நீங்களா?
கட்டட ஒப்பந்தத்துறையிலும் அது சார்ந்த பொருள்களை விற்பனை செய்வதிலும் ஆர்வமுள்ளவர்களுக்கான வேலை வாய்ப்பு
★ தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ பயிலுநர்
- NCT Civil முடித்தவர் / கற்பவர்
- Auto Cad அறிவு கட்டாயமானது
★ சந்தைப்படுத்தல் உதவியாளர்
- G.C.E (A/L) கணித / உயிரியல் துறையில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது சந்தைப்படுத்தல் துறையில் 2 வருட முன் அனுபவமும் மொழித் தேர்ச்சி
- சாரதி அனுமதிப்பத்திரம்
★ அலுவலக/ களஞ்சிய உதவியாளர்
- G.C.E (A/L) வர்த்தகத்துறையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் பணி சார்ந்த அனுபவமும் மொழித் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
மேற்குறித்த துறையில் ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையைக் கீழ்குறித்த முகவரிக்கு 16.01.2012 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: வெளி மாவட்டத்தவர்களுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
Kajolanka (PVT) Ltd,
Engineering Solutions,
32/5, 3 rd Lane,
Power House Road, Jaffna.
KAJOLANKA
Engineering Solutions
(12865)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தானே' புயல் எதிரொலி 100 பேருக்கு வாந்திபேதி



புதுச்சேரியில் 'தானே' புயலின் பேரழிவைத் தொடர்ந்து நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகும் அபாய நிலையில் மக்கள்

புதுவை, ஜன.11

புதுவையில் 100 பேர் வாந்தி-பேதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கொலரா அறிகுறி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

புதுவையில் கடந்த 30 ஆம் திகதி தானே புயல் கரையைக் கடந்தபோது ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து தற்போது மெல்ல மெல்ல இயல்பு வாழ்க்கை திரும்புகிறது.

இந்தநிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு பூமியான்பேட்டை பகுதியில் குடிதண்ணீருடன் சாக்கடை நீர் கலந்ததால் 10 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

முதலியார்பேட்டை காமராஜர் நகரைச் சேர்ந்த காத்தாயி என்ற மூதாட்டி வாந்தி பேதியால் மரணமடைந்தார். மேலும் பலர் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டு அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

நேற்றுமுன்தினம் முதலியார்பேட்டை பட்டம் மாள்நகர், இந்திராநகர், பூந்தோட்ட வீதி, மாங்காளியம்மன் நகர், உப்பளம் தொகுதி முத்தமிழ் நகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 பேர் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டனர்.

அவர்கள் காலைமுதலே அரசு மருத்துவமனைக்கு வந்தனர். அவர்கள் உடனடியாக புதுவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பலர் தனியார் மருத்துவமனைக்கும் சென்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்த சுகாதாரத்துறை இயக்குநர் ராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் 3 விதமாக பிரிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முதல்கட்ட பாதிப்பு உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். 2 ஆவது, 3 ஆவது கட்ட பாதிப்பு உள்ளவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முதலியார்பேட்டைப் பகுதியில் சிறப்பு முகாம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குடிதண்ணீரை கொதிக்க வைத்து பருக வேண்டும். பழைய உணவுகளையும் உண்ணக்கூடாது. இந்த நோய் வைரஸ் மூலம் பரவுவது. அதை விரைவில் கட்டுப்படுத்தலாம்.-என்றார் அவர். (வ)

## போலிக் கடன் அட்டைகள் சென்னையில் ஒருவர் கைது

சென்னை, ஜன.11

மலேசியாவில் இருந்து 650 போலி கடன் அட்டைகளுடன் வந்தவரை சென்னை விமான நிலையத்தில் பொலிஸார் கைது செய்தனர்.

கோலாலம்பூரில் இருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் ஏர்இந்தியா விமானம் ஒன்று வந்தது. விமானத்தில் இருந்து இறங்கிய பயணிகளிடமும், அவர்கள் கொண்டு வந்த உடைமைகளையும் வழக்கம்போல் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அப்போது, ஆண்டியப்பன் முருகானந்தம் என்பவர் கொண்டு வந்த பொதியில் சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் இருப்பது தெரியவந்தது.

அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் 650 போலி கடன் அட்டைகளும், போலி ஏ.ரி.எம். அட்டைகளும் வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதற்கான ஆவணம் எதுவும் அவரிடம் இல்லை. அதனைத்தொடர்ந்து, சுங்க சட்டத்தின் கீழ் பொலிஸார் அவரை கைது செய்தனர். பின்னர், மேல் விசாரணைக்காக சென்னை மத்திய குற்றப் பிரிவு பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். (வ)

## மூடப்பட்ட கடைகளுக்கு கிடைத்தது யோகம்

தமிழ்நாட்டின் சென்னை தி.நகரில் முத்திரை வைக்கப்பட்டுள்ள கடைகளை தற்காலிகமாக திறக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.


சென்னை தியாகராய நகரில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள 26 வணிக வளாகங்களுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி சென்னை மாநகராட்சி முத்திரை வைத்து கடைகளை அடைத்தது.

இதனால் 500இற்கும் மேற்பட்ட கடைகளில் வியா பாரம் நிறுத்தப்பட்டதுடன் 5 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்தனர்.

இந்தநிலையில் பொங்கல் பண்டிகையை ஒட்டி கடைகளைத் திறக்க அனுமதிக்க வேண்டும் என்று தி.நகர் வியாபாரிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு நீதிபதிகள் பண்டாரி, தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், முத்திரை வைக்கப்பட்ட கடைகளை தற்காலிகமாக 6 வாரங்களுக்கு வியா பாரத்துக்காகத் திறக்கலாம் என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர். (வ)

## கட்டுப்பாட்டை இழந்த கார்: ஐயப்ப பக்தர்கள் மூவர் சாவு



தமிழ்நாட்டில் ஐயப்பன் பக்தர்கள் மீது கார் புகுந்ததில் சம்பவ இடத்திலேயே 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்றில் கடந்த 5 ஆம் திகதி சபரிமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். சபரிமலையில் ஐயப்பன் சுவாமியைத் தரிசனம் செய்துவிட்டு நேற்றுமுன்தினம் இரவு வானில் புறப்பட்டனர்.

அப்போது அவர்கள் பழனி முருகன் கோயிலுக்குச் செல்லத் தீர்மானித்துச் சென்று கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் காலை வானை வீதியோரம் நிறுத்திவிட்டு அருகில் உள்ள தோட்டத்து கிணற்றில் குளித்தனர். பின்னர் அவர்கள் பழனி செல்ல வான் அருகே சாமி கும்பிட்டுக்கொண்டு இருந்தனர்.

அப்போது செம்பட்டியில் இருந்து வத்தலக்குண்டு நோக்கி கார் ஒன்று வந்தது. திடீரென்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியோரம் சாமி கும்பிட்டுக் கொண்டு இருந்த ஐயப்பன் பக்தர்கள் கூட்டத்தில் புகுந்தது.

இதில் குருசாமி இளைய பெருமாள், பீட்டர் (வயது 65), தட்சிணாமூர்த்தி (வயது 65) ஆகியோர் அதே இடத்தில் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் கொழுஞ்சிநாதன், அருமைராஜ் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். (வ)



கடலூர் மற்றும் புதுவையில் 'தானே' புயலால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட்ட மத்திய குழுவினர்.

## 'இந்து' பத்திரிகை பிரதம ஆசிரியர் பதவி விலகினார்

சென்னை, ஜன.11

'இந்து' ஆங்கில பத்திரிகையின் தலைமை ஆசிரியரான என்.ராம் அந் தப் பதவியிலிருந்து விலகியுள்ளார். மேலும் இந்து பதிப்பாளர், அந்தக் குழுமத்தின் ஏனைய பத்திரிகைகளான 'பிஸினஸ் லைன், பிரண்ட்லைன், ஸ்போர்ட்ஸ்டார்' ஆகியவற்றின் ஆசிரியர் பொறுப்புகளில் இருந்தும் அவர் விலகியுள்ளார்.

இந்து குழுமத்தை நடத்தி வரும் கஸ்தூரி அண்ட் சன்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட குடும்ப மோதல் காரணமாக அவர் பதவி விலகியுள்ளார்.

இந்து நாளிதழின் புதிய ஆசிரியராக சித்தார்த் வரதராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கஸ்தூரி அண்ட் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர். இவர் அடுத்த வாரம் வியாழக்கிழமை இந்தப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அதே நேரத்தில் இந்த நிறுவனத்தின் இயக்குநராக என்.ராம் நீடிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## சோனியாவுக்கு மிரட்டல்

டில்லி, ஜன.11

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு ஈ-மெயில் மூலம் மிரட்டல் விடுத்ததாக 3 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்து டில்லி பொலிஸ் சூப்பிரண்டு பங்காஜ் கம்போஜ் தலைமையில் பொலிஸார் அதிகாரி மாநிலத்தில் உள்ள இணையத்தள நிலையங்களில் அதிரடிச் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள இணையதள நிலையத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு ஈ-மெயில் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டதை டில்லி பொலிஸார் கண்டுபிடித்தனர். மேலும், அந்த ஈ-மெயிலை அனுப்பியதாக 3 பேரை டில்லி பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## சென்னை விமான நிலையத்தில் தீ

சென்னை, ஜன.11

சென்னை விமான நிலையத்தில் நேற்றுக் காலை தீடீர் என்று தீப்பிடித்தது. ஆனால் அது உடனே அணைக்கப்பட்டதால் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் கடலோரக் காவல்படை விமானங்கள் நிறுத்தி வைக்கும் இடத்தில் நேற்றுக் காலை திடீர் என்று தீப்பிடித்தது. உடனே தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை ஊழியர்கள் தீயை அணைத்தனர். அதனால் தீ எங்கும் பரவாமல் விபத்து தவிர்க்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் பொருள்சேதமோ, உயிர்சேதமோ ஏற்படவில்லை. மின்கசிவால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று விமான நிலைய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (வ)

# அணை விவகார வழக்கில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது

மதுரை, ஜன.11

முல்லைப்பெரியாறு அணை விவகார வழக்கு உச்சநீதிமன்றத்தில் உள்ளதால் உயர்நீதிமன்றம் இதில் தலையிட முடியாது என்று மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்புக்கு மத்திய பொலிஸை நிறுத்த வேண்டும், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும், அணை பராமரிப்பு பணியில் ஈடுபடும் தமிழக பொறியியலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் விஜயகுமார், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்த போது, பொறியியலாளர் குடும்பங்களுக்கும், தமிழகத்தில் இருந்து கேரளா செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டு, இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் தமிழக, கேரள அரசுகளுக்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதிக்கு பிற்போட்டனர்.

இந்தநிலையில், கேரள அரசின் அட்வகேட் ஜெனரல் தண்டபாணி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆஜரானர், எதிரவரும் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட வழக்கை முன்கூட்டியே இப்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்படி நீதிபதிகள் சித்ரா வெங்கட்ராமன், கருப்பையா ஆகியோரிடம் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது, கேரள அரசின்சார்பில் பதில் மனுவை தண்டபாணி தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கடந்த 2006 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் பெரி யாறு அணை விவகாரத்தில் தற்போது எந்த நிலை உள்ளதோ, அந்த நிலையே நீடிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி உத்தரவிட்டது.

பின்னர் நீதிபதி ஆனந்த் தலைமையில் முழு சட்ட அதிகாரம் கொண்ட 5 பேர் கொண்ட குழுவை அமைத்து 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த மனு இந்த நீதிமன்றத்தின் எல் லைக்கு உட்பட்டதும் கிடையாது. அணைக்கு மத்திய பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற மனுவை ஏற்கனவே உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது. எனவே, இந்த மனுவை நிராகரிப்புச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் இயங்கும் சிவன் முன்பள்ளிக்கு ஆசிரியர் தேவைப்படுவதால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

விண்ணப்ப முடிவுதிகதி 24.01.2012.

தகைமைகள்:

I. O/L சித்தி
II. A/L சித்தி
III. 20-30 வயதுக்கு உட்பட்ட பெண்கள்
IV அருகில் உள்ளோர் விரும்பத்தக்கவர்கள்.

தகுதி உடையோர் சுயவிவரத்தினை சுன்னாகம் கிழக்கு, சனசமூக நிலையம், சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(12953) (6,7,45) நிர்வாகம்

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 09 ★ 08 ★ 1938



உதிர்வு 12 ★ 12 ★ 2011

### அமரர் பேரின்பமணி வாமதேவன்

கடந்த 12.12.2011 அன்று சிவபதமடைந்த பேரின்பமணி வாமதேவன் அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.01.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63/13, பரவைக்குளம் வீதி,
சிவன் வீதி,
திருநெல்வேலி.

த.பாலகிருஷ்ணன்
(சகோதரன் - ஆசிரியர்)

(17833) (45-7-6)

## உணவு சிற்றுண்டி வழங்கலுக்கான கூறுவிலை கோரல்

### வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சிவகுப்புகள், விழாக்கள், போட்டிகள் என்பவற்றுக்கு குறிப்பிடப்படும் வகைகளினைக்கொண்ட உணவுப் பண்டங்களை வழங்குவதற்கு தயாராக கூறுவிலை கோரப்படுகின்றது.

1. இதற்கான கேள்விப்பத்திரங்கள் 12/01/2012 தொடக்கம் 27/01/2012 மு.ப 10.00 மணி வரையும் ரூபா நூறு (100.00) மீளளிக்கமுடியாத வைப்புப் பணமாக செலுத்தி கேள்விப்பத்திரங்களை நேரடியாக வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ள முடியும்.
2. கேள்விப்பத்திரங்கள் யாவும் மூடிய பொதியிடப்பட்ட உறையில் ஒட்டப்பட்டு கடிதஉறையின் மேல் மூலையில் உணவுப் பண்டங்களுக்கான கூறுவிலை என குறிப்பிடப்பட்டு 27/01/2012 மதியம் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் 27.01.2012 பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் கேள்வி மனுவை சமர்ப்பித்தவரோ அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ நேரில் கலந்து கொள்ளலாம்.
4. கூறுவிலைகள் 2012 ம் நிதியாண்டு காலப்பகுதியின் முதல் ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும். சந்தை விலைமாற்றங் கள் ஏற்படாத விடத்து இக்கூறுவிலை 2012 ம் நிதியாண்டு முழுவதற்கும் நீடிக்கும் அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
5. சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளை பகுதியாக ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ முழுமையாக ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபை முழு அதிகாரம் உடையதாகும்.
6. வழங்கப்படும் உணவுப்பண்டங்கள் மிகவும் தரமானதாகவும் சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்டதாகவும் இருத்தல் மிக அவசியமாகும்.
7. தரம் குறைந்த அல்லது சுகாதாரமற்ற பொருள்களை விநியோகிப்பின் குறித்த பண்டத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படமாட்டாததுடன் வழங்குநரின் தெரிவு இரத்துச் செய்யப்படும்.
8. வழங்குநர்கள் எம்மால் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப் பட்ட எல்லா உணவுப்பண்டங்களையும் விநியோகிக்கும் திறமையுடையவராக இருத்தல் வேண்டும்.
9. பாடசாலைகளிலுள்ள கூட்டுறவு/நலன்புரி உணவுச்சாலைகளும் இக்கேள்வி நடைமுறையில் பங்குபற்றலாம். அவர்களுக் கும் மேற்கண்ட விதிமுறைகள் ஏற்புடையதாகும்.
10. உணவுப்பண்டங்கள் பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், பளை, கண்டாவளை, கிளிநொச்சி, வட்டக்கச்சி, இராமநாத புரம், பரந்தன் முரசுமோட்டை பிரதேசங்களுக்கு விநியோகிக் கப்பட வேண்டும்.
11. வழங்குநர்கள் தம்மால் விநியோகிக்கப்படக்கூடிய பிரதேசத்தை குறிப்பிடப்படுவதுடன் அப்பிரதேசங்களில் வழங்கல் மேற்கொள்வதற்கான கூறுவிலைகளை விரும்பின் தனித்தனியே குறிப்பிடலாம்.
12. வழங்குநர்கள் உணவு தயாரிப்பிலும் விநியோகத்திலும் குறைந்தது 4 வருட முன் அனுபவம் உடையவர்களாகவும் அதற்கான ஆதாரமும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

க.முருகவேல்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(C/7534) (6,7,10)

## வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தில் சகல வசதிகளுடன் இரு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0714447728 (12982) (6,7,45)

## மலிவு விற்பனை

தேக்கினால் ஆன கட்டில்கள் 6x6 3 கட்டில்களும் 6 x 4 3 கட்டில்களும் மெத்தை பெட்சீற் தலையகணையும் உறையும் 11.01.2012 - 12.01.2012 இரு நாள்கள் மலிவு விற்பனை.

தொடர்பு: 0713391374. கந்தர்மடச்சந்தி.

## வேலை வாய்ப்பு

வர்த்தக நிறுவனம் ஒன்றின் விற்பனைப் பிரிவின் கீழ் விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை கிடையாது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்..

தொடர்பு: 0217903283

## டொல்பின் விற்பனைக்கு

252 XXXX தொடரிலக்க டொல்பின் விற்பனைக்குண்டு. வெள்ளை நிறம் நீட்டுமொடல், Dual A/C, Alloy Wheel லீசிங் வசதிகள் உண்டு.

தொடர்பு: 077 5430190 (12959) (6,7,45)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No.1 புறொயிலர் குஞ்சுகள் 12.01.2012 மு.ப. 10 மணிக்கு விநியோகிக்கப்படும்.

தொடர்பு: செபஸ்ரியாம்பிள்ளை,
அல்வாய் மேற்கு, திக்கம் சந்தி.
T.P.: 0776090926

## அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Accountants, Lecturers, அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் உட்பட எத்தகைய உள்நாடு/ வெளிநாடு மணமக்கள் தேவைக்கும் தொடர்பு:- 0718475114. இல.03, யாழ்வீதி, சிறாம்பியடிலேன். (Cosy Restaurant Lane), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

தம்பிராசா நிஜீஸ்யுவராஜா என்பவரது தே.அ.அ. (632294476V) மானிப்பாய் சந்திக்கும், உடுவில் வீதிக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

த.மதன்ராஜ், உடுவில் வீதி, மானிப்பாய்.

## வீடு விற்பனைக்கு

கடுத்தலானை, இளவாலையில் 2பரப்பு காணியில் அமைந்த வீடு (கிணறு 3 பக்க மதில் உண்டு) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 199 1275
077 071 1867 (12839) (6,7,45)

## கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணம் / தென்மராட்சியில் அமைந்துள்ள பிரபல பீனிக்ஸ் பிளாஸ்ரிக் கம்பனிக்கு DSR ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தகைமை: G.C.E. A/L சித்தி
வயது:- 21 முதல் 28 வரை
8 மணி முதல் 10 மணிவரை நேரில் வரவும்

யாழ். ரெக்ஸ்,
இல.13 A, நவீன சந்தை, சாவகச்சேரி.

## வெற்றிடங்கள்

1. உணவு, குடிவகை பரிமாறுபவர்
வயது 18-30
ஆங்கிலம், தமிழ் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும் (சிங்களம் தெரிந்திருந்தால் நல்லது)
2. பொருள்கள் வாங்குவதற்குப் பாவிக்கும் வான் ஓட்டுவதற்கு ஓட்டுநர், தெளிவான வான் ஓட்டும் அனுமதிப் பத்திரத்தோடும் சுய விவரத் தொகுப்போடும், நற்சாட்சிப் பத்திரங்களோடும் நேரில் வந்து சந்திக்கவும்.

முகாமையாளர்.
Green Grass Hotel,
No.33 ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள்,பேட்டுக் குஞ்சுகள் 12.01.2012 வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:
1. நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 021 222 6944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், திம்பாளிகுளம், கிளிநொச்சி.
0776225944

## இரண்டாம் வருட நினைவலைகள்



மண்ணகம் 24★ 04 ★ 1952

விண்ணகம் 03 ★ 01 ★ 2010

### அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்

SLPS - I (முன்னாள் அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி)
திதி: அபரபட்சத்திருதியை (11.01.2012)

வருடம் இரண்டு சென்றாலும் எம்மை
வாட்டுகிறதே உங்கள் பிரிவு - ஆனாலும்
உங்கள் நினைவை எம் மனதில் நிறுத்தி
நீங்கள் நடந்தவழி நாம் நடப்போம்

கலைநகர்,
வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(12840) (2-6-7)

## ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 03 - 03 - 1933



ஆண்டவன் அடியில் 24 - 12 - 2010

அமரர்

### சின்னத்தம்பி கந்தசாமி

(ஜேர்மனி)

எம்மீது அன்பாய் இருந்தீர்
எமக்கு ஆதரவாய் இருந்தீர்
எமக்கு பெருமை தேடித்தந்தீர்
எம் இனிய தந்தையாய் ஆசானாய் தெய்வமாய்
எமக்குரியவராய் வாழ்ந்தீர். இன்று
எம்மை விட்டுப் பிரிந்து தெய்வமாகி விட்டீர்
ஓராண்டு முடிந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மடத்தடி,
கந்தரோடை.

குடும்பத்தினர், மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(ஜேர்மனி).

(12861) (6,7,10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 ★ 01 ★ 1945



விண்ணில் 24 ★ 12 ★ 2010

### அமரர் தாமோதரம்பிள்ளை சுப்ரமணியம் பேரின்பநாதன்

(யாழ்.இந்துவின் லண்டன் கிளை பழைய மாணவர் சங்க மூத்த தலைவர்)
திதி:- திருதியை 11.01.2012

குலமகனாய், திருமகனாய் எங்கள்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் எம்மைப் பேணிப் பாதுகாத்து
நல்வழிப்படுத்தி
நாம் வாழ நல்லனவெல்லாம் தேடித் தேடிச் செய்த
எங்கள் ஆசைப் பேரின்பத் தெய்வமே
ஆண்டொன்று அல்ல யுகமே சென்றாலும்
உங்கள் நினைவுகளை எம்
நெஞ்சங்களை விட்டகலா

உங்கள் ஆத்மா சாந்தியடைய கேசாவில் ஸ்ரீ முத்து விநாயகனை வேண்டுகின்றோம்.

41, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவலைகளில்
மூழ்கித் தவிக்கும்
குடும்பத்தினர்.


(12845)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## இப்படியும் ஒரு பிழைப்பு!

சிவப்பு நிற வாகனமொன்று அந்த ஒழுங்கையில் நின்றது. அந்த வாகனத்தின் முன்பக்கத்தில் ஒரு அம்மன் ஆலயத்தின் பெயர், முகவரி எழுதப்பட்ட பதாகை கட்டப்பட்டிருந்தது. அதில் வேட்டியணிந்து சந்தனப் பொட்டுக்களுடன் நாலைந்து இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் நின்றிருந்த இடம் ஒரு கள்ளுத் தவறணை. அதிலிருந்தவர்கள் ஒவ்வொருவராக உள்ளே சென்று வந்தனர். மறுபுறத்தே பிரதான வீதியில் கடைகள் வழியே அவ்வாகனத்தில் வந்த சிறுவர்கள் உண்டியல் குலுக்கி, தண்டற் பணம் சேகரித்துக் கொண்டிருந்தனர்.



இந்தக் காட்சி அண்மையில் யாழ்ப்பாணத்தின் சிறுநகரம் ஒன்றில் இடம்பெற்றது. இது போன்ற காட்சிகள் ஆங்காங்கே அரங்கேறிக் கொண்டு தானிருக்கின்றன. ஆலயங்களில் பக்தி பூர்வமாக வழிபடும் நிலைமாறி, ஆலயங்களை வைத்து, ஆலயங்களின் பேரில் பிழைப்பு நடத்தும் கைங்கரியம் காலங்காலமாக நடந்து வருகின்றது. தற்போது அது மேலும் அதிகரித்துள்ளது. அவ்வளவுதான்!

நமது மக்கள் ஆலயங்கள் மீது, அங்கு வீற்றிருக்கும் கடவுளர் மீது மிகுந்த பக்தியுடையவர்கள். கதிர்காமம் போகாமலே கதிர்காமக் கந்தனுக்கு விரதம் அனுஷ்டிக்கும் மக்கள் இங்குள்ளனர். 'அம்மா கதிர்காமத்திலையிருந்து வந்திருக்கிறன். அங்கை அன்னதானத்துக்கு ஏதாவது தர்மம் பண்ணுங்கோ' என்று கேட்டு ஒருவர் வாசல் வந்தாரானால் அரிசியோ,காசோ கொடுத்து அனுப்பாமல் விடமாட்டார்கள் எங்கள் பெண்கள். நயினாதீவு நாகபூசணி அம்மன் தேவஸ்தானத்தினர், தண்டலுக்கு வருபவர்கள் எவரையும் நாம் நியமிக்கவில்லை. அவர்களிடம் பண உதவி செய்ய வேண்டாம் என அறிவித்தாலும், நயினாதீவிலிருந்து வருகிறேன் என்றால் தர்மம் அளிக்கிறவர்கள் நமது மக்களில் பலர். அந்த நம்பிக்கையை, பக்தியை மிக அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் மதத்தின் பேரால் பிழைப்பு நடத்துவோரே! மிக லாவகமாக மக்களின் பக்தியை, அவர்கள் கடவுளருக்காக எதையுந் தரும் தன்மையைப் புரிந்து கொண்டு செயலாற்றும் வல்லமையும் தந்திரோபாயங்களும் அவர்களுக்கே உரித்தான சிறப்பான இலட்சணங்களாகும்.

நல்லூர் திருவிழா நேரம் கிழக்கூரிலிருந்து ஒரு லான்ட்மாஸ்ரரில் சுவாமியொன்றை வைத்து ஊர்வலமாக எடுத்து வருவார் ஒருவர். கிட்டத்தட்ட மூன்று மாதம் அவ்வாகனம் ஊரூராக வலம் வரும். அன்பளிப்புப் பணம் சேரும்.அவரது வாழ்க்கை அந்தச் சுவாமியை ஊர்வலமாகக் கொண்டு சென்று சேகரிக்கும் பணத்தில்தான்! வருடந்தோறும் இது நடைபெறும்.

சென்ற வருடம் மார்கழி மாதத்தில் ஒருவர் காவியுடை, தாடியுடன் எனது வீட்டிற்கு வந்தார். வந்தவரின் கையில் சிவலிங்கம் இருந்தது.சிவலிங்கத்தை ஒரு தட்டத்தில் வைத்து இருந்தார். அதனுடன் விபூதியும் வைக்கப்பட்டிருந்தது. வந்தவர் ஏதோவொரு ஆலயத்தின் பெயரைச் சொல்லி விபூதி தர முயன்றார். நான் அதை வாங்கவில்லை.மாறாக நான் அவரிடம் அவர் பற்றிய கேள்விகளைக் கேட்டேன். மழுப்பி மழுப்பிப் பதில் சொன்னவர் ஒரு கட்டத்தில் தரா விட்டால் விடுங்கோ ஐயா. தேவையில்லாமல் கதையாதேங்கோ என்று சொல்லி விட்டு அடுத்த வீட்டை நோக்கிச் சென்றார்.

இரண்டு மணி நேரத்தின் பின்னர் மீன் வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றேன். அங்கு ஏற்கனவே பார்த்த காவியுடை ஆசாமி நின்றார்.காவியுடைக்குப் பதிலாகச் சாரம் அணிந்திருந்தார். என்னைக் கண்டதும் வாங்கிய மீனுடன் மெதுவாக அப்பால் சென்றார். நான் மீன் வாங்கி விட்டுத் திரும்பும் போது அவர் வந்த சைக்கிள் மின்சாரக் கம்பமொன்றில் சாத்தி நிறுத்தப்பட்டிருந்தது. அந்தச் சைக்கிளில் தொங்கிய பையுக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த காவியுடை தெரிந்தது.

'சத்தியந் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார் என்று வரும் எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' என்ற பாடலின் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன. கடவுள் கருணை நிறைந்தவர் அல்லவா! அதனால் தான் இந்தப் பிரகிருதிகளுக்காக ஊரூராக அலைகின்றாரோ? வாழ நினைத்தால் வாழலாம்; வழியா இல்லைப் பூமியில் எனப் பாடிக் கொண்டு எவ்வழியிலும் வாழும் ஆசாமிகளுக்கு கைகொடுக்க இருக்கவே இருக்கிறது சமயம் என்றாகிவிட்டது. பல காலமாக இருக்கும் இந்த 'வசதி' யைப் பயன்படுத்தும் கில்லாடிகள் இப்போது பல மடங்கு அதிகரித்து விட்டனர்.

விழிச்சான் குஞ்சு.

# பிரதேச பண்பாடு தெரிந்தவர்களே கல்வி அதிகாரிகளாக வரவேண்டும்

## - கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் -

நாவற்குழி ஜன.11

எமது பிரதேசத்தின் பண்பாடு, பொருளாதார, வாழ்க்கை முறைகளை விளங்கிக் கொண்டோர் நிர்வாக சேவை அதிகாரிகளாக வரவேண்டும். இதனை அடைவதற்காகவே வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்காக விசேடமாக இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளைத் தெரிவு செய்யும் பரீட்சைக்கு வழிப்படுத்தல் வகுப்புக்களை ஆரம்பித்துள்ளோம். இவ்வாறு வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும், ஆறுதல் நிறுவனத்தின் இயக்குநருமாகிய சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கென விசேடமாக இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிப்படுத்தல் வகுப்புக்களை ஆறுதல் நிறுவனத்தின் மூலம் யாழ்.புதிய உயர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே சுந்தரம் டிவகலாலா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:

1970 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவைக்கு 110 தமிழர்கள் தெரிவாகி இருந்தனர்.

தமிழ் பரீட்சார்த்திகள் உயர்வான திறமைகளை வெளிப்படுத்தி அதிகம் பேர் தெரிவாகினர்.

நாட்டின் நாலா பாகங்களிலும் அரச சேவையின் உயர் பதவிகளிலெல்லாம் தமிழர்கள் இருந்தனர்.

நாட்டில் உருவான பிற்காலச் சூழ்நிலையில் எம்மவர் உயர் சேவைப் போட்டிப் பரீட்சைகளில் திறமை காட்டுவது பலவித காரணங்களால் குறைந்து போனது அது ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.

வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கென இலங்கை நிர்வாக சேவைக்கு விசேடமாக 60 பேரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்தின் பண்பாடு, பொருளாதார,வாழ்க்கை முறைகளை விளங்கிக்கொண்டவர்கள் நிர்வாக சேவை அதிகாரிகளாக வரவேண்டும்.

இச் சமூக நோக்கத்தை அடைவதற்காகவே வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்காக விசேடமாக இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளைத் தெரிவு செய்யும் பரீட்சைக்கு வழிப்படுத்தல் வகுப்புக்களை ஆரம்பித்து உள்ளோம்.

பொது அறிவு,பொது உளச்சார்பு, முகாமைத்துவ உளச் சார்பு, கட்டுரையும் சுருக்கமும் ஆகிய பாடங்களில் நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களை எமது நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

சமூகத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளோரை முன்னுக்குக் கொண்டு வருவதனை அரச சேவைக்கு தெரிவாகவுள்ளோர் மனதில் கொண்டு கடமையாற்ற வேண்டும்.

நலிவடைந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் ஒருவராக நீங்கள் உருவாகுவதே எம் தாய் மண்ணுக்குச் செய்யும் சிறந்த சேவையாகும்.

ஆறுதல் நிறுவனத்தின் கல்விப் பயணத்தில் இத்தகையதொரு பரீட்சைக்கு எமது மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றோம் - என்றார். (எ-121)

# தமிழர்கள் கலைகளை வளர்த்தெடுக்க வேண்டும்

## - மரிய சேவியர் அடிகளார் -

புலம்பெயர் தமிழர்கள் தமது கலைகளை வளர்த்தெடுக்க வேண்டும். ஏனெனில் ஓர் இனத்தின் பண்பாடு, பாரம்பரியங்கள், மொழி ஆகிய கலைகள் மூலம் பிரதிபலிப்பை. இனத்தின் தனித்துவமான அடையாளத்தை எடுத்துக்காட்டுகின்றன என திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள் தெரிவித்தார்.

செல்வி.சுகாஸ்னி ஸ்ரீகுமார், சௌமி ஸ்ரீகுமார் சகோதரிகளின் 'சலங்கையின் நாதம்' எனும் அரங்கேற்றம் அண்மையில் திருமறைக்கலாமன்றத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மரியசேவியர் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் எமது நாட்டில் எமது இனத்திற்கு உரிய கலைகளை வளர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தமது வரவை பதிவு செய்வது மட்டுமல்ல தாம் வாழ்ந்தற்கான அடையாளங்களையும் பதிவு செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிறந்தோம் வளர்ந்தோம் என்றில்லாது ஏதோ ஒரு முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எம்மவர்களைப் புலம்பெயர வைத்தாலும் புலம் பெயர்ந்த மண்ணில் நமது வேர்களை அழிய விடாமலும் முகவரிகளை தொலைத்து விட்டாலும் எமது அடையாளங்களை கட்டிக் காத்து வரவேண்டும்.

கடந்த ஆண்டிலிருந்து புலம்பெயர்ந்த மண்ணின் விழுதுகளின் கலை செயற்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கிறது எமது மன்றம். ஆர்வம் படைத்தவர்கள் எமது மன்றத்தில் பயிலவும் அரங்கேற்றங்களை மேற்கொள்ளவும் முடியும் - என்றார். (எ-311)

# நாணயக்குற்றி அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.11

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அண்மையில் மார்கழித் திருவெம்பாவைத் திருவிழா இடம் பெற்றது.

இந்தத் திருவிழாவின் போது புதிதாக வெளியிடப்பட்ட தங்க நிறத்திலான ஒரு ரூபா நாணயக் குற்றிகளால் அபிஷேகம் இடம் பெற்றமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

வருடந்தோறும் சிறப்பாக இடம்பெற்றுவரும் இந்த திருவெம்பா நிகழ்வில் விசேட அபிஷேகங்களும், பூசைகளும் நடராஜப் பெருமானுக்கு நடத்தப்படுவது வழமை.

அந்தத் திருவெம்பா நிகழ்வில் அதிகாலை நேரம் இடம் பெற்ற அபிஷேகத்தில் என்று மில்லாதவாறு நாணயக்குற்றிகளால் அபிஷேகம் இடம்பெற்றது.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியை பெருமளவான பக்தப் பெருமக்கள் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-313-251)

# தொலைந்துவிட்ட கலைகளை மீளக்கட்டி எழுப்புவோம்

## - வடமாகாண கல்விப் பணிப்பாளர் -

யாழ்ப்பாணம்,ஜன.11

கடந்த காலங்களில் நாம் தொலைத்துவிட்ட எமது கலைகளை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன் வலயங்கள் தோறும் கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதனால் மாணவர் சமுதாயம் அதனைப் புதிதாக ஏற்று கலைகள் அழிந்து விடாது பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்த பௌர்ணமி நாள் கலைநிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்திய போது வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

முன்னோர்கள் அறிமுகப்படுத்திய கலைகளை கடந்த 30 வருட கால இடைவெளியில் தொலைத்துவிட்டதால் கிராமத்தின் பெருமைகளையும் அங்குள்ள மக்களின் சந்தோஷங்களையும் இழந்து விட்டோம்.

அரச, தனியார் சார்ந்த நிறுவனங்கள் என கடந்த காலங்களில் போட்டிபோட்டு இரவு நேரங்களில் கூட கலை நிகழ்வுகளை நடத்தி வந்தோம். ஆனால் தற்போது அவற்றைக் காணமுடியாது உள்ளது.

எனவே நாம் தொலைத்துவிட்ட சந்தோசங்களையும், கலைகளையும் மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன் கடந்த 12 மாதங்களாக ஒவ்வொரு வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மத்தியில் கலை நிகழ்வுகளை நடத்திவந்தோம்.

அத்துடன் கலைகளை பண்பாட்டை நாம் மதிக்கப் பழக வேண்டும். அனைத்து மதங்களும் வேறு வேறு சிந்தனைகள், கடவுள் என இருந்தாலும் அனைவரும் ஒரே நோக்குடன்தான் மத வழிபாட்டை மேற்கொள்கிறார்கள் எனவே இனம், மதம், மொழி வேறுபாடின்றி எமது பிரதேசக் கலைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

நாட்டுக் கூத்துப் போன்ற கலை நிகழ்வுகள் மறைந்து போய் விட்டன அத்தகைய பாரம் பரியமான கலைகளை சமூகத் திற்கு மீளவும் எடுத்துக்காட்ட வேண்டும். விசேட தேவைக் குட்பட்டவர்களையும் ஒதுக்கிவிடாமல் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கொடுத்து மதிக்கப் பழகவேண்டும்- என்றார். (எ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல் -
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-5679731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 567 3377,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பொறுப்புணர்வு தேவை

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து ஆறு என்ற எண்ணுக்குக் குறைந்தபோது பலரும் பெரிதாகக் கவலைப்பட்டார்கள். அரசியல் கட்சிகள் போர்க்கொடி தூக்கின. நாடாளுமன்றத்தில் சொற்கள் பறந்தன. இனவாத நடவடிக்கை என்று விமர்சிக்கப்பட்டது. பின்னர் அது மறக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கான 2010 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இருந்து 3 லட்சத்து 84 ஆயிரம் பேர் நீக்கப்பட்டமையே நாடாளுமன்ற உறுப்பினர்களின் குறைப்புக்குக் காரணமானது. 2011ஆம் ஆண்டில் மீண்டும் 41ஆயிரம் வாக்காளர்களைப் பட்டியலில் இருந்து நீக்கும் நிலைமை ஏற்பட்டது. அதன் பின்னர் சில தொண்டு நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தின. மக்களை வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவை வலியுறுத்தின; அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டன.

இதன் அடிப்படையில் இப்போது சுமார் 30 ஆயிரம் பேர் மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படும் நிலை தோன்றியுள்ளது. அதாவது பட்டியலில் இருந்து நீக்கப்பட இருந்த வாக்காளர்களில் முக்கால் பங்கினர் இந்த மாவட்டத்தில் வாக்குரிமையைப் பெறும் தகுதியைக் கொண்டிருந்திருக்கிறார்கள், ஆனால் பதியப்படாமல் இருந்திருக்கிறார்கள் என்பதே அதன் அர்த்தம்.

மாவட்டத்தில் உள்ள பலரும் தம்மை வாக்காளர்களாகப் பதியாமல் விட்டதற்கு, இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. ஒன்று, தேர்தல் மற்றும் வாக்காளர் பதிவு என்பவற்றில் மக்கள் அக்கறையற்று இருந்தமை. மற்றொன்று கிராம அலுவலர்கள் தமது பகுயிலுள்ள மக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்ய ஊக்குவிக்காமை அல்லது அந்தக் கடமையில் இருந்து தவறியமை.

சில கிராமங்களில் ஆயிரக்கணக்கில் வாக்காளர்கள் பதிவு செய்யப்படாமல் விடப்பட்டனர். சில இடங்களில் பல குடும்பங்கள் ஒட்டுமொத்தமாகப் பதிவுகளில் இருந்து காணாமற்போயுள்ளன. தேர்தல் திணைக்களம் இவற்றைத் தேடிப்பிடித்து, காரணங்களை ஆராய்ந்தபோது கிராம அலுவலர்களின் அக்கறையின்மையே இந்தத் தவறுகளுக்குக் காரணம் என்பது தெரியவந்துள்ளது.

வருடாந்தம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரை கிராம சேவகர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் படிவங்களை வழங்கி பதிவுகளை மேற்கொள்ள வேண்டியது கடமை. வடக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த நடைமுறை இப்போதும் பின்பற்றப்படுகின்றது. ஆனால், இங்கு மட்டுமே போரைக் காரணம்காட்டி இந்தகைய நடைமுறைகள் கைவிடப்பட்டிருந்தன. இப்போதும் தொடர்கிறது.

போருக்கு முன்னரான காலத்தில் யாழ்ப்பாணத்தில் கூட அந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்ததாகவும், இப்போது வாக்காளர்கள் கிராம அலுவலரைத் தேடிச்சென்று படிவங்களை நிரப்பிக் கொடுக்கும் நடைமுறையே இருப்பதாகவும் மூத்த கிராம அலுவலர் ஒருவர் தெரிவிக்கிறார். ஆகமொத்தத்தில் வாக்காளர் பதிவு விடயத்தில் கிராம அலுவலர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பது தெளிவாகியுள்ளது. அதிலும் சிலர் மிக மோசமாக நடந்துகொண்டுள்ளனர். மக்கள் பூரணப்படுத்திக் கொடுத்த வாக்காளர் படிவங்களைக் கூட உரிய வகையில் தேர்தல் திணைக்களத்திடம் அவர்கள் சேர்ப்பிக்காமல் விட்டிருக்கிறார்கள்.

இனத்துக்காகச் செயற்படவேண்டும் என்று இல்லாவிட்டாலும் தமது பொறுப்பை முழுமையாகச் நிறைவேற்றுவதற்கு கிராம அலுவலர்களும் ஏனைய அரச அதிகாரிகளும் முன்வரவேண்டும். இல்லையேல் நாம் எல்லாவற்றையும் இழந்து தொலைந்துபோவது நிச்சயம் நடக்கும். இந்தத் தவறுகளுக்கு கிராம அலுவலர்கள் கடமை தவறியமை மட்டும் காரணமாகிவிட முடியாது. அவர்களை வழிநடத்த வேண்டிய பிரதேச செயலர்களும் பொறுப்புணர்ந்து நடந்திருக்கவேண்டும். இந்த நிலை தொடர்ந்தால் தமிழனின் தலைவிதியை நொந்துகொள்வதைத் தவிர வேறு வழி இருக்காது.

# உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்....

செந்தூரி

"இருப்பாய் தமிழா நெருப்பாய் - நீ, இழிவாய்க் கிடக்க செருப்பா நீ", இவையும்கூட தென்னிந்தியச் சினிமா வரிகள்தான். அனுபவித்துக் கொண்டிருக்கும் "அமைதிக்கு(?)" பங்கம் ஏற்படுத்தும் "சொல் வன்முறைகள்" எனும் பெயர் கொண்டு, இந்தத் தேசத்தின் ஆள்வோர் எம் காதுகளுக்கு எட்டவிடாமல் செய்துவிட்ட பாடல் ஒன்றின் வரிகள் இவை.

பதினாறு வயதேயான ஈழச் சிறுமி "புனிதவதி", தசைவிரும்பிச் சிறுமைகளால் சிதைக்கப்பட்ட கொடூரத்தை உலக அரங்குகளில் வெளிச்சம் போட்டு காட்டும் தென்னிந்திய படைப்புக்களில் ஒன்றான *உச்சிதனை முகர்ந்தால்* திரைக் காவியத்தில், எம் மண்ணின் வேருக்குரிய உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தனின் உதடுகள் ஆத்திரத்தோடு வீசியெறிந்த வார்த்தைகள் அவை. "அபச்சாரமான" சொற்பிரயோகங்கள் என்ற விற்பனைச் சுட்டியோடு இலங்கைக்குள் தடை செய்யப்பட்ட தென்னிந்திய வருகைகளுக்குள் அதுவும் ஒன்றாகிப்போக, முதன்மைக் காரணம் - கதையம்சம்.

தமிழர் தரப்புகளிடம் தற்போதுள்ள கதையம்சத்தில், வெறுமையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதே உண்மை. ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட வெற்றிடம், அகில உலக நாடுகளில் போதுமான ஆதரவை ஏற்படுத்தி, அத்திபாரம் இடமுடியாத - அங்கீகாரமின்மை, சலுகைகளுக்காகச் சளைக்காது சாமரம் வீசும் சிறுபான்மைப் பிரதிநிதிகள், உரிமைப் பகிர்வு பற்றிப் போதுமான அரசியல் தெளிவினை மக்களிடம் விதைக்கத் தவறும் தமிழ்த் தேசிய அரசியலாளர்கள் என இலகுவில் சமாளித்துவிட முடியாத சதுரங்கச் சிக்கல்கள் தமிழனின் மூளைக்குள் மூச்சு விடாமல் முனகிக் கொண்டே கிடக்கின்றன.

இந்தத் தமிழ்த் தேசிய அரசியல் வெறுமையை நன்குணர்ந்து வைத்துள்ள அடக்கியாளும் பேரினம், வெளியுலகச் சக்திகளிடம் இருந்து, சாதுரியமான தனிமைப்படுத்தல்கள் மூலம், தீவுக்குள்ளான தமிழினத்தைத் தொடர்ந்து "கதையம்சமில்லாத" வெற்று நிறநிரப்பல்களாகவே பேண விரும்புகிறது.

பிறவுலகத் தேசங்களிலிருந்து, தொடர்ந்து தமிழனையும் தமிழனின் பிரச்சினைகளையும் பேசிவரும் ஊடகங்களில் இருந்து, தன் ஆளுகைக்கு உட்பட்டவர்களைத் தூரப்பேணுவதன் மூலம், தமிழ்த் தேசிய உணர்வு மட்டத்தில் தாழ்நிலை ஒன்றைக் கொண்டுவர முடியும் எனும் கனவின் வெளிப்பாடுகள் பலப்பல.

### எழுத்துக்கும் தடை

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குள் தருவித்து விற்பனை செய்யப்படுகின்ற தமிழ், ஆங்கில வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் எண்ணற்றவை. 'ஹிந்து' பத்திரிகையின் சகோதர ஊடகங்கள் தவிர ஏனைய பெரும்பாலான இந்தியப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழுணர்வில் சற்றும் சளைத்தனவல்ல.

இந்திய ரூபா மதிப்பில் வெறும் பதினைந்து தொடக்கம் இருபதுக்கு உட்பட்ட பெறுமதியான தனி இதழ்களின் இலங்கை விலை ரூபா நூறி [illegible] மதிப்பு, முக்கிப் பார்த்தாலும் இலங்கைப் பெறுமதியில் அறுபதைத் தாண்டாது. மொத்த விற்பனையில் தரகர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அடிக்கும் சுளைப் பணத்துக்கு சற்றும் பெறுமதியில்லாமல் வெற்றிதழ்களாகவே புத்தகக் கடைகளில் "தூக்கில் தொங்குகின்றன" சஞ்சிகைகள்.

> "விடுதலையுணர்வுகள் சம்பந்தமான, ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைச் சிக்கல்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், தொடர்கள், முகப்புச் செய்திகள், எவையாயினும் அவற்றில் வந்தால் இரக்கமின்றிக் கிழித்தகற்றப்படுகின்றன.

விடுதலையுணர்வுகள் சம்பந்தமான, ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைச் சிக்கல்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், தொடர்கள், முகப்புச் செய்திகள், எவையாயினும் அவற்றில் வந்தால் இரக்கமின்றிக் கிழித்தகற்றப்படுகின்றன. ஆக, தமிழ்த்தேசிய உணர்வு ஊட்டப்படக்கூடாது, ஆனால் விற்பனையின் மூலமான "கொள்ளை லாபம்" மட்டும் கொத்தாக வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறது ஆளும் தரப்பு. அதன் இந்தக் குறுகிய நலனில்கூட அடக்கு வாதம் தெறித்துத் தெரிகிறது.

### காண் ஒளிக்கும் தடைதான்

தனியே எழுத்து ஊடகங்களில் மட்டுமின்றி, கட்புல செவிப்புல ஊடகங்களிலும் வருமானம் பார்க்கும் வழிகளை அடைத்துவிடாமல், பெறுமானம் மிக்க ஈழப் பிரச்சினை சம்பந்தப்படும் நிகழ்வுகளையும் அலைவரிசைகளையும் நாசூக்காகத் தவிர்த்துவிடும் இரட்டைப் போக்கும் காணப்படுகிறது.

இலங்கைக்குள்ளான செய்மதி அலைவரிசை வழங்குநர்களிடம் தடை செய்யப்படவேண்டும் எனும் பட்டியலிட்ட அலைவரிசைகளும், குறித்த நேரத்தில் மட்டும் காண்பிக்கக்கூடாது என்று பட்டியலிட்ட அலைவரிசைகளும் இன்றும் நடைமுறையிலுண்டு. இவையனைத்திற்கும் மேலாக மின்னியல் ஊடகங்களின் உச்சப் பயன்பாட்டின் ஊடாக, ஆசியாவைத் தாண்டிய ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் மேற்குலகு வாழ். தமிழ் ஊடகங்கள் வட பகுதி மக்களின் வரவேற்பறைகளை ஆக்கிரமிப்பதையும் சற்றும் விரும்புபவர்களல்லர் எம் எஜமானர்கள்.

### இணையத்துக்கும் தடை

இணையத்தளப் பாவனை, சமூக வலைத்தளங்களின் பெருக்கம், தொலைத் தொடர்பாடலின் தலைமுறை தாண்டிய வளர்ச்சி என்பவற்றின் ஊடாகக்கூட அடிமைச் சமூகத்தின் புத்திக்குள், அத்துமீறும் சித்தாந்தம் துளிகூட விதைக்கப்படக் கூடாது என்பதற்கான பல்வேறு பகீரதப் பிரயத்தனங்களைப் பரீட்சார்த்தத்தில் இறக்கியுள்ளது அடக்கியாள நினைக்கின்ற அரசு.

"புரட்சிக்கு" பலப்படுகின்ற சுபாவத்துக்கு ஏறத்தாழ அடிமைகளாகியே போய்விட்ட, கம்யூனிஸ்ட் சிவப்பின் "முன்னாள்" புரட்சியாளர்களும், "இந்நாள்" ஆக்கிரமிப்பாளர்களுமான சீனாவின் தொழில்நுட்ப உதவிகளோடு இணையப் பாவனையில் தமக்கு நெருக்கமில்லாதவர்களை இலங்கை இணையத்துள் அனுமதிக்காத தடையைக் கொண்டுவர முனைகிறது.

### முத்திரைக்கும் தடை

ஐரோப்பிய தேசங்களில் வாழும் எம்மினத்தோர், தனியார் அஞ்சல்துறையின் சார்பில் வெளியிடும், ஈழ தேசத்தின் சின்னங்களைத் தாங்கிய தபால் தலைகளைக்கூட "கோள்" சொல்லி நிறுத்தும் நொண்டிச் சாட்டுநர்களாக மாறிவிட்ட வெளியுறவு அதிகாரிகளை ஏளனத்துடன் கணிக்கிறது மேற்குலகு.

தற்போதைக்கு அந்த முத்திரைகளை ஒட்டிய பொதிகளை இங்கு அனுப்ப வேண்டாம் என்று பிச்சை கேட்கும் பேரவலத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் கலப்படமற்ற இனவாதிகள்.

தொழில்நுட்ப வளர்ச்சிகளின் உச்சத்தில் தூளி கட்டி, பாரிஸுக்கும் பொத்துவிலுக்கும் வெறும் ஒற்றைக் கணப் பொழுதில் விரல்களால் உன்னி ஊஞ்சலாடி விட்டுவரும், சமூக வலைத்தளங்கள் உட்பட்ட செய்தி இணையத் தளங்கள், நாடு கடந்த தமிமீழ அரசின் உத்தியோகபூர்வ இணையத் தளங்கள் எல்லாவற்றையும் தடை செய்துவிடத்தான் துடிக்கின்றனர்.

இந்த ஏற்பாடுகளின் முன்னோட்டமாக, இலங்கையின் செய்திகளைப் பரப்புரைக்கும் இலங்கைக்குள்ளான உரிமத்தைக் கொண்டுள்ள இணையங்களைப் பதிவு செய்வதற்கான முழுமூச்சான முயற்சிகளிலும் இறங்கியுள்ளனர்.

### அடக்குமுறை வடிவங்கள்

சுற்றி நடப்பது எதையும் அறியாத, சோற்றுக்கும் படுக்கைக்கும் இடையிலான தூரத்தை நாள்களால் எண்ணிக் கழிக்கும் வெற்றுப் பதுமைகளாகத் தமிழனை அழகு செய்யும் ஒப்பனைக் கலையின் தொடக்கம் இது.

வார்த்தைகளுக்கும் இசை வடிவங்களுக்கும் காணொளிகளுக்கும் (வீடியோ) கூட இலகுவில் அச்சப்படும் அடக்கியாள்வோரின் படபடப்பு, தமிழன் சென்று கொண்டிருக்கும் பாதை சரியானதே என்பதற்கான சத்தியத் திசை காட்டி.

முன்னாள் அத்துமீறல்களாகப் போராடியவர்களை, இன்றைய அடங்கிய ஊமைகளாகப் பேணி வருவதன் நீடிப்புத் தேவையை கருத்தில் கொண்ட இந்த வகையான அடக்குமுறைகள் எமக்குப் புதிதல்லவே!

ஆயினும் தமது தரப்புக்கு எதிரான கருத்துக்களைத் தாங்கிய வசனங்களையும் பாடல் வரிகளையும் வெட்டியெறிந்துவிட்டு திரைக்கு விடுவதும் புத்தகங்களின் பக்கங்களைக் கிழித்தெடுத்துவிட்டு விற்பனைக்கு விடுவதும் பொருளீட்டலின் அதிய ழிவுத் தனமில்லையா?

### புரட்சியைச் சிதைப்பதே நோக்கம்

தமிழனும் தமிழினைப் பேசும் வார்த்தைகளும் செம்மொழிப் பெருமை கொண்ட அருந்தமிழும் வேண்டாம் என்று கட்டுப்பாடு விதிப்பவர்கள், பிறநாட்டு ஊடக வெளியீடுகளை முற்றிலும் நிறுத்திவிட வேண்டியதுதானே?

ஈழத் தமிழர்களின் பொழுதுபோக்கு வழிகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம் என்று, "நனைகின்ற ஆடுகளுக்காய் அழுகின்ற ஓநாய்களின்" உண்மை நோக்கங்கள் எவை?

போராட்டக் குணத்துக்கும் புரட்சிச் சிந்தனைகளுக்கும் பதிலீடாக, வசதி வாய்ப்புகளின் சுகபோகத்தை விதைத்து தனித் தேசிய உணர்வைச் சிதைப்பதும், தம்மைக் கால் கழுவி வயிறு பிழைக்கும் கைக்கூலிகளுக்

(27ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு பனிப்போருக்குள் உலகம்

*பிரிட்டனின் 'தி கார்டியன்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.*

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மீதான போரின் பின்னர் அமெரிக்காவின் பாதுகாப்புத் தந்திரோபாயம் தொடர்பாக அறிவிப்பதற்காக இந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இராணுவத் தலைமையகமான பென்ரகனிற்கு வருகை தந்தார்.

அமெரிக்க இராணுவம், புதிய நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவால்கள், ஒரு தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகளின் பின்னர் முன்னுரிமைகளை மாற்றுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். எனினும் 'சீனா' என்ற சொல்லை அவரது உரையின் எந்த இடத்திலும் கேட்க முடியவில்லை.

இந்தச் சொல்லை அவர் திட்டமிட்டு விட்டமைக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இது தவறான கருத்தாக்கத்திற்கு வழிவகுக்கின்றது. உலகில் அமைதியை ஏற்படுத்துபவரான, தேர்தலில் மீளவும் போட்டியிடுகின்ற அரசியல்வாதி என்ற வகையில், சீனாவுடன் பனிப்போர் ஒன்றை ஆரம்பிப்பதற்கான சமிக்ஞையைக் காட்ட ஒபாமா விரும்பவில்லை.

ஆனால் ஹவாயில் பிறந்த ஒபாமா ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் செல்வாக்கைச் செலுத்தும் நோக்குடன் சீனாவால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தந்திரோபாயத்தையும் தோற்கடிக்க நிச்சயம் முயற்சிப்பார். அண்மையில் ஒபாமா மேற்கொண்ட ஆசியப் பயணத்திலிருந்து அது தெளிவாகின்றது. அமெரிக்கத் தந்திரோபாயக் கொள்கையானது முக்கியத்துவம் மிக்க ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் மீது அதிக கவனத்தைக் குவித்துள்ளது.

அமெரிக்கப் படைகளை ஈராக்கிலிருந்து எடுத்த கையோடு சீனாவுடன் ஒரு போரை ஆரம்பிப்பதில் படைத் தளபதிகளின் தலைவரான ஜெனரல் மாட்டின் டெம்ப்சிக்கு எந்த ஆர்வமும் இல்லை. ஆனால் சீனாவின் பாதுகாப்புச் செலவினங்கள் ஆண்டு தோறும் அதிகரித்து வருவதை டெம்ப்சி நன்கறிவார். "சீனாவின் இந்தத் துரித வளர்ச்சியின் மூலம் இந்தப் பிராந்தியத்தில் ஏற்படும் மோதல்களைத் தவிர்ப்பதற்கான தந்திரோபாயக் கொள்கைகளை அதிக கவனத்துடன் வகுக்க வேண்டும்" என்று அவரது ஆவணம் ஒன்று கூறுகின்றது.

1945ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா தனது அதிகாரத்தைச் செலுத்தி வரும் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ஏவுகணைத் தளங்கள் எவ்வாறு பலப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை டெம்ப்சி உற்றுக் கவனித்து வருகிறார். "எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டிய தந்திரோபாயம் தொடர்பாகவே ஒபாமா தனது பென்ரகன் உரையில் தெரிவித்திருந்தார்" என டெம்ப்சி குறிப்படுகின்றார்.

"மக்கள் தொகைப் போக்கு, பூகோள அரசியல் போக்கு, பொருளாதாரப் போக்கு, இராணுவப் போக்கு போன்ற எல்லாப் போக்குகளும் தற்போது பசுபிக் பிராந்தியத்தை நோக்கியே நகர்ந்து செல்கின்றன. ஆகவே நாமும் அதிகளவான தந்திரோபாயச் சவால்களை பசுபிக் பிராந்தியத்தில் சந்திக்க வேண்டி ஏற்படும். ஆனால் இந்து சமுத்திரக் கரையோரங்களிலும் இவ்வாறான சவால்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என ஜெனரல் டெம்ப்சி குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் சீனா தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் டெம்ப்சி யாரைப் பற்றி, எதைப் பற்றிப் பேசினார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த விடயத்தில் எவரும் இதனைப் புரிந்து கொள்ளத் தவறமாட்டார்கள்.

"அமெரிக்காவின் எதிர்காலப் பொருளாதாரம் மற்றும் எமது தேசியப் பாதுகாப்பு போன்ற விடயங்களை முக்கியத்துவப்படுத்தியே இந்தப் பிராந்தியம் தற்போது வளர்ந்து வருகின்றது. எடுத்துக் காட்டாக, எமது இராணுவத்தின் தொழில்நுட்பங்கள் மற்றும் இதன் சுதந்திரமான செயற்பாடுகள் போன்றவை இந்தப் பிராந்தியத்தில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன" என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லியோன் பினெற்றா தெரிவிக்கின்றார்.

சீனா இது தொடர்பாக இன்னமும் நேரடியான பதிலைத் தரவில்லை. ஆனால், அமெரிக்காவின் எந்தவொரு நகர்வையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக சீனப் பொதுவுடமைக் கட்சியின் வெளியீடான குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

"அமெரிக்காவுடன் புதிய பனிப்போர் ஒன்று உருவாவதைத் தடுக்கவே நாங்கள் விரும்புகின்றோம். அதே வேளை, அயல் பிராந்தியத்தில் சீனாவின் பாதுகாப்புக்கான இருப்புகளைக் கைவிட வேண்டும் என்று சொல்வதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது" என இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசுபிக் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் "அதிகரிக்கப்பட்டு வரும் அமெரிக்க ஈடுபாடானது அதன் உறுதிப்பாட்டை அதிகரிப்பதாக அமைந்திருக்கலாம். ஆனால் அமெரிக்காவின் இராணுவச் செயற்பாடுகள் அமைதியைக் குலைப்பதாகவும் இருக்கும்" என்று ஷிகுனா என்னும் சீனச்செய்தி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

21ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா - சீனா இடையிலான போட்டி அதிகரிக்கும் என்பதற்கான காரணிகள் தெளிவாகத் தெரிகின்றன. குறிப்பாக தோற்கடிக்கப்பட்ட தேசியவாதியான கோமிங்டாங்கின் இறுதித் தங்குமிடமாக இருந்த தாய்வான் உள்ளடங்கலாக இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் நிலைக்கான முக்கிய காரணங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

சீனாவைப் பொறுத்தளவில் தாய்வான் ஒரு 'துரோகம் இழைத்த மாகாணமாகவே' கருதப்படுகின்றது. தாய்வானுடனான சீனாவின் உறவு நிலை பின்னர் சுமுகமடைந்த போதிலும், தற்போதும் தாய்வான் கால்வாயை ஊடறுத்து சீனா நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை நிலைநிறுத்தியிருக்கிறது. இது தாய்வானை அச்சங்கொள்ள வைத்துள்ளது.

பதிலாக, தாய்வானைப் பாதுகாப்பதற்கான நிழல் பொறுப்பாளியாகவும் பிரதான ஆயுத வழங்குநராகவும் செயற்படும் அமெரிக்கா மீது பனிப்போரைச் சீனா ஆரம்பித்துள்ளது. இது எந்த நேரத்திலும் சுவாலை விட்டு எரியலாம்.

தெற்கு மற்றும் கிழக்குச் சீனக் கடற்பிரதேசங்களில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் மீதான சீனாவின் பிராந்திய மற்றும் வள ஆதிக்கமானது போர் மூள்வதற்கான பிறிதொரு காரணியாக அமைந்துள்ளது. அமெரிக்காவுடன் மட்டுமன்றி வியட்நாம் போன்ற அயல்நாடுகளுடனும் சீனா முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. வியட்நாம், அமெரிக்காவுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்தி வரும் ஒரு நாடாகும்.

சீனாவின் பிராந்தியச் செல்வாக்கு அதிகரிப்பதானது ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் அச்சத்தைத் தோற்றுவித்து வருகின்றது. இந்த நாடுகள் தமது வர்த்தக உறவுகளைச் சீனாவுடன் மேற்கொண்டு வருகின்ற போதிலும் சீனாவின் பிராந்தியத் தலையீடு இந்த நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஒபாமா தனது ஆசிய பயணத்தின்போது, டர்வின் மற்றும் சாத்தியப்பட்டால் பிலிப்பைன்ஸிலும் இராணுவத் தளங்களை ஆரம்பித்தல் தொடர்பான சமிக்ஞையை வழங்கியிருந்தார். சீனாவைவிட வட கொரியாவுக்கு எதிராக அதிகம் அமெரிக்கா அதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும், ஜப்பானுடனான தொலைதூர ஏவுகணைப் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதன் மூலம் அதனைச் சமாளிக்க வோஷிங்டன் எண்ணுகிறது.

வேறு உலக நாடுகளில் நிலைநிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படைகள் திருப்ப அழைக்கப்படுகின்ற போதிலும், தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும் தொடர்ந்தும் அமெரிக்கப் படைகள் தங்க வைக்கப்படும். அனைத்துலகக் கடல் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு அதி முன்னுரிமை வழங்கப்படுவதே இதற்குக் காரணம்.

இவற்றை விட அமெரிக்க - சீன முறுகல் நிலைக்கு குறிப்பிடத்தக்க வேறு காரணங்களும் உள்ளன. பூகோள - தந்திரோபாயத்தைப் பொறுத்தளவில், இந்தியாவுடன் சீனா ஏற்படுத்திக் கொண்ட உறவின் பின்னால் உள்ள சீனாவின் நோக்கத்தைக் கண்டறிவதற்காக இந்தியாவுடன் புஷ் நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையைச் சமாளிக்கவே அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, தன்சானியா போன்ற நாடுகளுடன் வர்த்தக, நிதி, முதலீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தும் வகையில் சீனா தனது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இது தென்னாசியாவில் உள்ள ஆதிக்கம் மிக்க இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அமெரிக்காவிற்கு இது நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது.

அமெரிக்கா, பர்மாவுடன் இராஜீக உறவுகளை விரிவுபடுத்திக் கொண்டதன் மூலம் சீனாவிற்கு எதிரான போட்டியை அமெரிக்கா மேற்கொண்டது. அதாவது பர்மாவின் ஜனநாயகத் தலைவரான ஆங்சாங் சூயிக்கு ஆதரவு வழங்க விருப்பம் காட்டுவதென்பது உண்மையானதாகும். ஆனால் அமெரிக்கா இதில் தனது சொந்த நலனையும் கவனத்திற் கொண்டுள்ளது.

சீனா தனது வர்த்தகச் செயற்பாடுகளில் அதிக நன்மைகளை அடைந்துள்ள ஆபிரிக்காவின் உப சகாராவில் தற்போது போருக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள், பொருளாதார வளங்கள், அரசியற் செல்வாக்கு, இராணுவப் பலப்படுத்தல்கள் என்பன மீளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது லத்தீன் அமெரிக்காவிலும் அதிகரித்து வருகின்றது.

அமெரிக்காவின் போக்கானது மேற்கூறிய இரு பிராந்தியங்களின் மீதும் மட்டும் இருக்கவில்லை. அமெரிக்கா தற்போது ஜனநாயகம் தொடர்பாகவே அதிகம் பேசி வருகின்றது. ஆனால் இதன் பிரதான கவனக் குவிப்புக்கள் பாதுகாப்பு மற்றும் தீவிரவாதம் போன்றவற்றின் மீதே அதிகம் காணப்படுகின்றன. ஆபிரிக்கா மீதான பென்ரகனின் கட்டளை அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள போதிலும்கூடச் சிறப்பாக மக்ரெப் மற்றும் சாகெல் பிராந்தியங்களின் மீதே தற்போது அமெரிக்காவின் கவனம் அதிகம் குவிந்துள்ளது.

சிரியா, ஈரான், சூடான் போன்ற சிக்கலான பிராந்தியங்களிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சீனா தனது ஆதரவை வழங்குவதில் தயக்கம் காட்டுவதன் மூலமும் வட கொரியாவைப் பாதுகாப்பதன் ஊடாகவும், சீனா தற்போது அதிகரித்த இராஜதந்திர மற்றும் அரசியல் சவால்களை அமெரிக்காவுக்கு வழங்கி வருகின்றது.

அமெரிக்க விமர்சனத்தைப் பார்க்கும்போது, சீனாவானது உலகில் "சிறந்த குடிமகனாக" பொறுப்புடன் செயற்படத் தவறியுள்ளது.

21ஆம் நூற்றாண்டில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு இடையிலான பனிப்போரைத் தவிர்க்க முடியும். இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் நன்மதிப்பு, நல் உறவு, சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் இவற்றுக்கு இடையிலான உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. ஜனநாயகம், பண்புகள், திறந்த மனப்பாங்கு, மத நம்பிக்கை, இணைந்த அரசியல், பொருளாதார நிலைப்பாடுகள் என்பன அடிப்படையில் இந்த நாடுகளுக்கும் இடையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால் இந்த விடயங்களில் இந்த இரு நாடுகளும் இணைந்து செயற்படமுடியும்.

வரலாற்று ரீதியாக, 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டனும், 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவும் உலக வல்லரசாக இருந்தது போன்று இனிவருங்காலங்களில் சீனா வல்லரசாக வருவதற்காகச் செயற்படுகின்றது.

அதன் நம்பிக்கை, வளர்ச்சி, தனது சொந்த அதிகாரத்தில் உள்ள நம்பிக்கை என்பன இவ்வாறு சீனா உலக வல்லரசாக வருவதற்குக் காரணங்களாக அமையலாம். ஒபாமாவின் பாதுகாப்புத் தந்திரோபாயக் கொள்கையானது சிறப்பாக இருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. அத்துடன் தீமைக்கு வழிவகுப்பதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

*(நன்றி: புதினப்பலகை)*

# பல்கலைக்கழகக் கல்வி எப்படி இருக்கவேண்டும்?

*அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை
(கலாபூஷணம்)*

பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை எவ்வளவு காலமாகக் கற்பிக்கிறார்கள்? எனினும் எத்தனை நாடக ஆசிரியர்களை உருவாக்கினார்கள்? எத்தனை வானொலி நாடகாசிரியர்களை உருவாக்கினார்கள்?

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய 'உடையார் மிடுக்கு', நாடகத்தையும் 16ஆம் நூற்றாண்டில் மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஒதெல்லோ' நாடகத்தையும் தயாரித்தளித்தார்கள். அவை போதுமா? வருடத்தில் நூறு நாடகங்கள் அல்ல, 10 நாடகங்களையாவது தயாரித்து அளிக்க வேண்டாமா?

அந்த நாடகங்களைத் தயாரித்து அளித்தவர் ஒரு விரிவுரையாளர். நாடகங்களை மாணவர்களே தயாரித்து அளிக்க வேண்டும். எதை எதையோ கற்பிக்கிறார்கள் நாடகம் என்று சொல்லி, ஆனால் நவீன நாடகமோ வானொலி நாடகமோ கற்பிப்பதாகத் தெரியவில்லை.

நான் நீண்ட காலமாகப் பரப்புரை செய்து வந்திருக்கிறேன், மாணவர்களுக்கு நவீன இலக்கியங்களும் நவீன நாடகங்களும் கற்பிக்க வேண்டும் என்று. இந்தக் காலத்தில் எவரும் ஆடாத நாட்டுக் கூத்துக்களைக் கற்பித்து மாணவர்களின் நேரத்தை வீணடிக்கக்கூடாது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத அந்தக் கதைகளால் மாணவர்களது அறிவுதான் மழுங்கடிக்கப் படும். மாணவர்கள் கற்பதற்கு எவ்வளவோ இருக்கிறது. மாணவர்களுக்கு எல்லாவகை நாடகங்களும் கற்பிக்கப்படவேண்டும். மாணவர்கள் அவற்றை எழுதவும் நடிக்கவும் மட்டுமல்ல, அவற்றைத் தயாரிக்கவும் அறிந்துகொள்ள வேண்டும்.

கல்வித் திணைக்களம் என்து அறிவுரையை ஏற்று, ஒரு மேலதிக சுற்றறிக்கையை எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்தது. அதில் தமிழ்த் தினப் போட்டிகளில் மாணவர்களை சமூக நாடகம் நடிக்கும்படி கேட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு தமிழ்த் தினப் போட்டிகளில் எல்லாப் பாடசாலைகளும் சமூக நாடகங்களை நடித்தன.

பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இனியாவது மாணவர்களுக்கு நவீன நாடகங்கள் கற்பிப்பார்கள் என்று நம்புகின்றேன். காத்திருக்கின்றோம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எங்களுக்குச் சிறுகதையும் நாவலும் கற்பிக்கப்பட்டன. நாடகம் கற்பிக்காவிட்டாலும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை 'இலங்கை மண்வாசனை' நாடகம் எப்படி இருக்கும் என்று எழுதிக் காட்டினார். கலாநிதி வித்தியானந்தன் அவற்றை அரங்கிட்டுக் காட்டினார். நான் பல்கலைக்கழகத்தில் தான் நவீன நாடகம் பற்றி அறிந்து கொண்டேன். பிறகு வந்த பேராசிரி

*(27ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஊழியர்கள்

நகரின் பழைமைச் சிறப்புகளில் ஒன்று ஒண்டுக் குடித்தனம். ஒரே வீட்டைத் தடுத்து நீளமான நடை பாதையுடன் மத்தியதர வர்க்கத்தின் ஏழைப் பிரிவு, வறுமையோடும், நோயோடும், தங்களோடும்,வெளி உலகத்தோடும் ஓயாமல் போராடும் ஸ்யமந்த பஞ்சகம் அவை. ஒண்டுக்குடித்தன அவஸ்தையை வள்ளலார், அருணகிரிநாதர், பட்டினத்தார், தாயுமானவர் போன்ற ஞானிகள் அனுபவித்தது உண்டு. ஆனால் கொஞ்சம் வித்தியாசம். உடலால் அல்ல. தங்கள் உயிர் அல்லது மனம் இந்த ஒண்டுக்குடித்தனத்தில் சிக்கித் தவிப்பதாகப் புலம்பிய பாடல்கள் பலப்பல... உயிர் அல்லது மனம் ஐந்து புலன்கள் மத்தியில் நடத்தும் குடித்தனமே அவர்கள் அவஸ்தை.

''ஒர வொட்டார் ஒன்றை உன்ன ஒட்டார்... மலரிட்டு உனது தாள் சேரவொட்டார் ஐவர்'' என்று தன் ஆன்மாவை அமுக்கிப்பிடிக்கும் ஐந்து அயல் வீட்டாரைப் பற்றிப் புலம்பினார் அருணகிரிநாதர். அடக்க முடியாத இந்த ஐந்து முரடர்களை ''ஐம்புல வேடர்'' என்கிறது சைவ சிந்தாந்தம். மெய், வாய், கண்,மூக்கு, செவி என்கிற ஐந்து பேரும் அவ்வளவு ஆபத்தானவர்களா?

இந்த ஐந்து பொறிகளாலும் இன்பங்களை மட்டுமல்ல துன்பங்களையும் நுகர முடியும். இன்ப துன்ப அனுபவங்களைப் பொறி புலன்கள் மூலமாக நுகர்வது வாழ்வின் நியதி, கட்டாயம். இந்த ஐந்து பொறிகள் வழி பெறுவது ஐந்தறிவு; அதனைத் தாண்டி ஆறாவது அறிவின் வழி உணர்வதே கடவுள். இந்த ஐந்துமே முழு அளவில் தொழிற்பட்டுக் கொண்டிருந்தால் ஐந்தையும் தாண்டி மேலே வர முடியாது. அப்போது கடவுளை நினைப்பதற்கில்லை. புரிந்து கொள்ள வழியே இல்லை. அதனால்தான் இந்த ஐந்தையும் 'அடக்கு, அடக்கு' என்று ஞானிகள் பாடினர். ''பொறிகளின் மீது தனி அரசாணை'' என்றான் பாரதி.

இலங்கைக்குப் போன அனுமன் அசோகவனத்தை அழித்தபோது இராவணனின் ஐந்து சேனாதிபதிகள் வந்து சண்டையிட்டனர். அவர்களை அனுமன் வென்றான். அந்தக் காட்சியைக் கம்பன் வர்ணித்தபோது ஐந்து பொறி புலன்கள் போல ஐவர். அறிவுபோல் அனுமன். அறிவு புலன் இன்பங்களை வெல்லு வது போல் அனுமன் அவர்களை வென்றான். ''அஞ்செனும் புலன்களொத்தார்; அனுமனும் அறிவையொத்தான்'' என்கிறது கம்ப இராமாயணம்.

உடல்பால் இன்ப நுகர்ச்சி என்பது உயிரினங்களின் அடிப்படை வேட்கை. எவ்வளவு வலிமையானது யானை? அதை எப்படிப் பிடித்து அடிமையாக்குகிறார்கள். பழக்கிய பெண் யானையை முன்னால் நிறுத்தி, பள்ளம் வெட்டி, இலைதழைகளை மேலே வைத்து மூடுவார்கள். ஆண் யானை ஆசையோடு ஓடி வரும். குழியில் விழுந்து விடும். வாழ்நாள் முழுவதும் சுதந்திரம் இழந்து அடிமையாகி விடும். மெய்யின்பம் என்பது வலிமையான யானையை அடிமையாக்கி விட்டது.

மீன் ஏன் சாகிறது? தூண்டிலில் நெளியும் இரையைப் பார்த்து உண்ணும் ஆசையால் மீன் நெருங்கியது. அந்தோ.... மரணம் மீனை விழுங்கியது. மீனுக்கு வாயால் துன்பம். விட்டில்-எட்டி எரியும் விளக்கைக் கண்ணால் கண்டால் கிட்டகிட்ட வந்து நெருப்பால் கருகியே சாகும். கண்கள் அதன் சாவை முன்மொழிகிறது. வண்டு... விதவிதமான மணம் வீசும் மலரை விரும்பி மலருக்கு மலர் தாவும். ஏதோ ஒரு மலரில் கண்ணயர்ந்து உறங்கும்... மாலைக் காலம் மலர் மூடிக் கொள்ளும். மூங்கிலையே துளைக்கும் வண்டு மலரைத் துளைப்பது இல்லை. மரணத்தை முத்தமிடும். நாசியே அதன் பகை. செவி யாலே அழிவது எந்த விலங்கு? சங்க இலக்கியங்களில் அசுணமா பறவைகளைப் பற்றி எழுதுகிறார்கள். நல்ல இசைக்கு அவை ஏங்குமாம். வேடுவர்கள் புல்லாங்குழல் இசைக்க அசுணமாக்கள் பறந்து வரும். 'கீழே வேடுவர்கள் தீ மூட்டுவார்கள். இசையை நிறுத்தி, பறைகளை அடித்ததும் அவை தடுமாறி நெருப்பில் விழும். செவிப்புலன் அவைகளின் மாயக்கதவு!

யானைக்கு மெய்யால் (உடம்பு) துன்பம். மீனுக்கு வாயால் மரணம். விட்டிலுக்குக் கண்ணே மயானம். வண்டுக்கு நாசி விரோதி. அசுணமாப் பறவையைச் செவிகளே அழிக்கும். ஆனாலும் இவைகள் அதிஷ்டசாலிகள். ஐந்து பொறிகளில் ஏதோ ஒன்றுதான் இவற்றை அழிக்கும். இவைகளுக்கு ஒரே எதிரிதான். மனிதனுக்கு.... அந்த ஐந்தும் எதிரிகள்!

காலையில் பார்த்த சினிமா 'போஸ்டர்' மாலைக்குள்ளாக ஒரு மனிதனைத் திரையரங்கத்துக்கு உந்தித் தள்ளுகிறது. கண்ணுக்கு அடிமையானதால் வந்த வினை. வாயைக் கட்டு என்று மருத்துவர் சொன்னதைக் கேளாத காரணத்தால் எத்தனை பேர் வீடு மருந்தகம் ஆகி விட்டது தெரியுமா?

உடம்பில் தோன்றிய ஆசையால் நாம் எவ்வளவு கேவலப்பட்டிருக்கிறோம். மசாலா வாசனை, சென்ட் வாசனை, மல்லிகை வாசனை என்று வாசனை வலைகளில் வலுவிழந்த வாழ்க்கைகள் எத்தனை எத்தனை தெரியுமா? காரணம்-சக்கரவர்த்தியாக இருக்க வேண்டிய மனம் அடிமையானது. ஐந்து ஊழியர்களாக இருக்க வேண்டிய ஐம்பொறிகள் ஐந்து எசமானர்கள் ஆனார்கள். மனம் கந்தலாகிப் போனது.

கங்கை ஆற்றிங்கரை மாலை மணி ஐந்து. துறவு பழகும் இளந்துறவி குருநாதர் சொல்லிக் கொடுத்தபடி தவத்தில் ஆழ்ந்தார். கண்களை மூடிக் கொண்டு தவம் செய்யும் பழைய பழக்கம் அவருக்குப் பிடிக்கவில்லை. கண்களைத் திறந்து கொண்டே தவம் செய்தார். ஒரு மின்னல்.... அதன் தலையில் பின்னல்.... உண்மையில் அது பதினாறு வயது கன்னல்... துறவி தவத்தைக் கண் கெடுத்தது. மறுநாள் கறுப்புத் துணியால் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்து உட்கார்ந்தார். சலங்... சலங்... என்ற வெள்ளிக் கொலுசு அவர் செவி வழி நுழைந்து சிந்தையைக் கவர்ந்தது. மனம் கொலுசாகித் தவத்துக்குத் தடைபோட்டது.

மறுநாள் காதுகளைச் சுற்றிக் கட்டிக் கொண்டார் இளம் துறவி கண்ணும் காதும் கட்டப்பட்டாலும் நாசி இன்று தலைமை ஏற்றது. மல்லிகை மணத்தில் மனமே கரைந்தது. பொறிகளைக் கட்டுவது புரியாத நிலையில் தலையையே மறைத்து மறுநாள் தவம் புரிந்தார் இளம் துறவி. கண் பார்க்கவில்லை. காது கேட்கவில்லை... நாசி நுகரவில்லை... மணி ஐந்து... ஐந்து பத்து... துறவி கவலைப்பட்டார். ''ஆமாம் இதுதானே வரும் நேரம்! இன்னும் வரவில்லையே!''

பொறிகளைக் கட்டுவது என்பது எப்படிச் சாத்தியம்? காந்தியடிகள் வைத்திருந்த குரங்கு பொம்மைகளைப் போலப் பொறிகளைக் கட்டிப் பழகிய ஞானிகளைக் கேட்டால் விடை கிடைக்கும். இறைவனுடன் மனத்தை ஐக்கியப்படுத்துவதே வழி.

அதனால்தான் பெரிய பெரிய சிவன் கோவில்களில் ஐந்து பிரகாரங்கள் இருக்கும். ஒவ்வொரு பிரகாரத்திலும் விட்டு விட்டு, ஐந்தையும் தாண்டி ஆறாவது அறிவு நிலையில் இறைவனை வணங்குவதே கோயில்களின் அமைப்பு முறை.


ஆன்ம பலத்தை ஐந்து பொற்கிளின் வழி அதிகமாக்கிக் கொள்ளலாம். அல்லது கட்டுப்பாடின்றி அவற்றின் விருப்பப்படி மேய விட்டு விரயமும் ஆக்கலாம். அப்போது வாழ்க்கையே வீணாகிறது. ஒரு ஏரிக்குத் தண்ணீர் வருவதற்கு வெட்டப் பட்ட ஐந்து கால்வாய்கள் போல எமக்கு அறிவு வருவதற்கு வாய்த்தன ஐந்து வாயில் கள் - ஐந்து பொறிகள். வீடுகளில் விளக் கேற்றும் போது ஐந்து முகமுடைய விளக்கு கள் ஏற்றுவதன் நோக்கமே இதுதான். ஐந்து பொறிகளும் முறையாகப் பயன்படுத் தப்பட்டால் விளக்கு போல் உலகை விளக்கும்.



சுகி. சிவம்

# மீனவர்களின் பங்களிப்பை நாடும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூ. சமாசம்

கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசம் என்றிருந்தாலும் அதன் நடவடிக்கைகள் கடல் தொழில் சம்பந்தமானதன்றி கதிரை வாடகைக்கு விடுதல், மண்ணெண்ணை விற்பனை, உள்ளூர்த் தேவைகளுக்கான லான்ட்மாஸ்டர் சேவை, பாடசாலை மாணவர்கள், மரணித்தவர்களின் உடல்களை குறிகாட்டுவானில் இருந்து எடுத்து வருதல் போன்ற இலவச சேவைகள் என்பனவே செயற்பாடுகளாக உள்ளன. இது ஒரு வருமானத்துக்கானதும், சமூக சேவைக்கானதுமான தொழிலாக இருந்த போதும், இதன் முக்கிய நடவடிக்கைகள் கடல் தொழிலுடனும் கடல் வளங்களைப் பயன்படுத்தி சிறு தொழில் நிலையங்களைத் தோற்றுவித்து உள்ளூரில் வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.



ஆனால் நெடுந்தீவு கடல்தொழிலாளர்கள் கூட்டுறவு சமாசத்தில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக எதுவும் இல்லை. இதற்கு சமாசம் மட்டும் காரணமல்ல. முக்கிய காரணம் மீனவர்கள் சமாசத்துடன் ஒன்றிணையாததே. எனவே இந்த இடைவெளிகள் நீக்கப்பட வேண்டும்.

மீனவர்கள் தாங்கள் தொழில் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும், இந்திய இழுவைப் படகுகளின் அதிகரித்த நடமாட்டம் உள்ளதாகவும், அவர்கள் நெடுந்தீவுக் கரையோரத்துக்குச் சமீபமாக தொழில் செய்வதாகவும் குறை கூறப்படுகின்றனர். இழுவைப்படகுகளில் போடப் படும் வானொலிச் சத்தம் கரையில், உள்ள தமது வீடுகளுக்குக் கூடக் கேட்கிறது என்பது கடல் தொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் ப. அமிர்தநாதரின் முறைப்பாடு. எது எப்படி இருந்தாலும் இந்திய இழுவைப் படகுகளால் எமது மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவதும், கடல் வளங்கள் முழுமையாக அள்ளுண்டு போவதும் உண்மையே.

> உள்ளூர் வளங்களைக் கொண்டு உள்ளூரிலேயே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டிய மீனவர்கள் தனியாரின் வளங்கள் அதிகரிக்க தம்மைப் பலியாக்கிக் கொள்கின்றனர் என்று ஆதங்கம் அடையும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூ.சமாசம்

எனினும் நெடுந்தீவு மீனவர்களின் தொழில் முழுமையாகப் பாதிக்கப்பட்டு அவர்கள் பெரும் கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பது ஏற்கக் கூடியதல்ல. அவர்களால் பிடிக்கப்படும் நல்லரக மீன்கள் பெருமளவில் தனியாருக்கு வழங் கப்படுகின்றன. அது மட்டுமன்றி இங்கிருந்து யாழ். நகருக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுகின்றன. நெடுந்தீவு மக்கள் தமக்குத் தேவையான மீனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தனிப்பட்ட வியாபாரிகள் ஊடாக இங்கு பிடிக்கும் மீன்கள் கொண்டு செல்லப் படுகின்றன.

இந்த நிலையில் இந்திய மீனவர்களால் பெரிய பாதிப்பு என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்பது உள்ளூரின் கேள்வி. உள்ளூர் மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை தனிப்பட்டவர்களுக்கும், இங்கு பணியாற்ற வந்த பணியாளருக்கும் விற்பனை செய்வதைத் தவிர்த்து, கடல்தொழிலாளர் சங்கத்திற்கு வழங்கினால் சங்கம் அவற்றை வெளியிடங்களில் விற்பனைக்கு அனுப்பவும், கருவாடு பதனிடும் தொழில் பிரிவை அமைக்கவும் வசதியாக இருக்கும். இதனால் இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்களும் கிட்டுகின்றன.

உள்ளூர் வளங்களைக் கொண்டு உள்ளூரிலேயே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டிய மீனவர்கள், தனியாரின் வளங்கள் உயர, தம்மைப் பலியாக்கிக் கொள்கின்றனர். கூட்டுறவுச் சமாசத்துக்கு தாம்பிடிக்கும் மீன்களை வழங்க முன்வருவதில்லை. சமாசம் வேண்டிய உதவிகளை மீனவர்களுக்கு நூறுவீதம் வழங்கியுள்ளதாக தலைவர் அமிர்தநாதர் கூறுகின்றார்.

சமாசம் மீனவர்களுக்கு உதவிகளை வழங்கிய போதும் மீனவர்களின் தவறான செயற்பாடுகளால் 'அப்பத்தைப் பறிகொடுத்த பூனையாக' சமாசம் தவிக்கிறது. மீனவர்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும். ஊரில் ஒரு தொழில் நிலையம் உருவாகத் தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும்.உள்ளூர் கடல் வளங்களை அள்ளியும் கிள்ளியும் வருபவர்கள் அவர்கள். அதனால் அவர்களுக்கு அது ஒரு கடமையும் கூட.

''தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடியதான நடவடிக்கைகளை அடுத்த ஆண்டில் ஏற்படுத்த முயன்று வருகின்றோம். இதற்கு கடற்றொழிலாளர்கள் தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று கேட்பதுடன். வழங்குவார்கள் என்ற நம்பிக்கையு இருப்பதாகவும் தலைவர் கூறுகிறார். நண்டு, இறால், மீன் வளர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முயன்று வருவதாகவும், நீரியல் திணைக்களம் இலகு நன்னீர் மீன் வளர்ப்புக்கு பயன்படுத்தக் கூடிய நீர்த்தேக்கம் குறித்து பரிசீலித்து வருவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இங்குள்ள ''கண்ணங்குளம்'' இதற்கு ஏற்றது என்பதும் அமிர்தநாதரின் கருத்தாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதனை நிறைவேற்றும் பட்சத்தில் வேலைவாய்ப்புக்களும் உருவாகலாம்.

நெடுந்தீவைப் பொறுத்தவரை வடபகுதியின் முக்கிய மீன்வளம் மிக்க பகுதி அது. ஒரு சமயம் குடாநாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மீனவர்கள் இங்கு வாடியமைத்துத் தொழில் செய்துள்ளனர். நாளொன்றுக்கு அவர்கள் தமது செலவை விட பத்து ஆயிரம் ரூபா முதல் பதினைந்தாயிரம் ரூபா வரை உழைத்துள்ளனர்.

தற்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் புதிய நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு மீன் பிடியை விரிவுபடுத்த மீனவர்கள் சமாசத்தின் நிதிவளங்கள் சீராக இருக்கக் கூடியதாக, அதனுடனான தொடர்புகளை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

536 கடற்றொழிலாளர் குடும்பங்களில் ஆயிரத்து 200 கடற்றொழிலாளர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, சமாசத்தை வலுவுள்ளதாக மாற்றும் பட்சத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கடல்வளம் தொடர்பான தொழிற்றுறையில் மேம்பாடு கிட்டவும், மீனவர்களின் வாழ்வு சிறக்கவும் வழி பிறக்கும் என்பது நம்பிக்கை. யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன்பிடிக் கற்கை நெறிக்கான அலகு நெடுந்தீவில் அமைய வேண்டும் என்பதும் முக்கியம். *

லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி.சலுகைத் திட்டத்தை இடை நிறுத்துவதற்கு முயற்சி

கொழும்பு,ஜன.11
ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி சலுகைத் திட்டத்தை இடை நிறுத்த ஊடகவியலாளர்கள் முயற்சித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டிலிருந்து வெளியேறிச் சென்ற சில ஊடகவியலாளர்கள் இந்தச் சதித் திட்டத்தின் பின்னணியில் இயங்கியுள்ளனர். இந்த ஊடகவியலாளர்கள் ஜீ.எஸ்.பி சலுகைத் திட்டம் இரத்து செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி சுமார் 700 மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரண அச்சுறுத்தல் உள்ளதாக போலியாகத் தெரிவித்து நாட்டைவிட்டு தப்பிச் சென்றவர்கள் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று சிங்களப் பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.**

சுதந்திர ஊடக அமைப்பின் செயற்பாட்டாளர்களான சுனந்த தேசப்பிரிய, உவிந்து குருகுலசூரிய உள்ளிட்ட நாட்டைவிட்டு வெளியேறிய பலர் இவ்வாறு அரசுக்கு எதிராக செயற்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சதி முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

மரண அச்சுறுத்தல் உள்ளதாக போலியாக தெரிவித்து நாட்டை விட்டு தப்பிச் சென்றவர்கள் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று சிங்களப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ச)

# பயணிக்கத் தயாரான படகு கடற்படையினரிடம் சிக்கியது

கொழும்பு,ஜன.11
தங்காலை பிரதேசத்திலிருந்து ஆஸ்திரேலியா நோக்கி பயணத்தை மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருந்த படகொன்றை கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் படகில் இருந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகு நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். இவர்கள் பயணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட படகாக இது இருக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

தங்காலை பிரதேசத்திலிருந்து ஆஸ்திரேலியா நோக்கி பயணிக்க தயாராக இருந்த 21பேர் கடந்தவெள்ளிக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 21 பேரில் 14பேரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நுழைவு விசைக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான தனது திட்டத்தை இந்தோனேசியா அரசு அறிவித்து சில நாள்களின் பின்னரே 22 இலங்கையர்கள் படகின் மூலம் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

இலங்கை உட்பட சில நாடுகளைச் சேர்ந்தவர்கள் மீதான நுழைவுவிசைக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான தனது திட்டத்தை இந்தோனேசியா அரசு அறிவித்து சில நாள்களின் பின்னரே கடந்த வெள்ளிக்கிழமை 22 இலங்கையர்கள் படகின் மூலம் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)


## பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்

கொழும்பு,ஜன.11
நாடு முழுவதிலும் 900 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளதாகவும் அவற்றில் 200 பாதுகாப்பற்ற கடவைகளுக்கு பதிலாக புதிய பாதுகாப்பு கடவைகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களத்தின் அதிகாரி ஆரியரட்ண தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொரும்பாலான விபத்துகளுக்கு பாதுகாப்பற்ற ரயில் கடவைகளே காரணமாக அமைந்துள்ளது.

ரயில் கடவைகளில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்த வாகனங்கள் மூலமாக ஏற்பட்ட விபத்துகள் பற்றியும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)



சேர். பொன்னம்பலம் அருணாச்சலத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கு கொழும்பு முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மாலை அணிவிக்கின்றார்.

# தமிழ் இளைஞர்களை கடத்துகின்றனர்

## 'திவயின' குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.11
பிரான்ஸ் மற்றும் சுவிஸ் சர்லாந்தைச் சேர்ந்த குழுக்கள் வடக்கு தமிழ் இளைஞர்களைக் கடத்தி கப்பம் பெற்று வருவதாக 'திவயின' பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் எனத் தெரிவித்து வடக்கைச் சேர்ந்த இளைஞர்களைக் கடத்தி, கொழும்பில் தடுத்து வைத்து இவ்வாறு கப்பம் பெற்றுக்கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கப்பமாக பல லட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கப்பம் கோரும் குழுவுடன் தொடர்புடைய இலங்கை முகவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ச)

# கட்சியின் அங்கீகாரத்துடனே திட்டங்கள் நடைமுறை

கொழும்பு,ஜன.11
கட்சியின் அங்கீகாரத்துடனேயே எவரும் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும சஜித் பிரேமதாசவின் திட்டத்துக்கு எதிர்ாகவே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கட்சி அங்கத்தவர்களை அதிகரித்தல் உள்ளிட்ட எந்தவொரு திட்டமென்றாலும் அதற்கு, கட்சியின் ஆலோசனைக் குழுவிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலில் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னரே கட்சிக்கு புதியஅங்கத்தவர்களை இணைத்தல் உள்ளிட்ட ஏனைய கட்சி மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வது தவறானது அல்ல என்றபோதிலும் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க.**

கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வது தவறானது அல்ல என்றபோதிலும் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# மாவட்டங்கள் தோறும் தேவை மாகாணக் கல்வி அலுவலகம்

அம்பாறை, ஜன.11
மாவட்டங்கள் தோறும் மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதுடன், அதிகாரங்களுடன் செயற்படக்கூடியதாக இந்த மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் அலுவலகங்களும் இயங்க ஆவனசெய்யப்படவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத் துள்ள மனு ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

மாகணக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்துடனான கல்விசார் தேவைகள் மற்றும் தொடர்புகளுக்கு இருந்துவரும் பல்வேறு சிரமங்கள், தூரப்பயணங்களைத் தவிர்க்கும் வகையில் இந்த மாவட்டங்கள் தோறும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் சேவை அலுவ[illegible]யும். நாடு முழுவதும் பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்கருதி கோட்டக்கல்வி அலுவலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள் இயங்கிவருகின்றபோதிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் சகல விடயங்களுக்கும் இந்த அலு வலகங்களில் தீர்வைக் காண முடியாத நிலமையுள்ளது.

**மாவட்டங்கள்தோறும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யுமாறு ஜனாதிபதியிடம் மனுமூலம் கோரிக்கை.**

பல விடயங்கள் இந்த அலுவலகங்களூடாக மாகாண கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடனான நடைமுறைகளுக்கு முன்னிலைப்படுத்தியே தீர்வைப் பெறவேண்டியுள்ளதால் காலதாமதமும், சிரமங்களும் ஏற்படுகின்றன.

சில சமயங்களில் மாகாணக்கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கவும், மாகாணப் பணிப்பாள[illegible] அலுவலகம் சென்று கருமங்களை முடிக்கவும் மிக நீண்ட தூரம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஆசிரியர்கள் பெற்றோர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு ஏற்படுகின்றன.

நடைமுறையிலிருந்தது போல், மாவட்டங்கள்தோறும் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யுமாறு கோருவதுடன், இவ்வாறு நியமிக்கப்படும் மாவட்டங்கள் ரீதியான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்கள் அதிகாரங்களைக் கொண்டதாக இயங்கவும் அனுமதிக்கப்படவேண்டும்-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-30)

## குழப்ப நிலைமைகளுக்கு அரசே பொறுப்பு

கொழும்பு,ஜன.11
பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு அரசே பொறுப்புச்சொல்ல வேண்டும் என்று ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. அரசு பல்கலைக்கழகங்களில் அரசியலைப் புகுத்த முற்படுவதாக தெரிவித்துள்ளது.

அரசின் பொறுப் புணர்ச்சியற்ற நடவடிக்கையே பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு பல்கலைக்கழகங்களை பலவீனப்படுத்தி, மாணவர்களை தனியார் பல்கலைக்கழகங்கள் நோக்கி நகர்த்தும் உள்நோக்கத்துடன் சிலர் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக ஜே. வி.பி குற்றஞ் சுமத்தியுள்ளது. மாணவர் அமைப்புக் களின் நியாயமான கோரிக்கைகளை அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி மூடி மறைக்க முயற்சிக்கின்றது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baby Cheramy

# அன்பும் பரிசும்

# அடுத்த சுற்றுப் போட்டிகளின் வெற்றியாளர்கள் நீங்கள்தானா?

பேபி ஷெரமி அன்பும் பரிசும் 1ம் சுற்று வெற்றியாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!




1 பரிசு

## சுசுகி அல்டோ காரினை வென்ற அதிஷ்டசாலி

என். எல். பிரியான்தி டி சில்வா - வதுரம்ப, காலி



2 பரிசு

## சுகூட்டி பெப் இனை வென்ற அதிஷ்டசாலி

எச். எ. சதுரிக்கா உதயான்ங்கனி - கொடிகமுவ, மஹறகம

எஸ். எ. துதித்த சத்னிது - கொரகஸ்முள்ள, டிவுளபிடிய

3 பரிசு



## இருபது தங்க மாலைகளை வென்ற அதிஷ்டசாலிகள்


| | |
|---|---|
| வீ. எம். ராஜசிங்க - கொளகளகள, அலவதுகொட | வீ. எச். தேனுஜா - பீ. பீ. கோமரி - 02 (கிழக்கு) |
| ஊ. எம். திஸ்னா ரஞ்சனி - கடுகள்கஹகே, புத்தல | பீ. டப்ள்யு. நதீக்கா நயோமி விஜெய்ரட்ன - ராசகல, பளான்கொடை |
| ரவீன்தி வெளகெதர - கபீரி உயன, முள்ளேரியாவ புது நகரம் | நயனா விஜேய்சேகர - மகளேவாய, அம்பான்தோட்டை |
| இமல்கா மதுஷானி - தங்கொள்ளவத்த, ஹொரம்பாவ | எஸ். ஏ. பீ. மானெல் - தளுகம, கெளனிய |
| புஷ்பா சரோஜினி - தன்கல்ல, ரத்தோளுகம | சுஜாதா டி சில்வா - கமரங்காபிட்டிய, பல்மடுள்ள |
| ஒஷானி சமராதீர - நவ நகரய, அம்பாரை | பீ. ம். ளோட்ஸ் - எமிள் நகர், மன்னார் |
| ஆர். கின்துஜன் - பத்தாநிபர், வவுனியா | சசிகளா - பெரிய ஊர்தீவு, மட்டகளப்பு |
| டப்டிள்யு. டி. நிசன்சளா லக்மாலி - மஹாவலதென்ன, பளான்கொட | சுஜன்தன் சர்விளா - திருமலை வீதி, மட்டகளப்பு |
| சந்துனி நாகல்தள - துனுக்கேவல, கேகாலி | வை. அஜான்தினி - வடக்கு சந்திளாபெய், சந்திளாபெய் |
| லக்சிதா ரன்ஜித் ஏகனாயக்க -கடுகன்னாவ | ஜே. கிருபாகாரனி - குதுளாதி வேகரை, மட்டகளப்பு |

4 பரிசு



## கையடக்கத்தொலைபேசிகளை வென்ற அதிஷ்டசாலிகள்

| | |
|---|---|
| சாமரி வீரக்கொடி - விளாகென வீதி, கொனவள | விசால் ஹிம்மான்ச - எளியட் வீதி, காலி |
| எச். பிரசான்ஜினி சில்வா - பதுகொட, இத்தபான | எச். எம். மளிஷா திசானாயக்க - கிரிகல் பொத்த, பஸ்ஸர |
| டபிள்யு. கே. ரம்யா குமாரி - தளபகந்த, பெரளபனாதர | கே. சஜித் - வின்னார் வீதி, பண்டிருப்பு, கள்முனை |
| இ. ஜீ. கே. குனதிலக்க - சிரிமாகம, ஒளகன | மளித்தி குளரத்ன - மினுவன்கொட வீதி, கொடுகொட |
| பிரியன்கிகா குமுதினி - கட்டளகம, பெரளபனதர | ஆர். எம். தேவிகா சுதர்ஷனி - 3ம் வீதி, பொலன்னறுவை |
| எப். கசிகா நிர்மானி ஜேசப் - பளுகஸ்தமன, பொலொன்னறுவை | ரசிக்கா லன்கபுர - கன்னேகம வீதி, அழுத்கம |
| ஜீ. டப்ளியு, சமன்மளி - பன்வில, ஹிக்கடுவ | எச். சான்தனி நில்மினி - இதுக்கட்டிய மலை, மஹாகம |
| எம். ஏ. அனோமா பிரியதர்ஷனி - மாதின்னாகொட, ராஜகிரிய | டி. நிமிக்ஷா மதுஷனி - திமியால, தம்முள்லன, இரத்தினபுரி |
| கே. ஏ. நிரோஷா குமாரசிங்க - இஹலகம சந்தி, ககிராவ | மியாசி இமாஷா பெரேரா - மிரிஸ்வத்த, கொட்டுகொட |
| இரோஷினி கன்னேகொட - வெயன்கொட வீதி, மினுவன்கொட | வத்சளா அபுதன்திரி - கோனபள சந்தி, படுவிட |




100ml- ரூ.105/- ரூ.35/- ரூ.35/-

### போட்டி விதிமுறைகள்

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

### குலுக்கல் நடைபெறும் திகதிகள்

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15
இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15
மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

### போட்டியில் கலந்துகொள்ளும் முறை

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"
த.பெ. இல. 2285, கொழும்பு

WP / GT/ 3408

Baby Cheramy
தூய அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்

## உயர்தரப் பெறுபேறு

**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்**

த.இலக்கியா -3 ஏ, கு.கனேந்திரன் - 2 ஏ பி, யோ.கிரி சாந்தி2 ஏ பி, வே.குலசாந் - ஏபிசி, சி.கோமதி-ஏ பி சி, இ.வசந்தகுமார் - ஏ பிஎஸ், து.விஜிதா - ஏ 2பி, ரா.நிரோஜினி -2பிசி, தே.நிசாந்தினி-2பி சி, அ.யசோதா-2பி சி வே.குகசாந்- 2பி சி

## தொல்புரம் இவான் வீதியைப் புனரமைக்குக

சுழிபுரம்-ஜன.11

தொல்புரம் இவான் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் காணப்படும் குழிகளில் மழை நீர் தோங்கி நிற்பதனால் பாதசாரிகளும், வாகனப் பிரயாணிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இந்த வீதியைப் உடன் புனரமைக்கும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இதே வேளை வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இரு பிரதேச சபையினரிடமும் இந்த வீதியின் நிலைமை குறித்து ஏற்கவே பிரோரணை மூலம் மக்கள் தெரிவித்துள்ளனர். (ந-28)

## தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு கலாசாலையில் 3 மாதப் பயிற்சி

அச்சுவேலி, ஜன, 11

தொலைக்கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வந்த ஆசிரியர்களுக்கு நிறைவு செய்யப்படாத பாடத்திட்டம் ஆசிரியர் கலாசாலைகளின் மூலம் மூன்று மாத காலப் பகுதியில் நிறைவுசெய்யப் படவுள்ளன.

யாழ் மாவட்டம் மற்றும் வன்னிப் பெரு நிலப்பரப்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் ஆசிரியர் பயிற்சி தொலைக்கல்வி நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வந்தது.

தொலைக்கல்வி முறையிலான பயிற்சி வழங்கல் நடவடிக்கைகக்கு பொருத்தமான அளவு நிதி இல்லாமையினால் தொலைக்கல்வி ஆசிரியர்களை மூன்று மாதகால பயிற்சிக்கலாசாலையில் இணைப்புச் செய்து பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தமிழ்மொழி மூலம் பயிற்சி பெற்று வந்த ஆரம்பக்கல்வி பயிற்சி ஆசிரியர்களை கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும், கொட்டகல ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் உள்ளீர்ப்புச் செய்து பயிற்சி அளிப்பதற்கு கல்வி அமைச்சின் ஆசி ரியர் கல்விப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மூன்று மாதகாலம் வழங்கப்படவுள்ள குறுகிய காலக் குறை நிரப்பு ஆசிரியர் பயிற்சி ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு இணைப்புச் செய்யப்படவுள்ள ஆசிரியர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இந்த மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெறவுள்ளன.

தொலைக்கல்வி பயிற்சி பெற்றுவந்த ஆசிரியர்கள் குறுங்கால ஆசிரியர் பயிற்சிக்காக எந்த ஆசிரியர் கலாசாலைகளில் இணைப்புச் செய்யப்படவுள்ளனர் என்ற விவரம் தனித்தனியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்து ஒதுக்கப்பட்ட ஆசிரியர் கலாசாலைகளில் தமது பதிவுகளை மேற்கொண்டு பயிற்சியை நிறைவு செய்யும் ஆசிரியர்களுக்கு இறுதிப் பரீட்சை நடத்தப்பட்டு பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

அத்தோடு இறுதிப் பரீட்சை நிறைவடைந்த தினத்தில் இருந்து இலங்கை ஆசிரியர் சேவைவகுப்பு3 இல் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு அதற்குரிய சம்பளத் திட்டத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

மேலும் குறித்த தினத்தில் இருந்து ஓய்வூதிய உருத்து உரிமையும் விதவைகள், தபுதாரர், அநாதைகள், ஓய்வூதிய உரிமையும் வழங்கப்படவுள்ளது.

(ந-11)

## உறுதிபூசுதல் சடங்கு

யாழ்ப்பாணம், ஜன, 11

குருநகர் ஆலய பங்கைச் சேர்ந்த சிறார்களுக்கு உறுதி பூசுதல் வழங்கும் சடங்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது என புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா றோ.நேசநாயகம்அடிகளார் அறிவித்துள்ளார். (ற)

## யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும் வெளிமாவட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜன-11

மேலதிக கல்வியைத் தொடர்வதற்காக யாழ்ப் பாணத்துக்கு படையெடுக்கின்றனர் வெளிமாவட்ட மாணவர்கள்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெறாத வெளி மாவட்ட மாணவர்கள் மேலதிக கல்வியைப் பெறுவதற்காக யாழ்.மாவட்டம் நோக்கி வந்த வண்ணம் உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பிரபல்யமான உயர்தர தனியார் கல்லூரிகள் அமைந்துள்ளதால் வெளிமாவட்ட மாணவர்கள் இங்குள்ள தனியார் கல்வி நிலையங்களை நாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் யாழ்.நகருக்கு வரும் மாணவர்கள் தனியார் வீடுகள், மற்றும் விடுதிகளில் வாடகை அறைகளைப் பெற்று தமது கல்வி நடவடிக்கைகளை தொடர விரும்புவதால் வாடகை அறைகளைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்ளகின்றனர்.

பல இடங்களில் இருந்து படையெடுக்கும் வெளி மாவட்ட மாணவர்கள் தமது போக்குவரத்துச் சிரமங்களைத் தவிர்த்து மேலதிக கற்றலை மேற்கொள்வதற்காக வாடகை அறைகளை நாட வேண்டியுள்ளது.

இதற்காக வெளி மாவட்ட மாணவர்கள் அறிந்த, தெரிந்தவர்களின் உதவிகளை நாடி வாடகை அறைகளைப் பெறுவதற்காக அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-313)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

2012.01.11

தோற்றம்
05.10.1952



மறைவு
24.12.2010

எங்கள் குடும்ப குலவிளக்கு

### செல்வி இராசையா இராசநிதி

அன்பே உருவான, தன்னலம் கருதாது, பிறர் நலம் பேணி
கற்பெனப்படுவது சொல்திறம்பாமையென வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த எம் நிதி;
உண்மையே பேசுவதால்; உலகமே ஆளலாம்,
ஒழுக்கம் உயிரென மதித்து, கல்வியே கருந்தனம் எனக் கொண்டு;
பெற்றோர் மனம் குளிர வாழ, வையத்துள் வாழ வலியுறுத்திய எம் அன்பு நிதி;
வீடும், வெளியும் சுத்தமாய் வைத்திருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டுமென மொழிந்த - அன்னை,
அதிகாலை எழுந்து சுப்பிரபாதம் பாடினால், தொல்லைகள் நீங்கும் எனக் கூறிய நிதி,
எல்லோர்க்கும் குத்துவிளக்காக, மிளிர்ந்து, வாழ்ந்த அரசிக்கு அரசியான இராசநிதிக்கு
முதலாம் ஆண்டு நினைவாக இதனை அர்ப்பணித்து எங்கள் மனதில்
நீங்கா நினைவுடன் வாழ்ந்து வரும் எம் அன்னையை
அன்புடன் வணங்குகின்றோம்

(12174) (2-6-7)

தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

## நெஞ்சகலா நினைவில் ஓராண்டு

மண்ணகம்
09.08.1965

விண்ணகம்
11.01.2011



### நல்லதம்பி தயாபரன் (தம்பி)

(திதி:மார்கழி வளர்பிறை ஸப்தமி)

உற்றது துன்பம் என்றால்
உவந்து நீ வாழக் கற்றாய்
பெற்றவர் பேண வேண்டும்
என்பதில் உறுதியானாய்
கற்ற நற் கணினிக் கல்வி
கற்பிக்கும் திறமை கொண்டாய்
பற்றினால் தமிழைக் காக்கச்
கூவிஸிலே பள்ளி தந்தாய்
மற்று நின் குடும்பப் பாரம்
மகனிடம் தந்துன் வாழ்நாள்
முற்றுறவில்லைத் தம்பி,
மறப்பமோ உன்னை நாங்கள்
வற்றுமோ உன் நினைவு
விநாயகன் தாளைப் பற்றி
கற்றவ வான நாடர்
நடுவண் நீ சாந்தி காண்பாய்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7900) (2-6-7)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரலாம். தேவையற்ற அலைச்சல்களைத் தவிர்க்க வேண்டும். தொழில் ரீதியான விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டுக்கு வரலாம். மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடலாம்.

**இடபம்:** நினைத்த காரியங்களில் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும், பின்னர் சுமூகமாக முடிவுக்கு வரும். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். உத்தி யோகத்தர்கள் மேலதிகாரிகளிடம், நிர்வாகிகளிடம் வீண் பேச் சுக்களைத் தவிர்க்க வேண்டும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**மிதுனம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்கும் நாள். உறவினர் ஒருவரிடம் அவசர செலவுகளுக்காக கடன் வாங்கலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். உடல் உபாதைகளைத் தவிர்க்க கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம்.

**கடகம்:** உடன் பணிபுரிவோரை பரிகாசம் செய்யாமல் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம். உறவினர்களால் செலவுகள், அலைச்சல்கள் உண்டாகலாம். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவது தாமதமாகலாம். மனதை விட்டு அகலாத சில சம்பவங்கள் நடக்கலாம். சோர்வின்றி நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**சிங்கம்:** எந்த வேலையையும் ஒன்றுக்கு பலமுறை சிந்தித்துச் செய்ய வேண்டும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். சிலர் உங்களிடம் சாமர்த்தியமாகப் பேசி கடனுதவி பெறலாம். நீங்கள் எதிர்பாராத உறவினர்கள், நண்பர்கள் உங்களைத்தேடி வரலாம். உங்களுக்குப் பிடித்த ஒன்று மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம்.

**கன்னி:** வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். ஏதாவது ஒரு வழியில் பணவரவுகளைப் பெறலாம். உறவுப் பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள் சிலரிடம் மனம் விட்டு பேசி உங்களின் மனக்குறைகளைச் சொல்வீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**துலாம்:** நீங்களாக சில வேலைகளில் ஈடுபட்டு அவதிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்கள் செய்யத் தயங்கிய வேலை ஒன்றை நீங்கள் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். புதிதாக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மனதுக்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

**விருச்சிகம்:** உங்களின் செயற்பாடுகளால் ஏனைய சிலரின் பணிகளில் எதிர்பாராத குறுக்கீடுகள் நிகழலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த கோயில்களுக்குச் செல்லலாம். வியாபாரிகள் கொடுத்த கடன்கள் எதிர்பார்த்த அளவுக்கு வசூலாகாமல் சிரமங்களுக்கு ஆள்படலாம். ஏதோ ஒரு வகையில் பிறரின் தயவை நாடவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** குடும்ப உறுப்பினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒருவரை தேடிச் சென்று பார்க்க முற்பட்டு அவர் இல்லாமல் போகலாம். நீங்கள் செய்த உதவியை மறந்து விட்டு, சிலர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பதற்றத்தை, கோபத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும் நாள். உத்தியோகத்தர்கள் மேல் அதிகாரிகளின் உதவிகளைப் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**கும்பம்:** கொடுக்கல், வாங்கல்களில் கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். பணிபுரிவோர் சக ஊழியர்களிடம் வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் மூலம் சிறு உதவிகள் கிடைக்கலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் அகலும். எந்த வேலையையும் நாளை என்று பிற்போட்டு வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். பணவரவு உண்டு.

**மீனம்:** எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கும் நாள். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையான அணுகுமுறை அவசியம். வயிறு தொடர்பான உபாதைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். விரயங்களைத் தவிர்க்க எதிலும் முன்யோசனையுடன் செயற்பட வேண்டும். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடனே கைக்கு கிடைக்காமல் தடைப்படலாம்.

**நாளை**

மார்கழி 27 வியாழன் 12.01.2012
திதி: திருதியை மு.ப. 11.51 வரை
நட்சத்திரம்: மகம் பி.இ. 05.17 வரை
சுபநேரம்: 08.03 - 09.33வரை,
ராகு காலம்: 02.03- 03.33 வரை


# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 9 | 8 | | 3 | | | 6 |
| | | 2 | 4 | 1 | | | | |
| 3 | 4 | | | 6 | 2 | | 1 | |
| | | | | | | 9 | 7 | 2 |
| | | 7 | | | | 6 | | |
| 6 | 5 | 8 | | | | | | |
| | 2 | | 6 | 7 | | | 8 | 4 |
| | | | | 3 | 8 | 5 | | |
| 5 | | | 2 | | 4 | 7 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21★07★1946

மறைவு
23★12★2010

# பொன்னு தர்மலிங்கம் (தறுமு)

திதி: 11.01.2012

காலச்சக்கரம் கடுகதியாய் சுழன்றதனால்
காலன் அரவணைப்பில் வெகு விரைவில் சென்ற தேனோ?
ஆறாத் துயர் கொண்டு ஆண்டு ஒன்றை அடைந்துவிட்டோம்
ஆத்மா சாந்தி பெற கிரியை வழி தான் இன்று
இறைவனடி இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்

(12858) (6,7,45)

வேலணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் இராமலிங்கம் மணிவாசகம்

அவர்களின்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30.10.1938

மறைவு
13.01.2009



ஆண்டு மூன்றானாலும் அப்பா - எங்கள்
அன்புத் தெய்வமே உங்கள் முகம் தேடித் தந்தையே
மூன்றாண்டென்ன மூன்று யுகம் கடந்தாலும்
ஏதோவென்றாய் உங்கள் ஞாபகம் அப்பா....

அன்பால் எமை அணைத்தீர்கள் அப்பா
அருமை பெருமையாய் எமை வளர்த்தீர்கள் தந்தையே
பாசமாய் வாழ்ந்த எம் கூட்டை விட்டு எங்கு பறந்தீர்கள்
உங்கள் நினைவுகள் எமை வழி நடத்துதப்பா

உங்கள் பூம்பாதங்களில் எம் கண்ணீர்ப் பூக்கள் அப்பா
காணத் துடிக்கின்றோம் உங்கள் பாதங்களை தந்தையே
உங்கள் நினைவுகளைத் தாங்கி
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(12873)(2-6-7)

தகவல்: குடும்பத்தினர். ரூபன் (மகன்) தொடர்புகளுக்கு: +447861669610


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மரண நடவடிக்கைகள் தடுக்க விசேட பொலிஸ் படை

கொழும்பு, ஜன.11

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் விசேட செயலணிப் படைப் பிரிவைச் சேர்ந்த முகாம்களுக்கு, சட்டவிரோத செயற்பாடுகள் குறித்துக் கிடைக்கும் தகவல்கள் விடயங்களில் உடனடியாகச் செயற்படுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைக்கும் தகவல்கள் சம்பந்தமாக இரகசிய விசாரணைகளை நடத்தி விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பிலுள்ள விசேட பொலிஸ் செயலணி படைத் தலைமையகம் அந்த முகாம்களின் கட்டளை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத சுடுகலன்கள், சட்டவிரோத மணல் சேகரிப்பு, மாணிக்கக்கல் அகழ்வு, அரச பாதுகாப்பிலுள்ள காடுகளில் நிகழும் பெரியளவிலான மரக் கடத்தல்கள், போதைப்பொருள் விற்பனை, சம்பந்தமாக கடும் கவனம் செலுத்தி திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாறும் பணிப்புரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என மேற்படி தலைமையகத்தின் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த முகாம்களுக்குக் கிடைக்கும் அவசர தொலைபேசித் தகவல்கள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தி திடீர் வீதித் தடைகளை இட்டு சந்தேகத்துக்கிடமான வாகனங்களைச் சோதனையிட சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள 60 பொலிஸ் விசேட படையணி முகாம்கள் மூலம் இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளன.

கைது செய்யப்படுவோர், கைப்பற்றப்படும் பொருள்கள் சட்டநடவடிக்கைகளுக்காக அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு போர் முடிவுற்றதன் பின்னர் அப்பிரதேசங்களில் அரச வனங்களில் இடம்பெறும் மிகப் பெரிய அளவிலான மரக் கடத்தல் வர்த்தகம் அதிகரித்துள்ளதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகளுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இது சம்பந்தமாக பொலிஸ் விசேட செயலணிப்படை தலைமையகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆர். டபிள்யூ. எம்.சீ.ரணவன வினால் மேற்படி முகாம்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-22)

# கலகங்களை அடக்க நிற நீர்ப் பாய்ச்சல்!

கொழும்பு, ஜன.11

மக்கள் போராட்டங்கள் மற்றும் கலகங்களை அடக்கி விடுவது தொடர்பாக நிற மூட்டப்பட்ட நீரைப் பீய்ச்சியடிக்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பொது மக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் விதமாக மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில், பொதுச் சொத்துக்களுக்கு சேதங்களை விளைவித்து கலகம் புரியும் தரப்பினரை விரைவில் கண்டறிந்து கைது செய்வது தொடர்பாக நிறமூட்டப்பட்ட நீரைப் பீய்ச்சியடிப்பதற்கு பொலிஸ் துறை தீர்மானித்துள்ளது.

மஞ்சல், நீலம் உள்ளிட்ட நிறமூட்டிகள் ஒருவர் மீது பிரயோகிக்கப்படும் போது அந்த வர்ணங்கள் நீண்ட நேரம் வரையில் நிலைத்திருப்பதால் குறிப்பிட்ட நபரை உடனடியாக இனங்கண்டு கொள்வதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பமைகிறது.

எனவே எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்கள் மற்றும் கலகங்களின் போது நிறமுட்டப்பட்ட நீரைப் பீய்ச்சியடிப்பதற்கு பொலிஸ் துறை தீர்மானித்துள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் காரணமாகக் குழப்பங்களை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொள்வோரை சந்தேகத்துக்கு இடமின்றி இனங்கண்டு கொள்ள பொலிஸாரால் முடியும். (ந-22)

இடையூறு ஏற்படுத்தும் விதத்தில், பொதுச் சொத்துக்களுக்கு சேதங்களை விளைவித்து கலகம் புரியும் தரப்பினரை விரைவில் கண்டறிந்து கைது செய்ய முடியும்.

# எரிபொருள் கொடுப்பனவு

கொழும்பு, ஜன.11

தென்மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 3000 ரூபாவை வழங்குவதற்கு முதலமைச்சர் ஷான் விஜய லால்டி சில்வா தீர்மானித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவு 49 உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு உரித்தாகக்கூடும்.

பிரதேச அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் வழங்கும் பங்களிப்பைப் பாராட்டும் முகமாகவும் அவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ந-2)

# பிரதேச சபைக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜன 11

நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் நெடுந்தீவுப் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மூலதன வேலைத்திட்டத்துக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நெடுந்தீவுப் பிரதேச சபையின் அந்தோனியார் கோயில் கதிரனை வீதிக்கு ரூபா 38 லட்சத்து 30 ஆயிரத்து 625 ரூபாவும், ஆஸ்பத்திரி கிழக்கு, மணல்துறை வீதிக்கு 37 லட்சத்து 54 ஆயிரத்து 639 ரூபாவும் ஐக்கிய தீபம் விதானையார் வீதிக்கு 44 லட்சத்து 77 ஆயிரத்து 012 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. காளிகோயில் பூமுனை வீதிக்கு ரூபா 59 லட்சத்து 41 ஆயிரத்து 164 ரூபாவும் தோமையார் வீதி, 60 லட்சம் ரூபாவும் விடுதி அமைப்பதற்காக ரூபா 10 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் றெக்ஷியன் தெரிவித்துள்ளார். (ந-7)

# ஆலயத் திருநாள்


குருநகர், ஜன.11

குருநகர் காணிக்கை மாதா புதுமை மாதா ஆலயத் திருநாள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா.றோ.நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக இந்த ஆலயத் திருநாள் திருப்பலி பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதிகளில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-51)

# மரண அறிவித்தல்

## சலமோன் பர்னாந்து (ராசி)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சலமோன் பர்னாந்து (ராசி) 09.01.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - லேனா தம்பதியரின் அருமை மகனும், தம்பிப்பிள்ளை- தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பிலோமினாவின் (திரேசம்மா) அருமைக் கணவரும், காலஞ்சென்ற நேசக்கிளி, அன்னம்மா ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கிறேசியன், ரூசியன் மற்றும் ராஜன் (பிரான்ஸ்), இந்திரா (அமெரிக்கா), சந்திரா, றஞ்சன் (லண்டன்), றூமன் (டென்மார்க்), றஞ்சிதா, மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அலன்றோஸ் (அமெரிக்கா), நேசராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பீற்றர் மற்றும் டெவ்னி (லண்டன்), அமுதா (டென்மார்க்), இருதயராஜன் றொஸ்ரன் ஆகியோரின் மாமனும் சியான், மர்சி, வினித்தா, ஜெரனியா, யோன்சன், லெனின், றொபின்சன், அலனா, பாலா (அமெரிக்கா), கோபேட், சுதாயினி ஜிம்சன், வைஷ்ணவி (இந்தியா), றொணிஷா, ஷனிஷா, செல்ரன் (இத்தாலி), ஆகாஷ், சித்தார்த், அபிநயா, றிம்றியான், அறோஷன், காலஞ்சென்ற பானுஷா மற்றும் யோயல், நெபியா, யாயல், கனா ஆகியோரின் பாசமிகு பேரனும் நிருபன், ஆறோன், சாம்ஷன், நிலா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (11.01.2012) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நடைபெற்று பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்தி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

885/ 14, கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

(12952) (6,7,45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் பிரதி
திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும்
திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன்
அவர்களின் மாமி

### திருமதி நாகராசா தவமணி

அவர்கள் 10.01.2012 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், மாவட்டத் திட்டமிடல் செயலகம்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(12885)(2-6-9)

## நீங்காத நினைவலைகளில் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 ★ 07 ★ 1943



உதிர்வு 11 ★ 01 ★ 2003

### அமரர் சபாபதி நாராயணன்

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும் சமாதான நீதிவானும்)

கண்ணீருக்குத் தடை போட்டது போல
உம் நினைவுகளுக்குத் தடைபோட
முடியவில்லை! நினைவுகளை மட்டும்
நிறையவே தந்து நிதர்சனமாய்
சென்று விட்டீர்களே!
நிலையான இந்த உலகில்
நிலையில்லாதது மனித வாழ்வு
நிலையில்லாத வாழ்க்கையில்
நிலையான புகழைத்தேடி
நிம்மதியாக உறங்கிவிட்டீர்களோ?
இதுவரை ஈடாய் உமக்கில்லை ஏதும்!
எத்தனையோபேர் நான் இருக்கிறேன்
எனச் சொன்னாலும் அப்பாவை போல்
யார் இருக்க முடியும்!
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

மனைவி,
பிள்ளைகள்.

(12882) (7-6-45)

## ஆயிலியப் பிரார்த்தனை

தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆயிலியத் தினப் பிரார்த்தனையும் விசேட சொற்பொழிவும் இன்று புதன்கிழமை தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் கலை பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சைச் சேர்ந்த வி. குணபாலா தலைமையில் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(ந-319)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல
புடவை வியாபார
ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள/
பழக விரும்பும் ஆண்/ பெண்
விற்பனையாளர்கள் தேவை
தொடர்பு:- 0777488093

(7546)(2-6-7)

## HONDA BADDY VAN & 49 CCBIKE வாடகைக்கு

மாதாந்த நாள் அல்லது சாரதியுடன் ஆன
சேவைக்கு விடப்படும்.
சாரதிகள் தேவை. தொடர்பு கொள்ளவும்
(12886)(2-6-7) தொடர்பு:- 0770755454

## வீடு வாடகை

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் ஆனைப் பந்தி சந்தியில் நான்கு படுக்கையறை, குசினி, கோல், சாப்பாட்டு அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. முற் பணம் எதிர்பார்க்கப்படும். வாடகை பேசித் தீர்மானிக்கமுடியும்.
(12883)(2-6-7) தொடர்பு: 0771345580

## வாகனம் விற்பனைக்கு

709 EX TATA கன்டர் வாகனம்
(நீலநிறம்) விற்பனைக்கு உண்டு.
வாகன இல. MPLI 2116
பெட்டி நீளம் 14½ அடி
தொடர்பு: தங்கராசா கௌசிகன்
A 9, புத்தூர் சந்தி,
சியாமளா மில் வீதி,
மீசாலை.
T.P. 0774053391

(வி/2900) (6-7-45)


## Computer Express
Institute of Information Technology

A/L பரீட்சை முடிவுகள்.....???
O/L பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களே !!!
அடுத்த காலடிகளை வெற்றிப்பாதையில் நகர்த்துங்கள்

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Certificate in Multi IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html,
ஆகிய Programming Language
University of Madras Bsc

Batch I 11-01-2012:- 9 am or 3Pm Batch II 13-01-2012:- 9 am or 3Pm
Batch III 14-01-2012:- 9 am or 3Pm Batch IV 18-01-2012:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கந்தையா பஞ்சலிங்கம்
(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

மலர்வு
30★ 08 ★ 1928

உதிர்வு
03★ 12 ★ 2006

ஆண்டுகள் பல ஓடினாலும்
உங்கள் பிரிவு மட்டும் - இன்றும்
எம் நெஞ்சை வருத்துகின்றதே....

தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(12884)(2-6-7)

# மரண அறிவித்தல்



## திருமதி ஆறுமுகம் தங்கம்மா

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தங்கம்மா 10.01.2012 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய திரு. திருமதி சுவாமி நாதன் தம்பதியரின் அன்பு மகளும், அமரர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி (U.K), கமலாதேவி, காலஞ்சென்ற தவஞானசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், கோபாலகிருஷ்ணனின் (Retired Assistant Superintendent of Police) அன்பு மாமியும் கிருஷாந்தி (U.K) ஜெயகாந்தன் (U.K), ஹரிஷாந் (U.K), சுஷாந்தி, ஷாந்தி (U.K), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வினம்ராஷாயித்திரியின் பாச மிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (13.01.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தி இல்லம்,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

(12887) (6,7,10)

தகவல்,
குடும்பத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிதரனுக்கு பெண் குழந்தை



குழந்தை பிறந்த சந்தோஷத்தில் துள்ளிக்குதித்த முரளி தரனுக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல் பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரன் இரண்டவது குழந்தைக்கு அப்பாவாகி யுள்ளார்.

பிரசவத்துக்காகச் சென்னை தனியார் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டிருந்த முரளிதரனின் மனைவி நேற்று பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

இதுகுறித்து 'உதய னுக்கு கருத்துத் தெரிவித்த முரளிதரன், ''பெண் குழந்தை பிறந்தது மகிழ்ச் சியாக உள்ளது.'' எனத் தெரிவித்தார்.

குழந்தை பிறந்த சந்தோ ஷத்தில் துள்ளிக்குதித்த முரளிதரனுக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த் துத் தெரிவித்து சென்னை வைத்தியசாலைக்கு பூங் கொத்து ஒன்றை அனுப்பி வைத்தார்.

உலகக் கிரிக்கெட்டில் தனது பந்துவீச்சால் பல சாத னைகளைப் படைத்துள்ள முரளிதரனுக்கு, முதலில் ஆண் குழுந்தை பிறந்தது. தற்போது இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது.

இந்நிலையில் சில குறும்புக்கார ரசிகர்கள், முரளிதரன் அடுத்த குழந் தையைப் பெற்றெடுத்து இதிலும் 'ஹெட்ரிக்' அடிப் பாரா என கிசுகிசுக்கத் தொடங்கிவிட்டனர்.

அடிப்பாரா முரளி 'ஹெட்ரிக்'?

# 2011இன் நாயகன்



2011ம் ஆண்டுக்கான சிறந்த உதை பந்தாட்ட வீரருக்கான 'பிபா பல்லான் டி ஆர்' விருதுக்கு ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், தொடர்ந்து 3ஆவது ஆண்டாக மெஸி இந்த விருதைப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, 24 வயதுக்குள் இந்த விருதை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்ற வீரர், என்ற பெருமையும் அவருக் குக் கிடைத்துள்ளது.

இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட 10 வீரர்களிலிருந்து லயனல் மேஸி (பார்சிலோனா) கிறிஸ்டியானோ ரொனால் டோ (ரியல்மாட்ரிட்), சேவி ஹெர்னான் டஸ் (பார்சிலோனா) ஆகியோர் இறுதிப் பட்டியலில் இடம்பிடித்தனர்.

இந்த மூன்று பேரிலிருந்துதான் மேஸி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பிரான்ஸின் ஜிடேன், பிரேஸில் வீரரான ரொனால்டோ ஆகி யோர் இந்த விருதை மூன்று தடவைகள் பெற்றுள்ளனர்.

1991ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

ஆர்ஜென்ரீனா தேசிய அணியில் மாத்தி ரமின்றி, பார்சிலோனா அணிக்காகவும் மேஸி விளையாடி வருகிறார்.

'சம்பியன்ஸ் லீக்', 'ஸ்பானிஷ் லீக்', 'ஐரோப்பா சூப்பர் கிண்ணம்', 'ஸ்பானிஷ் சூப்பர் கிண்ணம்' ஆகிய தொடர்களில் மேஸியின் அபார ஆட்டம் மூலம் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

கடந்த ஓராண்டில் சர்வதேச போட்டிகளில் மெஸி 53 கோல்களை அடித்துள்ளார்.

இதுதவிர சக வீரர்கள் கோல் அடிக்க பலமுறை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அதேவேளை, உதைபந்தாட்டத்தின் மூலம் அதிக அளவு பணத் தையும், அதைவிட அதிகமான புகழையும் சம்பாதித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளவரும் இவர்தான்.

# யாழ். வீரர்கள் இருவர் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.11

இலங்கைச் சதுரங்க சம்மேளனம் நடத் திய நேவிசஸ் சதுரங்கத் தெரிவுப் போட் டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அலோ சியஸ் அன்று, என் சோதிநாதன் ஆகி யோர் வெற்றியீட்டி அடுத்த தர நிலைப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதில் அலோசியஸ் அன்று 7 சுற்றுப் போட்டியில் விளையாடி 6 புள்ளிகளையும், என். சோதிநாதன் 7 சுற்றுப் போட்டியில் விளை யாடி 5 புள்ளிகளையும் பெற்று அடுத்த தர நிலைப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டியானது கடந்த வாரம் கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் முதன் முறையாக தமிழ் வீரர்கள், வீராங்கனைகள் அதிகள வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்கள்

### கந்தவனம் பாலசுப்பிரமணியம் (M.Sc)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், ஹமில் டன், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் பாலசுப்பிரமணியம் 08.01.2012 அன்று கனடா வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்த வனம் - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் பாச மிகு மகனும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி சிவபாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோ தரரும், புன்னாலைக் கட்டுவன் தெற்கு காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், கனடாவில் வசிப்பவர்களான சரஸ்வதியின் அருமைக் கணவரும், ஜோ. சரவணபாலன், ஆன் பாலசரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லஷ்மியின் அன்பு மாமனும், இஷாவின் நேசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (14.01.2012) சனிக்கிழமை காலை ரொறன்டோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1360, York Mills Road,
PH 10, North York,
TORONTO,
ONTARIO,
M 3A, 2A3,
001 - 416 - 4779486

(12876) (6,7,45)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா



நெசவுசாலை வீதி, வீமன்காமம், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அம் மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்மா (சோதிஅக்கா) அவர்கள் நேற்று (10.01.2012) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத் தின் மனைவியும், ஜெகதீஸ்வரன் (ஈஸ் வரன்), இராஜேஸ்வரி (ஈஸ்வரி) ஆகியோரின் அன்புத் தாயா ரும் சுதந்திரராஜா (சுதா-யாழ் தபாலகம்), மங்கலேஸ்வரி ஆகி யோரின் மாமியும் ரவிசங்கரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2012) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல் வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(12956) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## முக்கிய அறிவித்தல்

இல.145C, பொன்னம்பலம் வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் நானாவேன் இக் காணி யில் அமைந்துள்ள கட்டடத்தில் உள்ள கடை ''ஆரபி குளிர் சோலை'' தொடர் பில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்தால் சகலருக்குமறியத்தருவதாவது இக்கடை தொடர்பில் கீழ் வாடகைக்கோ (Sub let) வேறு எந்த விதத்திலேனும் ஒப்பந்தத்திலீடுபடும் பட்சத்தில் அது தொடர்பான கொடுக்கல் வாங்கல் களுக்கு நான் பொறுப்பேற்கமாட்டேன் என்பதை அறியத்தருகிறேன்.

வைத்தியர் சி.நாகேந்திரன்,
(ஆதன உரிமையாளர்),
39, விவேகானந்த வீதி,
கொழும்பு-06.

(C/7442)(5,6,7)

MBBS/MD
Lugansk State Medical University
UKRAINE -EAST EUROPE
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL
With A/Ls 6 years
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.
www.lugmedi.org
Tel : (தமிழில்) 0777 767 818 / 4512591
Scholars Information Centre
No.01, Vaverset Place, Colombo 06.

## கண்ணீர்க் காணிக்கை

யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியற் துறையில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் இ.ஜெகநாதன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி இரத்தினம் தங்கரட்ணம்

அவர்கள் 09.01.2012 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த தையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது இதய பூர்வ மான கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துவதுடன் அன்னா ரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணித புள்ளிவிவரவியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

(12875)(2-6-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### மயிலன் பொன்னன்



அன்னை மடியில் 07.03.1933
ஆண்டவன் மடியில் 23.12.2010

திதி 11.01.2012

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்றான போதும்
ஆறாது உம் பிரிவின் துயரம்
எம் உயர்வுக்கு உறுதுணையாய்
என்றும் எம் இதயத்தில் நிறைந்தவரே

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
இராஜபுரி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(12878) 6,7,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
தி.ஜீவரட்ணம் அவர்களின்
அன்பு மாமன்

### பெரியார் சரவணை

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களையும்
கண்ணீர் அஞ்சலியையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர் அணி.
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம்) 2009/2010
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (12879)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலால் ஆட்டம் காணும் இலங்கை கிரிக்கெட் அணி

இலங்கை கிரிக்கெட் அணி உட்பூசல்களால் பல அணிகளாக பிரிந்துள்ளதாக கூறிய விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அண்மைக் காலமாக அணியின் விளையாட்டுத் தரம் குறைவடைந்துள்ளதையும் வன்மையாக கண்டித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கை அணி நாடு திரும்பிய பின்னர், விளையாட்டு வீரர்களுடன் வெளிப்படையாக சில விடயங்களை பேசவுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார். தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் தொடரில் 2 1 என்ற விகிதத்தில் இலங்கை அணி தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி நெருக்கடியில் உள்ளது. அணியினர்களுக்கிடையே களத்துக்கு வெளியில் நல்ல உறவு இல்லை. இது விளையாட்டின் தரத்தைப் பாதிக்கின்றதென அமைச்சர் தெரிவித்துள்ளார். அணி இலங்கை திரும்பியதும் நான் அவர்களை சந்திக்கவுள்ளேன். அணியில் அதிக உள் அரசியல் உள்ளதென கருதுகின்றேன். இது கிரிக்கெட் களத்திலும் தெரிகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். முத்தையா முரளிதரன் 2010 இல் இளைப்பாறிய பின்னர் இலங்கை ஒரேயொரு டெஸ்ட் ஆட்டத்தில் தான் வெற்றி கண்டது.

விளையாட்டில் தலையிடுவதாக இலங்கை அரசாங்கத்தின் மீது குறை கூறப்படுகிறது. அண்மையில் கிரிக்கெட் சபைக்கான போட்டியில்லாத தெரிவுகளிலும் தலையீடுகள் இருந்ததாக கூறப்படுகின்றது.

இதேவேளை, நல்ல கிரிக்கெட் வீரர்களை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. எமது உள்நாட்டு அமைப்பு திருத்தப்பட வேண்டும். கழகங்களில் விளையாடுவதற்கும் சர்வதேச கிரிக்கெட் விளையாடுவதற்குமிடையில் பாரிய வேறுபாடு உண்டு என்று இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் திலகரட்ன டில்ஷான் கூறினார். இதேவேளை பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லையென சில விளையாட்டு வீரர்கள் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

# ஹொக்லியை தொடர்ந்து இஷாந்த் சர்மா




பொதுமக்களிடம் இந்திய வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா அநாகரிகமாக நடந்து கொண்டதாக புகார் எழுந்துள்ளது.

இந்திய அணியினர் திங்கட்கிழமை 'கோ-கார்ட்டிங்' சென்றனர். அப்போது தொலைக்காட்சிக் குழுவினரும், பொதுமக்களும் தங்களைப் பின்தொடர்வதை அவர்கள் விரும்பவில்லை. இதில் கோபமடைந்த இஷாந்த் சர்மா பொதுமக்களிடம் அநாகரிகமாக நடந்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

ஆனால், இதுபோன்று சம்பவம் நடந்தது பற்றி எனக்குத் தெரியாது என்று இந்திய அணியின் செய்தித் தொடர்பாளர் ஜி.எஸ். வாலியா கூறினார்.

சிட்னி டெஸ்டின் போது ரசிகர்களை நோக்கி விராத் ஹொக்லி அநாகரிகமாக சைகை காட்டினார் என்ற புகார் எழுந்தது. இதையடுத்து அவரது ஆட்ட ஊதியத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (15)

# 2015 அதிர்ஷ்டம் எங்கள் பக்கமே




உலகக்கிண்ணத்தை வெல்லும் அணியொன்றின் அங்கத்தவராக நான் இருக்க வேண்டும். அதுதான் எனது மனதிலுள்ள இலக்கு.


2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ண சுற்றுத் தொடரில் தென்னாபிரிக்க அணி சம்பியனாவதை தான் இலக்காகக் கொண்டிருப்பதாக தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் ஜக் கலிஸ் கூறியுள்ளார்.

டெஸ்ட் அந்தஸ்துள்ள 9 நாடுகளுக்கு எதிராகவும் ஜக் கலிஸ் சதங்களைக் குவித்துள்ளார். ஆஸ்திரேலியா, இங்கிலாந்தில் தொடர் வெற்றிகளைப் பெற்ற அணியிலும் அவர் அங்கம் வகித்தார். எனினும் உலகக்கிண்ணத் தொடரில் மாத்திரம் அவரின் அணி வெற்றி பெறவில்லை இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் தனது அணி சம்பியனாக வேண்டும் என்று விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

உலகக்கிண்ணத்தை வெல்லும் அணியொன்றின் அங்கத்தவராக நான் இருக்க வேண்டும். அதுதான் எனது மனதிலுள்ள இலக்கு என்று கலிஸ் கூறினார்.

இலங்கையுடனான 3 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்ற பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார். அந்த ஆட்டத்தில் கலிஸ் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. இரட்டைச் சதமொன்றை குவித்த அவர் 3 இலக்குகளை வீழ்த்தியதுடன் 6 பிடிகளையும் கைப்பற்றினார்.

37 வயதான கலிஸ் 5 உலகக்கிண்ணத் தொடர்கள் உட்பட 317 ஒரு நாள் சர்வதேச போட்டியில் விளையாடியுள்ளார். இலங்கை அணியுடனான ஒருநாள் தொடரின் முதல் இரு ஆட்டங்களுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தத் தொடரின் 5 ஆட்டங்களிலும் விளையாடுவதற்கு தான் விரும்புவதாக கலிஸ் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)




## இந்தியாவைத் திணற வைக்க மைதானம் தயார்

இந்திய - ஆஸ்திரேலியா அணிகள் 4 டெஸ்ட் ஆட்டத்தில் மோதுகின்றன. ஏற்கனவே நடந்த 2 ஆட்டங்களில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

3 ஆவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வருகின்ற வெள்ளிக்கிழமை பேர்த் நகரில் தொடங்குகிறது. இந்த ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை நடந்த 2 ஆட்டங்களுக்கான மைதானங்களை விட அதிகளவு பச்சை புற்கள் காணப்படுகின்றன.

எனவே அதிவேக பந்துவீச்சுக்கு சாதகமாக மைதானம் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் குவிப்பதை தடுக்கும் வகையில் மைதானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை மைதான வடிவமைப்பாளர் கேமரான் சுதர்லேன்ட்டும் உறுதிப்படுத்தினார். இங்கிலாந்து முன்னாள் அணித்தலைவர் கொலிங் வூட் கூறுகையில், ஆஸ்திரேலிய பந்துவீச்சு தற்போது நன்றாக உள்ளது. குறைந்தபட்சம் 150 கி.மீ. வேகத்தில் பந்து வீசலாம். இந்த பந்துவீச்சை சமாளித்து இந்தியா வெற்றி பெறுமா என்பது சந்தேகம் தான் என்றார்.

## பயிற்சி வேண்டாம்

டெஸ்ட் ஆட்டங்களில் படுதோல்வி அடைந்த இந்திய வீரர்கள் திருந்தவே இல்லை. தீவிர பயிற்சியில் ஈடுபடுவதற்கு பதிலாக, 'கோ- கார்ட்டிங்' ரேஸில் பங்கேற்று சர்ச்சையை கிளப்பியுள்ளனர்.

ஆஸ்திரேலிய சென்றுள்ள இந்திய அணி, முதலிரண்டு டெஸ்டில் தோல்வி அடைந்தது. முக்கியமான மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 13 ஆம் தேதி பேர்த்தில் தொடங்குகிறது. இதில், சாதிப்பதற்கு இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 'கோ-கார்ட்டிங்' எனப்படும் சிறிய வகை கார் ரேசில் கலந்து கொண்டு பொழுதை வீணாக்கினர்.

இந்தத் தொடரில் இந்திய வீரர்கள் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காதது பற்றி முன்னாள் வீரர் கவாஸ்கர் கடுமையாக சாடினார். இவர்கள், ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுலா செல்லவில்லை என்று விமர்சித்தார். வீரர்களின் தவறான மனநிலைக்கு அணித்தலைவர் டோனியின் அணுகுமுறையும் ஒரு காரணம். வலைப்பயிற்சியில் ஈடுபடுவதால் உடனடி பலன் கிடைக்கப் போவதில்லை என்று நம்புகிறார்.

ஆனால் இந்திய அணியின் முகாமையாளர் அலுவாலியா கூறுகையில், ஆஸ்திரேலிய பந்துவீச்சை நமது வீரர்கள் நன்கு அறிந்து கொண்டனர். தற்போதைக்கு வேறு விஷயங்களில் கவனம் செலுத்துவது தான் நல்லது. சிலர் பயிற்சியில் அதிக நேரம் செலவழிக்க விரும்பலாம். தனிப்பட்ட முறையில் என்னை கேட்டால், கிரிக்கெட்டில் இருந்து விலகி, பொழுதுபோக்கு தொடர்பான விஷயங்களில் ஈடுபடுவதே சிறந்தது. இது மனதளவில் புது உற்சாகம் தரும், என்றார்.

மேலும், 'கோ-கார்ட்டிங் ரேஸ்' போன்றவை மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவும். சிறிய வகை ரேஸ் காரை ஓட்டும் போது புது அனுபவம் கிடைக்கும். 2007-08 இல் பேர்த்தில் நடந்த டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்னர், இந்திய வீரர்கள் சைக்கிள் 'ரேசில்' கலந்து கொண்டனர். பின்னர் அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றனர், என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

## Web Developers

- knowledge of HTML and Javascript.
- Knowledge in MYSQL database management and PHP.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரக் கோவையை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கவும்

**Online Uthayan**

359, Kasthuriyar Road, Jaffna
T.P 0215672222
Email : it@uthayan.com


# கண்ணீர் காணிக்கை

யாழ். நகர்மைய
றோட்டறக்ட்
கழகத்தின் தலைவி
Rtn.யோ.பிந்துஜா
அவர்களின் பாசமிகு
தந்தையார்

**இராஜா யோகராஜா**
(சமாதான நீதிவான்)



அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

யாழ். நகர்மைய
றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள்.

# மரண அறிவித்தல்

## நாகராஜா தவமணி



வேலணை கிழக்கு, 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5/2, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட நாகராஜா தவமணி நேற்று (10.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜாவின் (இ.போ.ச. காப்பாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா (ஆசிரியர்), சிவஞானம் ஆகியோரின் அன்பு சகோ தரியும் திருமதி ராகினி (23B, ward, sister யாழ். போதனா வைத் தியசாலை), மோகனேஸ்வரன் (நூலக உதவியாளர், யாழ். பல்கலைக் கழகம்), விமலநாதன் (ஜேர்மனி), கோமதி (ஜேர் மனி), பிரேமினி (சுவிஸ்), ஜெயரஞ்சினி (ஆசி ரியை, வ/பூவரங் குளம் ம. வி. வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் ராஜேந்திரம் (இளைப் பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), திருமதி இ. மோக னேஸ்வரன் (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம் யாழ்), கலைவாணி (ஜேர்மனி), அன்ரனி (ஜேர்மனி), றொபேட் (சுவிஸ்), கிறிஸ்ரி, ஜோசேப் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், முல்லைத்தீவு), ஆகியோரின் அன்பு மாமியும் அபிலாஷ், அபிஷேக், சோபிதன் (யாழ். இந்துக் கல்லூரி), பிரசாந்தி, நாவலன் (லண் டன்), சிந்துஜன், விதுஜன் (ஜேர்மனி), அருணன், அபிஷன், அனு ஜன் (ஜேர்மனி), சீமோன், ஸ்ரீபன், சாருஜா (சுவிஸ்), வ/விவே கானந்தா கல்லூரி மாணவர்களான நிரோஜா, கிரிஷாத், அனுசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2012) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.பகல் 3மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/2, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி, நல்லூர்.

தகவல்:
மோகனேஸ்வரன் (மகன்).

## செல்லத்துரை சிவகணேசதாசன்



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவகணேசதாசன் (10.01.2012) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லப்பாக்கியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பகிரதி, பாலேந்திரா மற்றும் பத்மாவதியின் அன்புச் சகோதரனும், பஞ்சாட்சரநாதனின் மைத்துனரும் ஈஸ்வரதாசன் (அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி), ஞானேஸ்வரதாசன், மோகனதாசன் (சுவிஸ்),செல்வரதி (சுவிஸ்), அமுதா (கால் நடை வைத்தியர், விலங்கு புலனாய்வு நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் பகீரதன், பிரபாகரன், செல்வராணி, சுதோசனா, புஸ்பா, சஞ்சிவன், சாந்தினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பகிரதன், சௌமிதா, கம்சிதா, திவாரதன், சயந்தனா, சபாந்தினி, அனுஜன், சிந்துஜன், கம்ன்ஜா, பகீசன், லக்ஷன், லாஷினி, பிரகீஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.01.2012) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
சிவசக்தி கோயிலடி.

தகவல்:
பத்மாவதி (சகோதரி).

# நினைவுப் பேருரை

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் வடபிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் ' யாழ்ப்பாணத்திற்கான ஆறு' நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# அரச பொங்கல் விழாவை புறக்கணித்தது கூட்டமைப்பு

1

இணைந்தே தேசிய பொங்கல் விழாவை முன்னெடுக்கின்றன. இந்தப் பொங்கல் விழா வுக்கு அரசியல் முக்கியஸ்தர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு ஜனாதிபதி செயல கம் தீர்மானித்துள்ளது.அப்படி அழைப்பு விடுக்கப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரிக்கும் முடிவை எடுத்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகிறது.

''தமிழர்களின் பிரச்சி னைகளைத் தீர்க்காமல் அரசு காலத்தை இழுத்தடிக்கின்றது. தமிழ் மக்களின் பிரதி நிதிகளை புலிகள் என்று விமர்சிக்கின்றது. இந்தநிலை யில் அரசு ஏற்பாடு செய்யும் இவ்வாறானதொரு எந்த வொரு நிகழ்விலும் தாம் பங்கேற்கப்போவதில்லை'' என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்மக் கள் வாழ வழியின்றி சொல் லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் நிலையில், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசு, தமி ழர்களின் கலாசார நிகழ்வு களை மட்டும் நடத்துவதால் இன ஐக்கியம் ஏற்படாது என் பதையும் கவனத்தில் எடுத் துக்கொள்ள வேண்டும் என மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பி னர் சுட்டிக்காட் டினார். (உ-சி)

# எங்கள் நிலத்தை நாங்களே ஆளும் காலம் விரைவில் வரும்

1

அன்று கொல்லப்பட்ட இந்த உயிர்கள் தமிழினத்தை எழுச்சி பெற வைத்தது. எங்கள் இனத்தின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப் பதற்கு இந்தத் தியாகிகளின் உயிர்கள்பலியாக்கப்பட்டமை யும் ஒரு அடிப் படையாக அமைந்தது.

தமிழ் மக்களின் சார்பில் பலி கொள்ளப்பட்ட இந்த 10 உயிர்களுக்கும் இன்று அஞ்சலி செலுத்துவதற்கு மாத்திரம் நிகழ்வல்ல. தமிழ் மக்கள் இருக்கும் வரை இந்த மறவர்களை மறந்து போகா மல் நினைவு கூருவார்கள்.

இந்தத் தியாகிகள் கொல் லப்பட்டமை தொடர்பில் நேர்மையான விசாரணை கள் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக இவர்களின் கொலைக்குக் காரணமாக இருந்த சந்திரசேகர் என்ற பொலிஸ் அதிகாரிக் குப் பதவி உயர்வே வழக்கப் பட்டது.

தமிழ் மக்கள் தமது பாரம் பரிய, பண்பாட்டு நிகழ்வுக ளைக் கொண்டாடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணமும் - செயற்பாடும் அரசின் நிகழ்ச்சி நிரலில் இன்று மட்டுமல்ல ஆரம்ப காலம் தொட்டே இருந்திருக் கிறது.

சிங்கள, பௌத்த வல்லா திக்கம் நாடு முழு வதையும் ஒரே இனமே ஆள வேண் டும், அதனையும் பெரும் பான்மை சிங்களவர்களே ஆள வேண்டும் என்ற அதி கார வெறியோடு தமிழ்மக் களை அடக்கி ஆழ்கிறது. இதனால்தான் இந்த இடத் தில் அன்று எங்கள் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதுதான் இன்றும் நடை பெறுகிறது.

இதனைத் தமிழ் மக்க ளாகிய நாங்கள் மனதிலே இருத்தி, எங்களுடைய இனம் இந்த மண்ணிலே விடு தலை பெற்று, தங்களுடைய நிலத்தைத் தாங்களே ஆளுகின்ற வரையில் இழப்பு களையும், அனுபவித்த துன் பங்களையும் மறந்துவிடா மல் இருக்க வேண்டும்.

இழப்புகளை அத்திவார மாக எடுத்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக் கின்றவர்களாக நாங்கள் இருக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூணுவோம் - என்றார்.

இந்த நிகழ்வில் புளோட் தலைவர் தர்ம லிங்கம் சித் தார்த்தன், யாழ்.நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீ தரன், யாழ்.மாவட்ட முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினர் கே.சிவாஜிலிங்கம், தமிழரசுக் கட்சியின் முக்கி யஸ் தர்களுள் ஒருவரான வாழ்நாள் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோர் உரை நிகழ்த் தினர். (த-10-15-17)

**2012 Chemistry பிரத்தியேக வகுப்பு**

2012/ 2013 Batch English/ Tamil Medium Physical Chemistry, Organic, Inorganic Chemistry கூடந்த ... அனுபவம்மிக்க ஆசிரியரால் (B.Sc.M.Sc (Chemistry)) ... கற்பிக்கப்படும். தொடர்பு:-0776038913

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம்



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம் (அரச ஒப்பந்தகாரர்) நேற்று (10.01.2012)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா- செல்லாச்சி தம்பதியரின் மூத்த மருமகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அழகம்மா, அமரசிங்கம் மற்றும் திகழம்மா, ஏகாம்பரம், குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லிகாமலர் (ஜேர்மனி), கணேசதாஸ் (ஜேர்மனி), லலிதா, சண்முகதாஸ் (உரிமையாளர், ஜெகிந்தன் பல்பொருள் வாணிபம் - வாதரவத்தை), உஷாநந்தினி, கோபாலதாஸ் (கிராம அலுவலர் - அச்சுவேலி மேற்கு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராஜா (ஜேர்மனி), சத்தியதேவி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (பிரதேச சபை உப அலுவலகம், உரும்பிராய்), கோமதி, செந்திகா, லிங்கராஜா (பிரதேச சபை - புத்தூர்), குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும் யசோதரன் (ஜேர்மனி), டயானி (ஜேர்மனி), கஜந்தா (ஜேர்மனி), கோசலா (ஜேர்மனி), திஷா (ஜேர்மனி), கர்ணதாஸ் (ஜேர்மனி), சிவதாஸ் (ஜேர்மனி), சுஜானா (ஜேர்மனி), அனித்தா, அஜிந்தாஸ், அஜிந்தா, அபிரா, ஜெகிந்தாஸ், சாருமதி, யசிந்தாஸ், தஜிந்தாஸ், ஜெசிந்தாஸ், நிஷாந்தாஸ், அஸ்வினி, சுஜானி, அகிந்தாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் அட்சயா, அயன், ஆருஜன், வினுசா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.01.2012) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் வாதரவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாதரவத்தை,
புத்தூர். (C-7530)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

## வைத்திலிங்கம் பரமேஸ்வரன்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பரமேஸ்வரன் 06.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் இலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் நமோனாவின் அன்புக் கணவரும் தேவி, திம், வாணி, லஷ்மி, ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தியின் அருமைப் பேரனும் பிராங்கின் மாமனும், நவமணிதேவி (இலங்கை), பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர் - ஆஸ்திரேலியா), உலகநாதன் (இலங்கை), லோகேஸ்வரன் (லண்டன்), கோபாலசிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான கமலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.01.2012) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குமரகோட்டம்,
கோண்டாவில். (12889)
வைத்திலிங்கம் இலட்சுமி
(தாய்)

## இராசையா பாக்கியம்



காரைநகர், சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பாக்கியம் நேற்று (10.01.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசம்பு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், மனோரஞ்சிதம் (கொழும்பு), கணேசலிங்கம், சண்முகலிங்கம் (பிரான்ஸ்), அமிர்தலிங்கம் (சுவிஸ்), சத்தியலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவபாலன் (கொழும்பு), யோகம்மா (பிரான்ஸ்), சறோஜா (சுவிஸ்), பத்மலோசினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பூமணியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்தம்புளியடி,
காரைநகர். (11554)
பிள்ளைகள்
மருமகன் சிவபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### நா. கருணாகரன்

(அதிபர், யா/ கைதடி
கலைவாணி, வித்தியாலயம்)
எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது யா/ கைதடி கலைவாணி வித்தியாலயத்திற்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற திரு நா. கருணாகரன் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

## சம்பளப் பிரச்சினை ஆராய்வு

கொழும்பு,ஜன.11

அரச மற்றும் தனியார்துறை பணியாளர்களுக்கான சம்பள பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 13 ஆம் திகதி ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் கொழும்பில் கூடவுள்ளது.

இதற்கிடையில் தனியார் மற்றும் அரச பணியாளர்களுக்கான சம்பள பிரச்சி னைக்கு தீர்வு காணப்படாத பட்சத்தில், ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சங்கத்தின் இணைப்பாளர் அன்டன் மார்க்கஸ் தெரிவித்துள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச் செயலக
புனர்வாழ்வு புனரமைப்புச்
செயலகத்தில் கடமையாற்றும்
த. திருக்குமரன்
அவர்களின் பாசமிகு தந்தை

### சுப்பிரமணியம் தம்பிராசா

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

நலன்புரி கழகம்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 02 . 1939



ஆண்டவன் அடியில்
24 . 12 . 2010

அமரர்

### செல்வி பொன்னம்மா செல்லையா (சித்தி)

(ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ்.மத்திய கல்லூரி)
திதி: 11.01.2011

*நீங்கள் எம்முடன் உடன் இருந்து*
*எம்மை வழிநடத்திய*
*காலங்களை அசை போட்ட வண்ணம் எமது*
*வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*பிரார்த்திற்கும் உங்கள் உறவுகள்*

'தங்கம்'
124/3, செல்லர் வீதி, நல்லூர். (12892) குடும்பத்தினர்.

## பேச்சில் இணைக்க முடியாது

கொழும்பு,ஜன.11

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களில் ஆபிரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ள முடியாது என்று அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்றுவரும் பேச்சுகளில் மத்தியஸ்தம் வகிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஆபிரிக்க தமிழ் காங்கிரஸிடம் கோரியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

## உடனடி வேலைவாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனத்தில் பின்வரும் பணிக்கு பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

**அச்சு இயந்திர இயக்குனர்**

- கல்வித்தகைமை (O/L - A/L)
- பகல் - இரவு வேலை செய்யக் கூடியவர்கள்
- குறைந்தது ஏதாவது இரண்டு இயந்திரத்தில் 3 வருட அனுபவம்


சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சை பின்வரும் விலாசத்தில் 11, 12.01.2012 ஆகிய தினங்களில் காலை 9.00 -12.00 வரை நடைபெறும். சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

லக்ஷ்மி என்ஜினியரிங்,
105, இராசபாதை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (C-7545) முகாமையாளர்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி முத்துலிங்கம்



முக்கராவத்தையைப் பிறப்பிடமாகவும் அத்தியடி கம்பர் மலையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி முத்துலிங்கம் நேற்று (10.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும், ஐயாத்துரை, கிட்ணசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்வலிங்கம், விசாகலிங்கம் நடனலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், சற்குணவதி, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனும், முகுந்தன் (கனடா), மயூரன் (கனடா), சுகன்யா, லாவண்யா, விஜிதா (லண்டன்), விஜிதரன், றஜித்தா, விஜியகலா ஆகியோரின் பாசமிகு பேரனும் அஜய், ரிதன் ஆகியோரின் பூட்டனும் சிவலிங்கம், சோமசுந்தரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.01.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்தியடி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராஜா யோகராஜா

(சமாதான நீதிவான், மூத்த விநாயகர் சனசமூக நிலைய முன்னாள் செயலாளர், கிராம அபிவிருத்திச் சபை அங்கத்தவர்)



யாழ்ப்பாணம் நல்லூரரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராஜா - யோகராஜா அவர்கள் (10.01.2012) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் திருமதி பார்வதியம்மாவின் மருமகனும், திருமதி ஞானாம்பிகையின் (ஜெயமணி) அன்புக் கணவரும், புஸ்பமலர், யோகமணி, தவமணி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சிங்கராஜா, சிவபாதம், தேவநாயகம், சொர்க்கலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பிரஷாந்தினி (லண்டன்), நித்தியா (யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்), பிந்துஜா (Care International, Vavuniya) மதன் பிரசன்னா (கொமர்ஷல் வங்கி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயபாபுவின் அன்பு மாமனும், சாஜித்தியனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18/1 மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (12964)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர் மயானத்தில் நடப்பது என்ன?

1 »

துக்கு கொண்டு செல்வது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உதயனுடன் தொடர்பு கொண்டு கூறுகையில்; இறந்த போராளிகளின் உடல்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தை அகழ்வது அவர்களின் எலும்புக் கூடுகளை அகற்றுவதற்கே - என்றார்.

குறிப்பிட்ட அந்தப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் நோக்கத்துடனேயே இந்த எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் அகற்றும் வேலைகள் நடக்கின்றனவோ என்று மக்கள் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

## கனேடிய எம்.பிக்கள் கிளிநொச்சி பயணம்

1 »

அடங்கிய குழுவினர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து மாவட்டத்தின் முன்னேற்றம் மற்றும் மீள் குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரை யாடினர்.

இந்தச் சந்திப்பில் கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் மற்றும் பொலிஸ் அதிகாரி, இராணுவத்தினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் பிரசன்னம் காரணமாக அரச அதிபர் மக்களின் குறைகளை, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறத் தயங்கியதாகவும், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பற்றியே அவர் கலந்துரையாடினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(த-10-06)

## விவேகானந்தர் சிலை உடைப்பு

1 »

அத்தியட்சகர் லால் செனவிரட்ன தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் உட்பட பிரமுகர்களும் மாகாணசபை உறுப்பினர் பி.பிரசாந்தனும் சம்பவ இடத்திற்குச் சென்று உடைக்கப்பட்ட சிலையைப் பார்வையிட்டனர். (சி)

## பண்ணைப் பகுதியையும் விட்டு வைக்காத படையினர்

1 »

அனுப்பப்பட்டிருந்தது.

இதற்குப் பிரதேச செயலகம் பதிலளித்து அனுப்பிய கடிதத்தில் அந்தக் காணி சுகாரதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் யாழ். மாவட்ட செயலகத்தினால் குறித்த காணி அளவீடு செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சினால் காணி அமைச்சுக்கு மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து காணி ஆணையாளர் நாயகம் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு மேலும் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான அந்த 2 ஏக்கர் காணியைப் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

## தென்னாபிரிக்காவின் மீது இலங்கை கடும் அதிருப்தி

1 »

இது என்ன நியாயம்? எமது அதிருப்தியையும், கவலையையும் நாம் தென்னாபிரிக்க அரசிடம் வெளியிட் டிருக்கிறோம். எனது தலைமையிலான குழு தென்னாபிரிக்க வெளி விவகார அமைச்சின் உயர் மட்டக் குழுவை சந்தித்துப் பேச்சு நடத்தியது. இதன் போதே நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிட்டோம். உலகத் தமிழர் பேரவைக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தென்னாபிரிக்க அரசின் தீர்மானம் அல்லவென எமக்குப் பதில் வழங்கப்பட்டது. ஆனால் அந்தப் பதில் எம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை - என்று குறிப்பிட்டார் தூதுவர் ஷெஹான்.

(உ-சி)

## உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்....

14 »

கும் ஒட்டுக் குழுக்களுக்கும் ஏன் அரசிறைக்கும் இதன் மூலம் கிடைக்கும் பெருவருவாய் வழிமூலங்களை நிறுத்தும் துணிச்சலற்ற பொன்னாசையும் தானே? அந்தக் காரணங்கள்.

தயாரிப்பாளர்களாக, விநியோகஸ்தர்களாக, தரகர்களாக எம் சமூகத்தின் இடைவெளிகளில் களமிறக்கி விடப்பட்டுள்ள போலிகளின் மூலம், தமிழ் ஊடகங்களின் வருவாயின் பெரும் பகுதியை ருசித்த நாவுகள், கொழுத்த லாபத்தை கோட்டைவிடத் தயாராக இல்லை என்பதே உண்மை!

### உண்மையை உணர்தல்

நோகாமல் நுங்கு தின்னும் இந்த நூதன வியாபாரிகள், ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தும் வீரர்கள்'' என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். 'பிறதேச தமிழுணர்வாளர்களின் ஊட்டக் கருத்துக்கள் ஈழத் தமிழனைச் சென்றடையாமல் தடுத்து நிறுத்துவதோடு, இந்த வகைப் பெரும் முதலீடுகள் மூலம் கிடைக்கும் தமிழனின் பணமும் அவர்களின் பைகளை அடைந்து கொள்கின்றது.

ஆயுதப் போராட்டம் உச்சத்தில், சமவலு நிலையில் காணப்பட்ட காலத்தில், பிணக்குகள் எனும் பெயரளவில் முதுகில் குத்திவிட்டு தலைநகருக்குத் தப்பியோடியுள்ளவர்களின் தலையீடுகளால் சிலவகைப் போர் யுக்திகள் எதிர்பார்த்த வீரியமான வெற்றியைக் கொடுக்கத் தவறியதை அனுபவப் பாடமாகப் படித்துள்ளோம்.

இன்றைய விடுதலைக்கான இறுதிக் கல்வாரிப் பயணத்தில் 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்பவர்களாக' பொறுப்பெடுத்துள்ள புலம்பெயர் எம்முறவுகள் காலத்துக்குக் காலம் அரச கூலிகளாக மாறிவரும் வெளிநாடுவாழ் அடையாளங்களின் பச்சோந்தித் தனத்தை நன்கு தெளிந்து காலத்துக் காலம் தமது அணுகுமுறைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தரவேற்றம் செய்வதன் மூலம் இலக்குகள் இலகுவில் வசப்படும் என்பதே தேசியம் விரும்பும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்தினதும் பெருவிருப்பு.

## பல்கலைக்கழகக் கல்வி எப்படி இருக்கவேண்டும்?

15 »

யர்கள் அவற்றைக் கை விட்டு விட்டார்கள். நாடகம் பற்றிச் சரியாகத் தெரியாததாலோ அல்லது தாங்கள் அவற்றைப் படைக்காததாலோ?

இன்று பழைய கவிதை இலக்கியங்களை ஒருவரும் படைப்பதில்லை, படிப்பதுமில்லை. பரீட்சைக்காக மட்டும் படிக்கிறார்கள். நவீன இலக்கியங்களான சிறுகதையும் நாவலும் நாடகமுமே இன்று எழுதப்படுகின்றன. வளர்ந்துவரும் நவீன இலக்கியங்களைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி படிக்கும் பிள்ளைகளுக்குக் கட்டாயம் கற்பிக்க வேண்டும்.

இது கவிதைகளின் காலமல்ல உரைநடையின் காலம். தமிழ் உரை நடை நன்றாக வளர்ந்து விட்டது. தமிழ்ப் பிள்ளைகள் வருங்காலத்தில் தமக்கு வேண்டிய எல்லாவற்றையும் உரைநடையிலேயே கற்கப்போகிறார்கள். தமிழ் உரை நடையை வளர்ப்பவை நவீன இலக்கியங்களே அந்த நவீன இலக்கியங்களைத் தமிழ் படிக்கும் பிள்ளைகளுக்குக் கட்டாயம் கற்பிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள எல்லா பல்கலைக்கழகங்களிலும் எல்லாவகை நவீன இலக்கியங்களையும் கற்பிக்கிறார்கள். உலகம் முழுவதிலும் நவீன இலக்கியங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

இப்பொழுது உள்ள தமிழ்ப் பேராசிரியர்கள் முன் இருந்தவர்கள் செய்யாததை நாங்கள் எப்படிச் செய்ய முடியும் என்று தயங்கலாம். அப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி, உப்புத் தண்ணியைக் குடித்துச் சுவைக்காதீர்கள்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை துணிந்துதான் பேச்சு வழக்கில் இலங்கை மண்வாசனை நாடகங்களை எழுதினார். கிண்டல்கள் கண்டனங்களைப் பொருட்படுத்தாமல் கலாநிதி வித்தியானந்தனும் துணிந்துதான் அவற்றை அரங்கிட்டுக்காட்டினர். காலத்திற்கு ஏற்றதை மாணவர்களுக்கு வேண்டியதைத் துணிந்து செய்யுங்கள். நீங்களும் அவர்களைப் போல் வரலாற்றில் இடம் பெறுவீர்கள்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
கடந்த 08.01.2012 அன்று நடைபெற்ற 15
ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்
கலை மாணி (B.A.) - S.L. 2nd Class)
பட்டம் பெற்ற



**திரு இராசையா மதீஸ்வரன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று
பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்
வாழ எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.

கிருஷ்ணா கூல்பார்,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

இ.ரவேந்திரன் (சந்திரன்)


### முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

முன்பள்ளி ஆசிரியர்களினதும் முன்பள்ளிகளதும் தரவுகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல் யாழ். கல்வி வலய முகாமைத்துவ வலயத்தில் 3 தினங்கள் நடைபெறவுள்ளது. இன்று நல்லூர்ப் பிரிவுக்கும் நாளை வியாழன் யாழ்ப்பாணப்பிரிவுக்கும் நாளை மறுதினம் கோப்பாய்ப் பிரிவுக்கும் பி.ப ஒரு மணிக்கு இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.(ங-ரி)







## சேவை நலன் பாராட்டு

## பொன்னுத்துரை தர்மேந்திரன்

**(பதவி நிலை உதவியாளர், தென்மராட்சி கல்வி வலயம்)**



கல்வித் திணைக்களத்தில் பல பதவிகளை வகித்து
09.01.2012 அன்று தனது சேவையை இனிதே
நிறைவு செய்கின்ற திரு. பொ. தர்மேந்திரன்
அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் அவரின்
ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டி
வாழ்த்துகின்றோம்.

### சேவை விவரம்

| | |
|---|---|
| 15.10.1980-20.12.1981 - | கணக்குப் பதிவாளர் - கல்வித் திணைக்களம் நிக்கவெரட்டியா. |
| 21.12.1981-31.01.1999 - | கணக்குப் பதிவாளர் - கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம். |
| 01.02.1999 - 31.10.2000 - | பிரதம கணக்கு எழுதுனர் - தீவக கல்வி வலயம். |
| 01.11.2000 - 06.01.2008 - | நிதியுதவியாளர் - தீவக கல்வி வலயம். |
| 07.01.2008 - 17.04.2008 - | பதில் நிர்வாக உத்தியோகத்தர் - தென்மராட்சி கல்வி வலயம். |
| 18.04.2008 - 09.01.2012 - | பதவி நிலை உதவியாளர் தென்மராட்சி கல்வி வலயம். |

நலன்புரி கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

வலயக் கல்விப் பணிப்பாளரும்
கோட்டக்கல்விப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும், பணியாளர்களும்.



## தசாக கிருஹயக்ஞ அழைப்பிதழ்

நிகழும் கர வருஷம் 17ஆம் நாள் (02.01.2012)
திங்கட்கிழமை மதியம் சிவபதமடைந்த



**திருமதி இரத்தின ஐயர் மனோன்மணி அம்மா**
அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக் கிரியைகள்
அழகொல்லையில் உள்ள அவரது இல்லத்தில் பின்வரும்
தினங்களில் நடைபெறும்.

தசாகம் 11.01.2012 புதன்கிழமை பகல் 10.00மணி
ஏகோதிஷ்டம், மாசிகம் 12.01.2012 வியாழக்கிழமை
சபிண்டீகரணம் 13.01.2012 வெள்ளிக்கிழமை
கிருஹயக்ஞம் (மதிய போசனம்) 14-01-2012 சனிக்கிழமை

எங்கள் அன்புத் தெய்வம் நோய்வாய்ப்பட்டு இருந்த போது இன் முகத்துடன் தென்பூட்டி வைத்தியம் செய்த Dr. வரதலிங்கம் அவர்களுக்கும் எம்மோடு தோளோடு தோள் நின்று அவரது ஆத்மக் கிரியைகளில் பங்கு பற்றிய அனைத்து இதயங்களுக்கும் எங்கள் அன்புசார் நன்றியை நவில்கின்றோம். மேற்படி கிரியைகளில் பங்கு பற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழகொல்லைப் பிள்ளையார்,
அளவெட்டி.


தகவல்: கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவின் அலுவலகத்தை தீக்கிரையாக்க முயற்சி

## கம்பஹாவில் நேற்றுப் பரபரப்பு

**கம்பஹா அலுவலக வளாகத்துள் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத குழுவொன்று அத்துமீறி நுழைந்துள்ளது. சுமார் மூன்றுபேர் வரை அக்குழுவில் அடங்கியிருந்தனர். பாதுகாப்புக் கடமையில் இருந்த அதிகாரிகளுக்கு சத்தம் கேட்டு அவர்கள் உஷாரடைந்தமையால் அந்தக் குழுவினர் தப்பியோடியுள்ளனர்.**



கொழும்பு, ஜன.11

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட அக்கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய எம்.பியின் கம்பஹா அலுவலகத்தை வெள்ளைவானில் சென்ற இனந்தெரியாத குழுவொன்று இரவோடிரவாகத் தீயிட்டுக் கொளுத்துவதற்கு முயற்சித்துள்ளது என கரு தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது விடயம் தொடர்பாகக் கரு ஜயசூரிய 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

''எனது கம்பஹா அலுவலகத்துக்குள் இனந்தெரியாத குழுவொன்று அத்துமீறி நுழைந்து சேதம் விளைவிப்பதற்கு முயற்சித்துள்ளது. பெற்றோல் கலன்களுடன் அந்தக் குழு அலுவலகத்துக்குள் நுழைந்ததால் தீயிட்டு அலுவலகத்தைக் கொளுத்துவதே அந்தக் குழுவினரின் பிரதான நோக்கமாக இருந்துள்ளது என்று நான் சந்தேகிக்கின்றேன்'' - என்றார் கரு ஜயசூரிய.

இந்தச் சம்பவத்தின் பின்னணி என்னவென்பது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்த கரு எம்.பி., இது தொடர்பில் கம்பஹா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கரு ஜயசூரிய எம்.பியின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரத்தியேகச் செயலாளர் சுசிலகுமார 'உதயனு'க்கு கூறியவை வருமாறு:-

திங்கட்கிழமை இரவு 12 மணிக்கும் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் எமது கம்பஹா அலுவலக வளாகத்துள் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத குழுவொன்று அத்துமீறி நுழைந்துள்ளது. சுமார் மூன்றுபேர் வரை அக்குழுவில் அடங்கியிருந்தனர். அலுவலகக் கடவையை (கேட்) உடைத்துக் கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்துள்ளனர்.

அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த அதிகாரிகளுக்கு சத்தம் கேட்டு அவர்கள் உஷாரடைந்தமையால் அந்தக் குழுவினர் தப்பியோடியுள்ளனர்.

வெள்ளைவானில் வந்த அந்தக் குழுவினர் தப்பியோடிய பின்னர் அலுவலக வளாகத்தில் பாதுகாப்புக் கடமையிலிருந்தவர்கள் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது, அவர்கள் விட்டுச் சென்ற பெற்றோல் தாங்கி (கான்) கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, விஷமிகள் குழு அலுவலகத்தைத் தீயிட்டுக் கொளுத்துவதற்கே முயற்சித்துள்ளது என நாம் சந்தேகிக்கின்றோம்.

சம்பவம் தொடர்பாக கம்பஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் - என்றார்.

இதேவேளை ஐ.தே.க தலைமைக்கு எதிராகச் செயற்படுபவர்கள் அனைவரும் துரோகிகளே என்று அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார். எனவே இந்தத் தாக்குதல் ரணில் குழுவின் கைவரிசையே என்று கரு தரப்பினர் கருதுவதாகத் தெரியவருகின்றது.

(ங-சி)

## கம்பஹா சம்பவம் விசேட பொலிஸ்குழு

கொழும்பு, ஜன.11

கரு ஜயசூரிய எம்.பியின் கம்பஹா அலுவலகத்தின் கடவை (கேட்) உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுவொன்று பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அத்தியட்சகர் அஜித் ரோஹண நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அலுவலகத்தை தீ வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக முழுமையான விசாரணைகள் முடிவடைந்த பின்னரே கூறமுடியும் என்றும், அலுவலகக் கடவை உடைக்கப்பட்டது தொடர்பாகவே தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

(ங-சி)

### மரண அறிவித்தல்

**கனகரத்தினம் யோகராசா (இந்திரன்)**



கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் யோகராசா நேற்று (10.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், பிரதாபன், பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2012) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விலாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவசாய வீதி,
தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### மரண அறிவித்தல்

**திருமதி பிலோமினா மகாதேவன்**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா மகாதேவன் (09.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சி.மகாதேவனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், இலங்காதரனின் (பொறியியலாளர்-Ph.d, USA) பாசமிகு தாயும், லில்லி யோசபின், மரியநாயகம், சந்தானசாமி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயக்குமார், புனிதம், சந்திரா (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யொஸ்மிலா இலங்காதரன் (USA), பாரதி (UK), Dr.அனோமிலன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), சுகந்தன் (UK), பியோமிலன் (UK) ஆகியோரின் அன்பு மாமியும், அமேகரனின் (USA) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.01.2012) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிந்தபுலம்,
இளவாலை.

தகவல்:
சி.மகாதேவன் (கணவர்)

எலக்ரிக் மோட்டார் சைக்கிள்
மோட்டோ லங்கா நிறுவனத்தின்
ரூபா. 10,000 விலைக்குறைப்பு
வாகன வரி காப்புறுதிப் பத்திரம் தேவையில்லை
சாரதி அனுமதிப் பத்திரம் தேவையில்லை
பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்.
மோட்டருக்கு 2 வருட உத்தரவாதம்.
இச்சலுகை 15 ஆம் திகதி வரை மட்டுமே


ELECTRIC BIKES
யப்பான் ரேடர்ஸ்
(முட்டாஸ்கடைச் சந்தி அருகில்)
10 – 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பணம்
Hot line: 0770868079

பொருளியற் கல்லூரி
யாழ்நகர், இணுவில்
பாரதி-சித்தங்கேணி
அரசியல் - எஸ்.கோகுலன்
A/L 2014 Day Class
ஆரம்பமாகிவிட்டன.
மாணவர் கவனத்திற்கு,
❖ மூன்று நிறுவனத்திலும், மாதம் 32 மணித்தியால வகுப்புக்கள்
❖ மீட்டல் வகுப்புக்கள், வினாவிடை வகுப்புக்கள், தொடர் பரீட்சைகள்
❖ போலியான நிறுவனங்கள் இயங்குவதனால் நாவலர் வீதி "பொருளியற் கல்லூரி" என்றும் ஆசிரியரின் பெயரினையும் கேட்டு வாருங்கள். நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

BIT Project
Call : 0776577359
Mr R.Kumaran-B.Sc.
ஆரம்பம்
VB.NET
SQL Server
MIS
10 years of experience in IT
150 m

IIS CITY CAMPUS
வன்னி மாணவர்களுக்கான விஷேட கருத்தரங்கும் கலந்துரையாடலும்
கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் கல்வி சாம்ராஜ்யமாக விளங்கும் IIS CITY CAMPUS உயர் கல்வி நிறுவனம் "உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்" என்னும் கருப்பொருளில் வன்னி மாணவர்களின் நலன் கருதி உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி , வேலை வாய்ப்புக்கள் தொடர்பான கருத்தரங்கும் கலந்துரையாடல் ஒன்றினையும் ஏற்பாடு செய்துள்ளது.
இக்கலந்துரையாடலில் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியோர் ,பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப்பெற்றோர், வெளிநாடு செல்வதற்காக காத்திருப்போர் அனைவரும் பங்கு பற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்
இடம் : கிளிநொச்சி மத்திய கல்லூரி
காலம் : 11.01.2012 (புதன் கிழமை)
நேரம் : மாலை 3.00 மணி
மேலதிக விபரங்களுக்கு :- 0779688006

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2011 December G.C.E O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I 11.01.2012 9.00 a.m
Batch II 11.01.2012 11.00 a.m
Batch III 14.01.2012 3.00 p.m.
Batch IV 14.01.2012 4.00 p.m.
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] கல்லூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.